பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

பாலக்கோடு – 636 808.

தமிழ்த் துறை


| | | |
|---|---|---|
| துறை | : | தமிழ் |
| வகுப்பு | : | இளங்கலை இரண்டாமாண்டு |
| தாள் குறியீடு | : | 19UTA SB02 |
| தாள் | : | மனித உரிமைகள் |

## அலகு – ஒன்று

- ❖ மனித உரிமைகள் பொருள் விளக்கம்.
- ❖ உரிமைகளின் தன்மை.
- ❖ மனித உரிமை கோட்பாடுகள்.
- ❖ மனித உரிமைகளின் வகைகள்.

# 1

## மனித உரிமைகள் - பொருள் விளக்கம்

### (Human Rights - Definition)

**முன்னுரை**

மனிதன் மனிதனாக நடக்க மனிதன் மனிதனுக்காக உருவாக்கிக் கொண்ட விதிமுறைகளே மனித உரிமைகள். மனிதன் சுதந்திரமாக வாழ்ந்து தன்னுடைய நல்வாழ்வுக்கான தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் வழிவகைகளே மனித உரிமைகள். பிறப்பு, காலம், சூழல், இடம், தேவை ஆகிய நோக்குகளில் மனிதனை இயங்கச் செய்யும் அடிப்படைக் கூறுகளே மனித உரிமைகள். சுதந்திரமாகப் பிறந்த மனிதன், சமூகம், சமயம், அரசியல் போன்றவற்றால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளான். அவனுடைய இயல்பான, இயற்கையான உரிமைகள் தடை செய்யப்பட்டு அவனது ஆளுமைப் பண்புகள் திசை திருப்பப்படுகின்றன. எனவே தன்னைப் பாதுகாத்து தன்னுடைய வாழ்க்கை மற்றும் சமுதாயக் கடமைகளை ஆற்ற யாராலும், எப்போதும், எதற்காகவும் கட்டுப்படுத்தப்பட முடியாத உரிமைகள் அவனுக்குத் தேவை. மனிதனுக்கு உண்ணவும், உறங்கவும், சிரிக்கவும், அழவும் உரிமைகளை இயற்கை தந்துள்ளது. ஆனால் காலப்போக்கில் சமூக உணர்வு காரணமாகக் கூடி வாழத் தலைப்பட்டான். அதனால் தன்னுடைய இயற்கை உரிமைகளை தன்னையொத்த பிற மனிதர்களின் நலனுக்காக விட்டுத்தர

வேண்டியவனானான். அதனால் அவனுடைய இயற்கை உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டன. அதைப்போன்றே சமூகத்தில் அரசியல் பண்புகள் மேலோங்கியபோது விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் போன்ற தன்மைகள் நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டன. அப்போது "சுதந்திரம் எனது பிறப்புரிமை அதனை அடைந்தே தீருவேன்" என்ற வேட்கையால் உந்தப்பட்டான். அத்தகைய உந்துதல்கள் அரசியல் உரிமைகளுக்கு அடிப்படையாயின. அதைப்போன்று முதலாளித்துவம், பொதுவுடைமை, சமதர்மம் போன்ற கோட்பாடுகள் வலுப்பெற்றன. அவை பொருளாதாரச் சுரண்டல்கள், ஏழை, பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு, வேலையின்மை போன்ற சமூகச் சிக்கல்களுக்கு வழிவகுத்தன. அத்தகைய இடர்களிலிருந்து தம்மைக் காத்துக் கொண்டு எண்ணியவற்றை எண்ணியவாறு பெற்று இனிய, மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ மனித உரிமைகள் தேவைப்படுகின்றன. எனவே சமூக உரிமை, அரசியல் உரிமை, பொருளாதார உரிமை, வாழ்வியல் உரிமை, பண்பாட்டு உரிமை ஆகியன விரிவான மனித உரிமைகளாக இன்று பகுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் மனித உரிமைகளைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு முன் அவற்றின் தோற்றத்தையும், வளர்ச்சியையும் தெரிந்து கொள்ளல் தலையாயதாகும்.

### வரலாற்றுப் பணிகள்

பண்டைய காலத்தில் மனித உரிமைகளைப் பற்றி விளக்கமாக மனிதன் உணர்ந்திருக்கவில்லை. அவன் எவ்விதமான கட்டுப்பாடுமின்றித் தன்னிச்சையான செயல்களைச் செய்தான். இயற்கை நல்கிய உரிமைகளை அவன் சமய நோக்கில் கடவுளுக்குப் பயந்து மேற்கொண்டிருந்தான். அவை தர்மம், நீதி என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன. அறநெறி சார்ந்த வாழ்க்கைக்கு அடித்தளமாயிருந்தன. வன்முறை, ஹிம்சை (தொல்லை) போன்றவற்றின் தாக்கங்களில்லாத சமூகத்தை உருவாக்க சமூக உரிமைகள் தேவையாயின. கிரேக்க அறிஞர் சாக்ரடீஸ், அவருடைய மாணவர்

பிளேட்டோ அவருடைய மாணவர் அரிஸ்டாடில் போன்றோர் காரணகாரிய நோக்கில் மனிதனின் உரிமைகள் மனிதனுக்காக ஏற்பட்ட சட்டங்களைப் பற்றிக் கூறினர். இந்தியாவில் அர்த்தசாஸ்திரம் என்ற நூலின் ஆசிரியரான கௌடில்யர் என்ற கணக்கியர் கடமை நோக்கில் உரிமைகளை மறைமுகமாக உணர்த்தினார். புனித பைபிள், புனித குரான் ஆகிய சமய சாஸ்திரங்கள் மனித உரிமைகளைச் சுட்டிக்காட்டுகின்றன. அன்பு, சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய நோக்குகளில் நீதியடிப்படையில் ரோமானியச் சட்டங்கள் எழுந்து உரிமைகளையும் கடமைகளையும் வெளியிட்டன. ஹாப்ஸ், லாக், ரூஸோ ஆகியோர் சமுதாயத்தில் மனிதர்களுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட இயற்கைநிலை மற்றும் உருவாக்கப்பட்ட ஒப்பந்தங்களின் வாயிலாக உரிமைகளைச் சுட்டிக் காட்டினர். இங்கிலாந்து நாட்டில் நிலவும் சட்டத்தின் ஆட்சி, பிரான்சு நாட்டின் ஆட்சித்துறைச் சட்டம் ஆகியன உரிமைகள் பற்றிக் கூறுபவை. மகாத்மா காந்தியடிகள், மார்ட்டின் லூதர்கிங், நெல்சன் மண்டேலா ஆகியோர் பின்தங்கிய, ஒதுக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்காக போராடினர். மியான்மர் நாட்டில் ஆங்கான்சூகி மனித உரிமைகளைப் பற்றி வலியுறுத்தினார்.

பொருளியல், அரசியல், சமூக, பண்பாட்டு அடிப்படைகளில் மனித உரிமைகள் விரிவாக்கம் பெற்று உலக சகோதரத்துவம் என்ற நோக்கில் மனித உரிமைகள் தத்துவம் உலகளாவிய கோட்பாடாயிற்று. 1946-இல் ஐக்கிய நாட்டவையானது திருமதி. எலியினார் ரூஸ்வெல்ட் தலைமையில் மனித உரிமைகள் ஆணையத்தை உருவாக்கியது. பன்னாட்டு உரிமை, மனித உரிமைகள் பற்றிய ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளல் போன்ற உரிமைகளைச் சுட்டிக் காட்டியது. 1948-இல் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் "உலக மக்கள் அனைவருக்கும் சுதந்திரம், நீதி, அமைதி ஆகியவற்றை நல்க அடிப்படையாக விளங்குவது அவர்களிடமிருந்து விலக்க முடியாத உரிமைகளே" என்ற தொடக்க உரையுடன் ஒரு முகவுரை மற்றும்

30 பிரிவுகளுடன் வெளியிடப்பட்டது. 1977-இல் 18 பேர்களடங்கி மனித உரிமைகள் குழு உருவாயிற்று. இன்று பன்னாட்டளவி நிறவெறிக்கு எதிரான குழு, சிறுபான்மையின் பாதுகாப்புக் கு சித்திரவதை தடுப்புக் குழு போன்ற சிறப்பு அமைப்புகள் மனி உரிமைகளை பலநிலைகளிலும் பாதுகாக்க அமைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவைப் பொறுத்தவரை 1950-இன் இந்தி அரசியலமைப்புச் சட்டம் இந்திய குடிமக்களின் அடிப்படை உரிமைகள் பற்றிக் குறிப்பிட்டது. 1993-இல் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்ட கொண்டு வரப்பட்டு 1993 செப்டம்பர் 23 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்திய அரசியலமைப்பின் மூன்றாம் அத்தியாயத்தின் 12ஆம் விதி முதல் 35 முடிய உள்ள 14 பிரிவுகள் அடிப்படை உரிமைகளைச் சுட்டிக்காட்டுகின்றன.

மேலே குறிப்பிட்டுள்ளவற்றைப் பற்றித் தனித்தனியாகப் பின்வரும் பகுதிகளில் காணலாம். ஆனால் அதற்குமுன் மனித உரிமைகள் என்றால் என்னவென்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**பொருள் விளக்கம்**

மனித உரிமைகள் என்பன தனி மனிதனின் உரிமைகளாகும். சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டவை. பலதரப்பட்ட கட்டுப்பாடுகள், சுரண்டல்கள் ஆகியவற்றிலிருந்து ஒருவரைக் காத்துக்கொள்ள உதவுபவை உரிமைகளாகும். தமது தேவைகளை பிறருக்கு எவ்விதமான இன்னல்களும் இல்லாமல் நிறைவு செய்யத் துணை நிற்பன உரிமைகள். கருத்துக் கூறுதல், பேச்சுரிமை, எழுத்துரிமை, சொத்துரிமை என பலதரப்பட்ட உரிமைகள் மனிதனுக்கு உரியவையாக உள்ளன. எனவே விருப்பங்கள், எண்ணங்கள் என்ற அடிப்படைகளுடன் மனிதன் மாண்புற வாழ உரிமைகள் முக்கியமானவை. மனித உரிமைகள் காலம், இடம், தேவை ஆகியவற்றிற்கேற்ப மாறக்கூடியவை. இயற்கையாகப்

பெறப்பட்டவை. மாற்றியமைக்க முடியாதவை. அவற்றை உள்ளார்ந்த மனிதப் பண்புகள் எனக் கொள்ளலாம். அனைத்து மக்களும் அனுபவிக்க வேண்டியவை உரிமைகள். ஒரு சிலர் மட்டும் அதனைப் பெறுதல் என்பது சமூகச் சிக்கலுக்கு வழிகோலும். உரிமைகள் சமூகத்தின் உறுப்பான ஒவ்வொரு மனிதனாலும் ஏற்கப்பட்டு சமூகம், சமூகத்தை நடத்திச் செல்லும் அரசு ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட்டவை. சுதந்திரமாக, மதிப்புடன், தேவை நிறைவுகளுடன் மனிதன் வாழ வகை செய்யும் ஒரு நெறிமுறைதான் உரிமைகள்.

இனி உரிமைகளை எவ்வாறு பல அறிஞர்கள் விளக்குகின்றனர் என்பதைக் காணலாம். மனிதனாகப் பிறந்த அனைவருக்கும் உரிமைகள் பொதுவானவை. அதன் பொருளை உணர்ந்தால் அதன் பண்புகளையும் உணரலாம்.

போசாங்கே, உரிமைகளை, சமுதாயத்தால் ஏற்கப்பட்டு நாடால் அல்லது அரசால் நடைமுறைப்படுத்தப்பட்டவை எனப் பகர்ந்துள்ளார்.

ஆலன், உரிமைகளை சட்ட பூர்வமாக அங்கீகாரம் தரப்பட்டுள்ள மனிதன் நலன்களை எட்டுவதற்காகத் தரப்பட்ட அதிகாரம் என வரையறுக்கின்றார்.

எர்னெஸ்ட் பார்கர், ஒவ்வொருவரும் பெற்றுள்ள உரிமைகள் அனைத்தும் சட்டத்தால் பாதுகாக்கப்பட்டவை என்கிறார்.

ஹாலண்ட், உரிமைதனை, ஒரு அரசின் ஒப்புதல், உதவியுடன் பிறர் மீது கட்டுப்பாடுகளை விதிக்க மனிதர்களிடமுள்ள பண்பு என்று விவரிக்கின்றார்.

ஹோல்ம்ஸ், உரிமை என்பது சில இயல்பான அதிகாரங்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தரப்பட்ட அனுமதி எனவும், சில வேளைகளில் ஒருவர் குறிப்பிட்ட செயலைச் செய்வதற்கான பாதுகாப்பு எனவும் இழப்பிற்கான நிவாரணமாக விளங்குவது எனவும் கூறுகிறார்.

**சால்மண்ட்** என்பவர் அதைச் சட்டம் மூலம் பாதுகாக்கப்பட வேண்டிய நலன் என்றும், அதைப் போற்றிக் காக்க வேண்டியது மனிதனின் கடமை என்றும் கூறுகின்றார்.

**ஹாப்ஹவுஸ்**, உரிமைகள் என்பன நாம் மற்றவர்களிடமிருந்து எதை எதிர்ப்பார்க்கிறோமோ அதையே மற்றவர்கள் நம்மிடம் எதிர்பார்க்கும் தேவைகள் என்று விவரிக்கின்றார்.

**டாக் ஹேமர் ஷீல்ட்**, மனித உரிமைத் தத்துவம் என்பது அச்சத்திலிருந்து விடுபடுதலே என்று வர்ணிக்கின்றார்.

**பல்கிவாலா**, சுதந்திரம் என்பதே மனித உரிமைகள் என்று கூறுகின்றார்.

**சைரஸ்வான்** என்பார் மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம், கல்வி, ஆகியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளே உரிமை என்கிறார்.

**எட்மண்ட்பர்க்**, இறைவனின் வரையறைகளுக்கொப்ப அரசு, சட்டத்தின் மூலம் மனிதர்களின் நலனுக்காக உருவாக்கப்பட்ட வரையறைகளே உரிமை எனவும் அதன் மூலம் மக்கள் நியாயமான தேவைகளைப் பெற்றுக் கொள்கின்றனர் எனவும் உரைக்கின்றார்.

**ஜெர்மி பென்தாம்** என்ற பயனீட்டுவாதி சுதந்திரமாக வாழ இயற்கை நல்கியுள்ள உத்தரவாதங்களே உரிமைகள் என்கிறார். அவை சட்டபூர்வமானவையாகும்.

**ஜான் ஸ்டுவர்ட் மில்** என்னும் பொருளியல்வாதி, தனி மனிதர்களின் மகிழ்வுக்காக நிரந்தரமாக மேற்கொள்ளப்படும் பொருளாதார அரசியல் செயல்களே உரிமைகள் என்கிறார்.

**லாஸ்கி** என்பவர், சட்டபூர்வமான உரிமைகள் என்பவை அரசானது மக்களின் நல்வாழ்வுக்காகவும், அத்தியாவசியத் தேவைகளுக்காகவும் அளிக்கப்படுபவை என்கிறார்.

மேலே கூறப்பட்டுள்ளவற்றின் வாயிலாக, மனிதனின் வாழ்க்கை தங்குதடையின்றி நடைபெற சமூகம் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட செயல்களே உரிமைகள் என அறியலாம். அது மக்களின் பாதுகாப்புக் கேடயம் என்றாலும் மிகையாகாது. அதனால்தான் 1993-ஆம் ஆண்டின் வியன்னா பிரகடனம், "மனிதனின் மதிப்பு, கண்ணியம் ஆகியவற்றின் வெளிப்பாடுகளே உரிமைகள்" எனப் பகர்ந்துள்ளது. இதனை டி.டி. பாசு என்பவர் சுதந்திரமாகப் பிறந்த மக்கள் அனைவருக்கும் முழுமையாகச் செயல்பட உதவுவனவே மனித உரிமைகள் என்கிறார். மனிதனின் தேவைகளை அங்கீகரிக்கையில் அவை மனிதனின் செயல்கள் மற்றும் கடமைகளை ஆற்றத் துணைபுரிகின்றன. இன்று மனித உரிமைகள் விரிவாக்கம் பெற்றுள்ளன. 1978-இல் அமெரிக்கா, உரிமைகளைப் பற்றிக் கூறுகையில், தன்னை முறையற்ற செயல்கள் மற்றும் தண்டனைகளிலிருந்து பாதுகாத்துக் கொள்வது மனித உரிமை எனக் குறிப்பிட்டுள்ளது. எனவே மனித உரிமைகள் மனிதனின் ஆளுமை மற்றும் மகிழ்ச்சிக்கு உட்பட்டவை. மனிதகுல மேம்பாட்டுக்கு மனித உரிமைகள் முக்கியமானவை. உரிமைகள், மனித வாழ்க்கை நடைமுறைகளில் சிறப்பிடம் பெற்றுள்ளன. சமுதாயத்துக்கும் அரசுக்கும் உரிமைகளைப் பாதுகாப்பது அடிப்படைக் கடமையாகும்.

- - -

# 2

## மனித உரிமைகள் - இயல்பும் தன்மைகளும்

### (Human Rights - Nature Scope)

மனிதன் மனிதனாக வாழ இயற்கை, சமுதாயம், அரசு, சட்டங்கள் ஆகியவை நல்கியுள்ள சிறப்பான உரிமைகளே மனித உரிமைகள். தனிமனிதன் மனிதனாக அன்றி விலங்காகச் செயல்பட்ட நிலையில், சுதந்திரமாக, எவ்விதமான கட்டுப்பாடும் இல்லாமல் வாழ்ந்தான். அவன் உரிமைகளைப் பற்றிச் சிந்திக்கவில்லை. கால ஓட்டத்தில் குழு, சமுதாய, அரசியல், பொருளியல் மற்றும் பண்பாட்டு உணர்வுகள் படிப்படியாக மேலோங்கிய போது மனிதன் கட்டுபாடற்ற சுதந்திரமான வாழ்க்கையை விரும்பினான். அத்தகைய செயல்கள் உரிமைகள் எனப்பட்டன. அவை தனிமனிதன் மற்றும் சமூகம் வெளியிடும் அறிவிப்புகள் மற்றும் கோரிக்கைகள் ஆகும். உரிமைகள் அனைவருக்கும் பொதுவானவை. உரிமைகள் சமுதாயம், அரசு, சட்டம் ஆகியவற்றால் அங்கீகரிக்கப்பட வேண்டும். உரிமைகளால் மட்டுமே மனிதன் தன்னுடைய முறையான, பிறரைப் பாதிக்காத, அனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தேவைகளை நிறைவு செய்து கொள்கிறான். உரிமைகள் மதிப்பும், மாண்பும் உடையவையாதலால் சமுதாய மற்றும் தனிநபர்களின் மேம்பாட்டிற்கான அடிப்படைகளாக அமைகின்றன. பொதுவானவையாக அவை இல்லாவிடில் அவற்றை சலுகைகள் எனலாம்.

சமூகப் பண்பாட்டு வளர்ச்சியால், மனிதன் உலக சமுதாயத்தின் உறுப்பு என்ற நிலையை எட்டுகையில் அவன் பொதுநல நோக்கில் உரிமைகளைப் பகிர்ந்து கொள்கிறான். இன்றைய நிலையில் தனி

மனிதனின் தன்மைகள், அவனுடைய பண்புகள், சமூக, பொருளாதார, அரசியல் நிலைகளால் மட்டுமல்லாமல் அவனுடைய ஆளுமைப் பண்பு மற்றும் உரிமைகள் மூலம் அளவிடப்படுகின்றன. மனித ஏக்கம் மறைந்து மனிதநேயப் பண்புகள் மலர அவனுடைய உரிமைகள் போற்றிக் காக்கப்பட வேண்டும். தனிமனிதர்கள் சட்டத்தின் வாயிலாகத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள வகை செய்வதே ஒரு உரிமை. ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னுடைய புகழ், பெருமை, குடும்பம் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்ள பயன்படுவது சமூகமும் அரசும் அவனுக்களித்துள்ள உரிமைகளாகும். தனிமனிதன் தன்னையொத்த பிற மனிதர்களுடன் எவ்வித வேறுபாடும் காட்டாமல் சகிப்புத் தன்மையுடன் செயல்பட்டால் அம்மனிதன் தன்னுடைய உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள இயலும். இனம், மதம், மொழி, நிறம் போன்றவற்றின் மூலம் ஒருசாரார் மற்றொரு சாராரை ஒடுக்குவது அல்லது ஒதுக்குவது நீக்கப்பட்டு உரிமைகள் அனைவருக்கும் பொதுவானவையாக ஆக்கப்பட வேண்டும். வார்த்தைகளாலோ, எழுத்துக்களாலோ ஒருவர் மற்றவரைப் பழித்துரைப்பதும் சிறுமைப்படுத்துவதும் சட்டபூர்வமாகத் தடுக்கப்பட வேண்டிய உரிமைகள் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு. மனிதர்களிடையே அன்பைப் பகிர்ந்து கொள்ள உதவுவதே உரிமைகளாகும். இந்திய அரசியலமைப்பின்படி ஒரு அரசு, தன்னுடைய நாட்டு மக்களை சமயம், இனம், பால், நிறம், சாதி, பிறப்பிடம் ஆகிய நோக்குகளில் வேறுபடுத்திப் பார்க்காமல் எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம் என்ற நோக்கில் காண்பது உரிமை சார்புடையதாகும். இத்தகைய உரிமைகளை உலக மக்கள் வேறுபாடின்றிப் பயன்படுத்த வகை செய்வது, ஐக்கிய நாட்டவையின் அனைத்து உறுப்பு நாடுகளின் கடமையாகும்.

உயிர் வாழ்தல் என்பது அனைத்து மனிதர்களின் அடிப்படையான, இயல்பான உரிமை. இதனை சட்டங்கள் பரதுகாத்தல் வேண்டும். உலகின் எப்பகுதியில் இனப்படுகொலை நிகழ்ந்தாலும் அது மனித உரிமை மீறலாகும். எனவே அதை நீக்கும் உரிமை அரசுக்கு உண்டு. தனிமனிதன் தன்னை எவ்விதமான சுரண்டல்களிடமிருந்தும் பாதுகாத்துக்கொள்ளும் உரிமை உடையவன். பொருளியல் நோக்கில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை அவனுக்கு உண்டு.

அறிவாற்றல் பெருக்கத்தால் பொருளாதாரத்தைப் பெருக்கிக்கொ உரிமையும் உண்டு. ஐக்கிய நாட்டவையின் பூர்வீகக் குடிகளுக் உரிமைப் பிரகடனப்படி பூர்வீகக் குடிகளை அவர்கள் வாழுமிடத்தில் வற்புறுத்தி இடம் பெயரச் சொல்லும் உரிமை யாருக்கும் இல 1950ஆம் ஆண்டின் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு ஈ ஆனது ஆண் பெண் இருபாலாருக்கும் ஒத்த வேலைக்கு ஊதியம் உண்டு என்ற உரிமையை நல்கியுள்ளது. இதன் மூ உரிமைகள் பகிரப்பட்டவை என்பது புலனாகின்றது. அத்துடன் ஆ பெண் என்ற இருபாலருக்கும் சம உரிமையுண்டு என்பதும் தெளிவு.

இந்தியக் குடிமக்கள் தமது மொழி, சமயம், எழுத்து, கலாச்சா ஆகியவற்றைப் பாதுகாக்கும் உரிமையுடையவர்கள். இந் அரசியலமைப்புச் சட்டப்படி இந்தியர்களனைவருக்கும் சுதந்திரமாக சிந்திக்க, பேச, அமைதியாகக் கூட, சங்கங்கள் அமைக்க, இந்திய பகுதிக்குள் தங்கு தடையின்றி நடமாட, குடியிருக்க, குடியமர, விரும்பி தொழிலைச் செய்ய உரிமை உண்டு. குழந்தைக்கு ஓய்வெடுக்கவும் விளையாட்டில் ஈடுபடவும் உரிமையுண்டு எனவும் கலை மற்றும் கலாச்சா வாழ்வில் சுதந்திரமாக ஈடுபட உரிமையுண்டு என்பதையும் 1998-இல் வெளியான ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மீதான நடவடிக்கையின் பிரிவு 31.1 (இ) வலியுறுத்துகின்றது. அதே நேரம் மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் தராத சமூகமும் அரசும் மக்களாட்சிப் பகுப்புகள் என்று ஒப்புக்கொள்ள முடியாதவை. இந்த நோக்கில் ஆசிய மனித உரிமைகள் சாசனத்தின் (1998) பிரிவு 5:2 ஆனது 'கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடவும், சிறுபான்மையினர் கருத்துக்கள் மதிக்கப்படவும் உரிமையுள்ள பன்மைச் சமூகத்தில் தான் மனித உரிமைகள் மலரும்' என்று குறிப்பிடுகின்றது.

மனித உரிமைகள் பரந்து விரிந்து பகிரப்பட்ட தன்மைகளைக் கொண்டவை. வாழ்வியல், அரசியல், பொருளியல், சமூகவியல் சார்புடையவை. எவ்விதமான மாறுபாடுகளும் இல்லாமல் வேறுபாடுகள் காட்டாமல் மனித குலம் முழுமைக்கும் பொருந்துபவை. மனித உரிமைகள் இயற்கை நல்கிய இயற்கையான உரிமைகளாகும். மனித உரிமைகள் மீறப்பட்டால் அவற்றைப் பாதுகாத்துக் கொள்

நீதிமன்றங்களும் உள்ளன. மனிதர்கள் சட்டத்தின் வாயிலாக தமது உரிமை மீறல்களுக்கான நிவாரணத்தைத் தேடிக்கொள்ள இன்று வாய்ப்புகள் இருக்கின்றன. மனித உரிமைகள் கேட்டுப் பெறுவதோ, மாற்றித் தருவதோ அல்லாமல் இயல்பானவை, இயற்கையானவை, சட்ட பாதுகாப்புடையவை, தனிமனிதர்களால் போற்றிப் பேணப்பட வேண்டியவை. யாருக்கும் எவ்வித தீங்கையும் உரிமைகள் ஏற்படுத்துவதில்லையாதலால் நேர்மையானவை மற்றும் நியாயமானவை. உரிமைகள் சட்டத்தால் வகைப்படுத்தப்பட்டு மக்களுக்குத் தரப்பட்டு நீதிமன்றங்களால் பாதுகாக்கப்படுகின்றன.

மனித உரிமைகள் காலத்தின் தேவைகளுக்கேற்ப மாறக் கூடியவை. மனிதகுலம் மாண்புடன் வாழ்வதற்கான வழிமுறைகள் பெருகும் போது உரிமைகளும் விரிவடைகின்றன. சமுதாயம் மற்றும் சமுதாயக் கோட்பாடுகள் பெருகும் போது அச்சமுதாயத்தின் உறுப்பான மனிதனின் உரிமைகளும் அதற்கேற்ப மாறுகின்றன. மனித உரிமைகளானவை, மனித நேயத்தையும், ஒழுக்கத்தையும் சார்ந்தவை. சட்டத்தால் பாதுகாக்கப்படுபவை. சமூக நலனுக்காக அதன் உறுப்பான மனிதர்களின் நன்மையைக் கருதி உருவான உரிமைகள், மனிதமேம்பாடு என்ற பொது நோக்குடையவை. மனிதனிடமிருந்து இன்று பிரிக்க முடியாத நிலையை எட்டியுள்ளன.

உலக சகோதரத்துவம், உலகளாவிய நிலைக்கான முக்கியத்துவம் ஆகிய பண்புகளால் மனித உரிமைகள் வலுப்பெற்றுள்ளன. மனித உரிமைகள் தனித்தன்மை பெற்ற மேம்பாடுடைய அம்சமாக சிறப்புப் பெற்றுள்ளன. தனிப்பட்ட நாடுகளின் அரசுகளும், ஐக்கிய நாட்டவையும், பிராந்திய அமைப்புகளும் இன்று மனித உரிமைகளைப் பேணிப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகின்றன. அதற்குக் காரணம் மனிதாபிமான நோக்கிலான மனித உரிமைகள் மனித குலத்தின் அடிப்படையாகவும் பாதுகாப்பாகவும் விளங்குவதேயாகும். அரசியல் பண்புகளும், பொருளாதாரப் பண்புகளும் முன்னணி நிலையில் உள்ளதால் மனித உரிமைகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

- - -

# 3

# மனித உரிமைக் கோட்பாடுகள்

## (Theories of Human Rights)

ஒவ்வொரு செயலும் ஒரு தத்துவம் மற்றும் கோட்பாட்டினைக் கொண்டிருக்கும். உரிமைகள் செயல் இல்லையென்றாலும் அவையும் இவற்றைக் கொண்டுள்ளன. மனிதன் பாதுகாப்புடன் மகிழ்ச்சியாக வாழ வேண்டுமெனில் அவனுக்கென சில உரிமைகள் வேண்டும். அவை சமூக அங்கீகாரம் பெற்றவையாயிருத்தல் வேண்டும். உரிமைகள் எக்காரணங்களால் வலுப்பெற்றுள்ளன என்பது அதன் தத்துவம் சார்ந்தவை ஆகும். மனித உரிமைகள் மனிதன் தோன்றிய காலந்தொட்டு அவனுடன் பிறந்தவை. காலப்போக்கில் மனித இனம் பெருகி பல வித மாற்றங்களை அடைந்த போது உரிமைகள் திட்டவட்டமான நோக்குகளுடன் மலரலாயின. அவற்றிற்கென அடிப்படைக் கோட்பாடுகளும் தத்துவங்களும் உருவாயின. எனவே அவற்றைப் பற்றிக் காண்போம்.

### 1. இயற்கை உரிமைக் கோட்பாடு (Theory of Natural Rights)

இயற்கையின் உன்னதமான மற்றும் அற்புதப் படைப்பான மனிதன் இயல்பாகவே எண்ணற்ற ஆற்றல்களையும், உந்து சக்திகளையும், நடத்தை முறைகளையும் கொண்டவன். அதனை ஆதாரமாகக் கொண்டு எழுந்ததுதான் இயற்கை உரிமைக் கோட்பாடு என்னும் வரலாற்றுக் கோட்பாடாகும். இந்த எளிமையான கோட்பாடு,

உரிமைகள் இயற்கையாகவே மனிதனுடன் இணைந்தவை என்கிறது. இயற்கை எவ்வாறு தன்னிச்சையாக மாறுபட்ட பல்வேறு தன்மைகளுடன் இயங்குகின்றதோ அதைப்போல உரிமைகளும் மனிதத்தன்மைகளுடன் இணைந்தவை. சிசரோ என்பவர் கூறியவாறு என்றும் அழியாத தொடர்நிலை உடைய மனித இனத்தின் அனைத்துக் காலங்களுக்கும் பொருந்தவல்ல உரிமைகள் கடவுளால் படைக்கப்பட்டவை. இயற்கையாக உள்ள உரிமைகள் காலத்தின் தேவைக்கேற்ப மனிதர்கள் மற்றும் அவர்களால் உருவாக்கப்பட்ட அமைப்புகளால் மாற்றங்களுக்கும் விரிநிலைக்கும் உட்படுத்தப்பட்டன. மனிதனின் கட்டுப்பாடற்ற சுதந்திரமான வாழ்க்கைக்கு இயற்கை நல்கிய அவை தர்மம், நீதி, நியாயம் போன்ற நேர்மறைப் பண்புகளின் வெளிப்பாடுகளாகும். இயற்கையானது அழிவற்றதாய் அனைத்து நாடுகளுக்கும் பொருந்தக் கூடியதாய் உள்ளதைப் போல் உரிமைகளும் அனைத்து மனிதர்களுக்கும் இயற்கை நல்கிய பேறாகும். உரிமைகளை இயற்கை உரிமை எனப் பகர்வது இக்கோட்பாடு.

மனிதன் குழுவாக இணைந்து தலைவனுக்குக் கட்டுப்பட்டு வாழத் தலைப்பட்டான். அத்தலைவன் தன்னுடைய குடிமக்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கும் கடமையைக் கொண்டிருந்தான். இக்கோட்பாட்டின்படி மனிதனின் பேச்சுரிமை, வாழும் உரிமை, செயலாற்றும் உரிமை போன்றவை இயற்கையாக அவன் பெற்ற கட்டுப்பாடற்ற பண்புகளாகும். பண்டைய கிரேக்கர்களும் ரோமானியர்களும் இயற்கை உரிமைகளின் பின்னணியில் தமது அரசியல் மற்றும் சமூகச் சட்டங்களை உருவாக்கினர். இயற்கைச் சட்டங்களை ஆதாரமாகக் கொண்டே இடைக்காலத்தில் மகாசாசனம் (1215), தங்க அறிவிப்பு (1222), பொது உரிமைச் சட்டம் (1283), உரிமைச் சாசனம் (1688) போன்றவை எழுந்தன. தொடர்ந்து கோட்பாடு வலுப்பெற்றது. நடைமுறை விதிகளாக இருந்த அவை, மனிதனின் பகுத்தறிவுக்கு உட்பட்டு எழுந்தவை. மனித உரிமைகள் அனைத்தும் இயற்கையாக அவன் பெற்ற உரிமைகள் சார்ந்தவை என்றே தாமஸ்பெயின் சுட்டிக் காட்டினார்.

17-ஆம் நூற்றாண்டிலிருந்து ஹாப்ஸ், லாக், ரூஸோ, குரோஸே, பூபெண்டார்ப் போன்றோர் இக்கோட்பாட்டிற்கு வலுவூட்டினர். வர்ஜீனியா உரிமைகள் பிரகடனம், அமெரிக்க சுதந்திர பிரகடனம் (1776), 1789-இல் பிரான்சில் எழுந்த மனித உரிமைகள் பிரகடனம் போன்றவை இயற்கை உரிமைகளைச் சுட்டிக் காட்டின. அமெரிக்க விடுதலைப் போர், பிரெஞ்சுப் புரட்சி, சீனப் புரட்சி, ரஷ்யப் புரட்சி போன்ற வரலாற்றுத் திருப்பங்கள் இயற்கையாக மனிதன் கொண்டிருந்த இயற்கை உரிமைகளின் காரணமாகவே எழுந்தன. ஜான் ஸ்டூவர்ட்மில் (1806-1873) என்பவரும் இயற்கை உரிமைகளின்படியே மனிதன் தனது வாழ்க்கையை நடத்திச் செல்லுதலைச் சுட்டிக்காட்டினார். இந்நிலையில் பின்னர் எழுந்த சட்டம் சார்ந்த உரிமைகள், ஏற்கனவே இருந்த இயற்கை உரிமைகளை ஆதாரமாகக் கொண்டு எழுந்தவை என்பதை மறுக்க முடியாது. தனிமனிதனைவிட சமுதாயம், சமுதாய நலன் மற்றும் மேம்பாடே முக்கியமானவை என்ற எண்ணம் மனிதனின் இயற்கைச் செயல்பாடுகளைப் பின்னணியாகக் கொண்டவை.

மனித இனத்தின் வளர்ச்சிக்கான உரிமைகளின் அடிப்படைப் பண்புகளை இக்கோட்பாடு வலியுறுத்துவதால் முக்கியத்துவம் பெற்றுள்ளது. மனிதனின் மேம்பாடு அவன் பெற்றுள்ள இயற்கையான உரிமைகளைச் சார்ந்துள்ளதால் சிறப்புடையதாகின்றது. இயற்கை உரிமைகளைப் பாதுகாக்கவே மனிதர்கள் அரசு மூலமாக சட்டங்களையும், அமைப்புகள் மூலமாக விதிமுறைகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ளனர்.

## 2. உரிமைகள் பற்றிய சமூகநலக் கோட்பாடு:
(Social Welfare Theory of Rights)

ஹாப்ஸ் என்பவர் உரிமைகள் சமூக நலனுக்காக பிறர் நமக்காகவும் பிறருக்காக நாமும் விட்டுக் கொடுக்கும் பண்புகள் என விவரிக்கின்றார். ஜீன் ஜாக்ஸ் ரூசோ, ஜெர்மி பென்தாம், ஜான் ஸ்டூவர்ட் மில், லாஸ்கி போன்றோரும் பயன்பாட்டு அடிப்படையில் உரிமைகளைக் கொண்டுள்ளனர். உரிமைகள் பயன்படக்கூடியவையாய் இருந்தால்தான் சமூக நலன்கள் எட்டப்படும். இன்று மனிதன் தனியொரு உறுப்பாக சமுதாயத்தில் இணைந்துள்ளான். தம்முடைய விட்டுக்கொடுக்கும் பண்பு

மற்றும் சமூக நலன் காரணமாக உரிமைகளின் தன்மையை உணர்ந்ததால் உரிமைகள் பற்றிய சமூக நலக்கோட்பாடு உருப்பெற்றது. தனிமனிதர்களுக்குத் தரப்படும் உரிமைகள் அனைத்துமே சமூக நோக்கு சார்ந்தவை. சமூக நலன், மேம்பாடு ஆகியவற்றை அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிப் பெறலாமென்ற நிலை ஏற்பட்டது. உரிமைகள் பற்றிய சமூக நலக் கோட்பாடானது "பெரும்பான்மையினரின் பெருமகிழ்ச்சி" என்ற நோக்கில் உருவானது. அது சமூகத் தேவைகளைப் புரிந்து கொள்ளல், சமூக ஈடுபாட்டைப் பெருக்கிக் கொள்ளல் ஆகிய நோக்குகளில் உரிமைகளை நெறிப்படுத்திச் செயல்படுத்தும் தன்மையுடையது. சமூக நலனுக்காக உரிமைகளைத் தியாகம் செய்தல் என்ற பண்பை உள்ளடக்கியது. உரிமைகள், சமூக நலனுக்காக சமூகத்தால் பாதுகாக்கப்பட வேண்டியவையாயுள்ளன. மனிதாபிமானம், மனிதத்தன்மை ஆகியவற்றிற்கு மதிப்பளிக்கும் இந்த அறிவியல் காலத்தில் உரிமைகள் சமூக நலன் சார்ந்தவை என்பதை உணர வேண்டும்.

சமூக நலக் கோட்பாடு பெரும்பான்மையினரின் பெருமகிழ்வுக்காக உரிமைகளை வலியுறுத்தும்போது சில பிரிவினர் புறக்கணிக்கப்படலாம். சமுதாயத்தில் அப்படிப்பட்ட பிரிவினர் உரிமைகளை இக்கோட்பாட்டின்படி தியாகம் செய்ய வேண்டிய நிலை ஏற்படுகிறது. அதனால் இதை ஒரு முழுமை பெற்ற கோட்பாடு எனக் கொள்ள இயலாது. அதே நேரத்தில் மக்களாட்சி மதிப்புப் பெற்றுள்ள இக்காலத்தில் செல்வாக்கு பெற்ற தனி நபர்களே சமூக நலனுக்கு மக்களை வழிநடத்திச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. எனவே தனியொருவரின் பின்னால் சமுதாயம் செல்லும்போதும் தனிநபர் வணக்கம் வலுப்பெற்று உரிமைகள் பாதிப்புக்கு உள்ளாகின்றன.

### 3. உரிமைகளைப் பற்றிய சட்டம் சார்ந்த கோட்பாடு:

(Legal Theory of Rights)

தொன்று தொட்டு சட்டங்கள் மனிதன் மற்றும் அவனைச் சேர்ந்த சமூகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கான வழிகாட்டிகள் மற்றும் பாதுகாப்பு வழிகளாக உள்ளன. உரிமைகள் சட்டபூர்வமானவையாக ஆக்கப்பட்டு

அனைவருக்கும் பொருந்தக் கூடியனவாய் அமைய வேண்டுமென்பதை இக்கோட்பாடு வலியுறுத்துகின்றது. இயற்கைச் சட்டங்கள் இயல்பானவை. அந்த நோக்கில் மனிதன் இயல்பாகத் தமக்குள், எழுதப்படாத சட்டங்களை தொடக்கத்தில் கொண்டிருந்தான். காலப்போக்கில் சமயச் சட்டங்கள், ஒழுக்க நெறிகள், மன்னர்களால் இயற்றப்பட்ட சட்டங்கள், அரசுகளால் உருவாக்கப்பட்ட சட்டங்கள், நீதிமன்றங்களால் நிலைநாட்டப்பட்ட சட்டங்கள் ஆகியன நடைமுறைப்படுத்தப்பட்டன. இக்கோட்பாட்டில் "அரசு" என்ற அமைப்பு சட்டத்தைத் தோற்றுவிப்பதாக, பாதுகாப்பதாக, நடைமுறைப்படுத்துவதாக அமைந்துள்ளது. இக்கோட்பாட்டின்படி, உரிமைகள் அரசு சார்ந்தவையாயுள்ளன. ஏனெனில் அரசுதான் சட்டமியற்றுதல், நிர்வாகம் செய்தல், நீதியைக் காத்தல் ஆகிய அதிகாரங்களைக் கொண்டுள்ளது. உரிமைகள், அரசு என்னும் வட்டத்தில் அடைக்கப்படுகின்றன. இக்கோட்பாட்டின்படி உரிமைகள் அரசின் செயல்களைக் கட்டுப்படுத்துவனவாக இருக்கக்கூடாது. அதே நேரம் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரின் நலன் என்ற நோக்கில் உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டவையாகும். சட்டம் அனைவருக்கும் பொதுவானதாகையால் சட்டத்தின் மூலம் உரிமைகள் பாதுகாக்கப்படும் நிலை உள்ளது. இக்கோட்பாட்டின் மூலம் மனித உரிமைகளின் நிரந்தரத்தன்மை பறிக்கப்பட்டுள்ளது. மனிதனின் எண்ணங்கள், அரசாங்கத்தின் தன்மை ஆகியவற்றைப் பொறுத்தே உரிமைகள் அமைவதால், பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை பெருகுகின்றது. அதனால் உரிமைகளுக்கு சட்டப் பாதுகாப்பு இன்றியமையாததாகிறது. பார்க்கர் என்பவர் சட்ட உரிமைகளை வலியுறுத்துகின்றார். பாசன்கைத் என்பவரும் உரிமைகளின் சட்டத்தன்மை, சட்ட உரிமைகளின் இணைப்பேயாதலால், சட்டத்தின் மூலம் அமல் செய்யப்படுமென்றார். இருப்பினும் லாஸ்கி குறிப்பிட்டவாறு சட்டங்களுக்கு உரிமையைப் பாதுகாக்கும் கடமை உள்ளது. ஆனால் உரிமைகளைச் சட்டங்கள் தோற்றுவிப்பதில்லை. மேலும் சட்டங்களின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் உரிமைகள் நிரந்தரமானவையல்ல. உரிமைகள் இயல்பானவை; இயற்கையானவை; மனிதனுக்காக ஆக்கப்பட்டவை; எனவே சட்டத்தின் பங்கு உரிமைகளைக் கட்டுப்படுத்தும்

தன்மையுடையதென்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். உரிமைகள் சட்டத்தின் பாதுகாப்புக்குள்ளாகும்போது உரிமைகளைத் தேவைக்கேற்ப சட்டங்களால் திரித்துக் கூறப்படுவதற்கும் வாய்ப்புண்டு.

சட்ட ரீதியான உரிமைகள், ஒழுக்கம் சார்ந்த நன்னடத்தை சார்புள்ளவை. சட்ட அடிப்படையில் ஒழுக்கப் பண்பு சார்ந்த உரிமைகளில் தலையிட முடியாத நிலை உண்டு. எடுத்துக்காட்டாக பெற்றோர்கள் தமது குழந்தைகளை வளர்ப்பதில் ஏற்படும் குறைகளுக்காக அவர்கள் மீது எவ்விதமான சட்ட உரிமையும் மேற்கொள்ள முடியாது. மேலும் சட்ட ரீதியான உரிமைகள் நீதிமன்றத்தின் எல்லை வரையறைகளுக்கு உட்பட்டவை. சட்டம் சார்ந்த உரிமைகளும், வாழ்க்கை மற்றும் அரசியல் சார்புடையவை. ஒரு மனிதன் நேர்மையான வழியில் தனது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுதல் வாழ்க்கை அல்லது வாழ்வியல் உரிமை எனப்படும். அதைப்போல இன்று ஒரு நாட்டின் அரசே இறைமை படைத்த அமைப்பாக உள்ளதால் உரிமைகள் அரசியல் சட்டங்களுக்கு உட்பட்டு அரசால் கட்டுப்படுத்தப்படுகின்றன.

## 4. உரிமைகள் பற்றிய வரலாற்றுக் கோட்பாடு:
(Historical Theory of Rights)

கால ஓட்டத்தில் எழும் மாற்றங்களின் அடிப்படையில் உருவானதே உரிமைகளைப் பற்றிய வரலாற்றுக் கோட்பாடு. தொன்மைக் காலத்தில் மரபுகள், பழக்கவழக்கங்கள், வழக்காறுகள் ஆகியவற்றின் வாயிலாக உரிமைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு நிலைநாட்டப்பட்டன. இவ்வுரிமைகள் வழிவழியாக அனுபவிக்கப்பட்டவை. ஆயினும் கால மாற்றங்களுக்கு உட்பட்டு உரிமைகளின் தன்மை, போக்கு ஆகியன மாறுதலுக்கு உட்படுத்தப்பட்டன. எனவே அரசியல் எழுச்சி, சமூக உணர்வுக் கண்ணோட்டம், பொருளியல் சித்தாந்தங்களின் தோற்றம், சமய அடிப்படையிலான சீர்திருத்தங்கள் ஆகியன உரிமைகளில் மாறுதல்களுக்குக் காரணமாயின. அதாவது அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் உரிமைகளைப் பாதித்தன. எடுத்துக்காட்டாக கிரேக்க நகர அரசுகள், ரோமானிய மன்னராட்சி, சிறுகுழுவினராட்சி, மக்களாட்சி, பொதுவுடமை, முதலாளித்துவம், சமதர்மம், கட்டுப்படுத்தப்பட்ட அல்லது

வரம்பற்ற முடியாட்சி என்னும் வல்லாட்சி, ஒளி சான்ற அ பயனுள்ள வல்லாட்சி என்ற பல அரசியல் பண்புகளுக்கு உ உரிமைகளும் மாற்றங்களுக்கும் பாதிப்புகளுக்கும் உட்பட்டன. என வரலாற்றுக் கோட்பாடனது வரலாற்று காலத்தில் உரிமை எவ்வாறிருந்தன என்பதை உணர்த்துகின்றது.

கிறித்துவ சகாப்தத்திற்கு முந்திய காலத்தில் அதாவது மனித காட்டுமிராண்டி என்ற நிலையிலிருந்து வரலாற்றுக் காலத்தில் அடியெடுத் வைத்த போது இயற்கை நல்கிய உரிமைகளை எவ்விதமா தடைகளுமின்றி அனுபவித்தான். பின்னர் ஒழுக்கம் மற்றும் சமய சார்ந்த அமைப்புகளும் இலக்கியங்களும் உருவானபோது அவற்று விளக்கப்பட்டிருந்த உரிமைகள் செல்வாக்குப் பெற்றன. மனித உரிமைக கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டன. பின்னர் சட்டத்தின் ஆதிக்கம், ஆட்சி ஆட்சித் துறைகள் ஆட்சிமுறை அமைப்புகள் வலுப்பெற்றபோது உரிமைகள் சட்டத்தின் பிடிக்குள் குறுக்கப்பட்டன. கி.பி. 1215-இல் ஜான் மன்னரால் ரன்னிமீடு என்ற இடத்தில் கையொப்பமிடப்பட்ட மேக்னகார்ட்டா என்ற பெரும் சாசனம் அல்லது மகாசாசனம் உரிமையடிப்படையில் எழுந்த ஒரு பத்திரமாயிற்று. கி.பி. 1222-இல் ஹங்கேரியில் மக்கள் உரிமைகள் மன்னரால் நிலைநாட்டப்பட்டன. இங்கிலாந்தில் 1628-இல் சமர்ப்பிக்கப்பட்ட உரிமை மனு, 1688-இல் எழுந்த உரிமைச் சட்ட வரைவு போன்றவை மனிதர்களின் சுதந்திர எழுச்சியைப் பற்றிக் கூறுகின்றன. 1776-இல் வெளியிடப்பட்ட அமெரிக்க சுதந்திரப் பிரகடனம், 1789-இல் வெளியான மனித உரிமை மற்றும் மக்கள் உரிமைப் பிரகடனம், 1945 முதல் பிரகடனப்படுத்தப்பட்ட ஐக்கிய நாட்டவைச் சாசனம், 1948-ஆம் ஆண்டு டிசம்பர் 10-இல் வெளியான அனைத்துலக மனித உரிமைகள் பற்றிய விதிகள், 1968-இல் வெளியிடப்பட்ட டெக்ரான் அறிக்கை, 1975-இல் வெளியான ஹெல்ஸிங்கி அறிக்கை, 1978-இல் கூட்டப்பட்ட மனித உரிமைகள் மாநாடு போன்றவையெல்லாம் வரலாற்று நோக்கில் உருவானவையாகும். இவ்வடிப்படையில் இந்தியாவில் பெண்ணுரிமைச் சட்டங்கள் பல இயற்றப்பட்டன. சொத்துரிமைச் சட்டங்களும் படிப்படியாக இயற்றப்பட்டன. தற்காலத்தில் மனிதனின் பலதரப்பட்ட உரிமைகளும் வரலாற்று வளர்ச்சிப் படிநிலைகளாக உருவாக்கப் பட்டவையாகும்.

## 5. உரிமைகள் பற்றிய பொருளாதாரக் கோட்பாடு:
(Economic Theory of Rights)

இன்றைய உலகில் பொருளாதாரம் முன்னணியில் உள்ளது. பழங்காலத்திலும் பொருளியல் செயல்பாடுகள் காணப்பட்டாலும் தனிப்பட்ட கோட்பாடுகள் மலர்ந்திருந்ததில்லை. மன்னர்கள் பொருளாதாரத்தைக் கையாண்டனர். உற்பத்தி, பகிர்வு என்ற நிலைகள் இருந்தபோதிலும் அவை கோட்பாடுகளாக மலர்ந்ததில்லை. பின்பு எழுந்த தொழிற்புரட்சியினால் தொழிற்சாலைகள் பெருகின. அதனால் உற்பத்தி, பகிர்வு என்ற நிலைகளில் கோட்பாடுகள் எழுந்தன. பொருளாதார நோக்கில் உருவான பொதுவுடமை, சமதர்மம், முதலாளித்துவம் போன்ற கோட்பாடுகளும் பொருளாதார அடிப்படையிலான உரிமைகளுக்கு வழிவகுத்தன. ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடுகளும் மனித உரிமைகளைப் பெருக்கின. பொருளாதார நோக்கில் தேவைகள் மிகுந்தன. வர்க்கப் போராட்டம் என்பதும் பொருளியல் சார்புடையதே. பணக்காரர்கள் ஏழைகளைச் சுரண்டினர். இதனால் உரிமைப் பாதிப்பு ஏற்பட்டது. உபரி மதிப்புக் கோட்பாடு, மால்தஸின் மக்கள்தொகைக் கோட்பாடு போன்றவையெல்லாம் பொருளியல் உரிமைகளுக்கு வித்தாக இன்று அமைந்துள்ளன.

மேலே காணப்பட்ட உரிமைக் கோட்பாடுகள் காலத்தின் மாற்றங்களால் பல்வேறு வகையான வடிவங்களைப் பெற்றன. அனைத்துக் கோட்பாடுகளும் மனித உரிமையைச் சார்ந்தே காலத்தின் தன்மைக்கேற்ப எழுந்தவை. இக்கோட்பாடுகள் அனைத்துமே உரிமைகள் மனிதர்களுடன் பின்னிப் பிணைந்தவை என்ற கருத்தைத் தந்துள்ளன. ஆயினும் மனித உரிமைகள் இல்லையெனில் மனிதனோ அவனைச் சார்ந்த சமுதாயமோ முன்னேற்றப் பாதையில் செல்லவியலாது. இன்றைய மக்களாட்சி, பொதுவுடமை, முதலாளித்துவ சமுதாயத்தில் உரிமைகள் அடிப்படைப் பண்புகளாக அமைந்துள்ளன.

கட்டுப்பாடுகள் இந்தியரை எழுச்சி பெறச் செய்தன. காலப்போக்கில் உரிமைச் சிக்கல் காரணமாக ஆங்கில எதிர்ப்பு வலுப்பெற்று 1942-இல் "செய் அல்லது செத்துமடி" என்ற காந்தியடிகளின் அறைகூவல்களுக்கேற்ப 'வெள்ளையனே வெளியேறு' என்ற இயக்கம் தோன்றியபோது இந்தியரின் உரிமைக்குரல் உச்சக்கட்டத்தை எட்டியது.

**அரசியல் நிர்ணய சபை**

9, டிசம்பர் 1946-இல் இராசேந்திர பிரசாத்தின் தலைமையில் அரசியல் நிர்ணய சபை அமைக்கப்பட்டது.

அரசியலமைப்பு வரைவுக் குழு ஒன்று ஆறுபேர்களைக் கொண்டதாய் பி.ஆர். அம்பேத்காரின் தலைமையில் உருவாக்கப்பட்டது. அடிப்படை உரிமைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. அடிப்படை உரிமைகளைப் பற்றிய செயல்களை மேற்கொள்ள சர்தார் வல்லபாய் படேல் தலைமையில், தனிக்குழு ஒன்று உருவாக்கப்பட்டது. விடுதலை, சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோட்பாடுகளின் அடிப்படையில் அடிப்படை உரிமைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது.

**அடிப்படை உரிமைகள்**

இந்திய அரசியலமைப்பின் மூன்றாம் பிரிவில் 12 முதல் 35 முடியவுள்ள கூறுகளில் அடிப்படை உரிமைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. ஆளுமை வளர்ச்சி, சுதந்திரச் செயல்பாடு, அரசின் தவறுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல் போன்றவற்றிற்காக இவ்வுரிமைகள் தரப்பட்டுள்ளன. சட்டப் பாதுகாப்புள்ள இவ்வுரிமைகளை அரசோ அல்லது தனிநபர்களோ தடுக்க முடியாது. இந்திய அரசியலமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகள் விளக்கமானவை. "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்ற கோட்பாட்டை வலியுறுத்துகின்றது. இதன் வாயிலாக அரசாங்கம், அரசாங்க அலுவலர்கள், அரசாங்க அமைப்புகள் ஆகியவை கட்டுப்பாடான செயல்களின் மூலம் மக்களின் உரிமைகளைப் பேணிப் பாதுகாக்கின்றன. அடிப்படை உரிமைகளுடன் சில கட்டுப்பாடுகளும் இந்திய அரசியலமைப்பில் உள்ளன. 27, பிப்ரவரி, 1967-இல் இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்மூலம் அடிப்படை உரிமைகளை

நீக்கவோ, திருத்தியமைக்கவோ, நாடாளுமன்றத்திற்கு அதிகாரமில்லை. இது இந்திய அரசியலமைப்பின் 17 ஆம் திருத்தத்தின்மூலம் மேற்கொள்ளப்பட்டது. இதனால் அடிப்படை உரிமைகள் மக்களாட்சியின் நிரந்தர அடித்தளமாக உருவாக்கப்பட்டுள்ளன. 1971-இல் மேற்கொள்ளப்பட்ட 24-ஆம் அரசியல் திருத்தச் சட்டத்தின் வாயிலாக இந்திய அரசியலமைப்பின் எந்தப் பகுதியையும், அடிப்படை உரிமைகளையும் சேர்த்து, திருத்தியமைக்கும் உரிமை நாடாளுமன்றத்திற்கு உண்டு எனப்பட்டது. அடிப்படை உரிமைகளை இந்தியர்கள் நீதிமன்றங்களை அணுகித் தக்கவைத்துக் கொள்ளலாம். அதற்குத் தேவையான கட்டளைகளை இட நீதிமன்றங்களுக்கு உரிமையுண்டு. இது ஒரு அடிப்படை உரிமையாகச் சேர்க்கப்பட்டுள்ளது. நெருக்கடி காலத்தில் அவசரநிலைப் பிரகடனம் அமலில் இருக்கும்போது உரிமைகளை பயன்படுத்த முடியாது. இந்திய அரசியலமைப்பில் 12 முதல் 35 முடியவுள்ள 24 கூறுகளில் அடிப்படை உரிமைகள் ஆறு தொகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. அவற்றுள் 12 மற்றும் 13 ஆம் கூறுகள் அடிப்படை உரிமைகளின் பொதுச் செயல்களைப் பற்றிக் கூறுகின்றன. அவற்றைக் கீழே காண்போம்.

1. சமத்துவ உரிமை - (Right to Equality) 14 முதல் 18 முடியவுள்ள கூறுகள்.
2. சுதந்திர உரிமை - (Right to Freedom) 19 முதல் 22 முடியவுள்ள கூறுகள்.
3. சுரண்டலுக்கெதிரான உரிமை - (Right to Exploitation) 23 முதல் 24 முடியவுள்ள கூறுகள்.
4. சமய சுதந்திர உரிமை (Right to Religion) 25 முதல் 28 முடியவுள்ள கூறுகள்.
5. பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள் (Cultural and Educational Rights) 29 முதல் 30 முடியவுள்ள கூறுகள்.
6. அரசியலமைப்பு ரீதியாக தீர்வுகள் பெறும் உரிமை (Right to Constitutional Remedies) 31 முதல் 35 முடியவுள்ள கூறுகள்.

**1. சமத்துவ உரிமை** (Right to Equality)

இந்தியர் அனைவரும் சட்டத்தின் முன் சமமானவர்கள் அவர்களுக்கு சட்டத்தின் வாயிலாக தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் உரிமை உண்டு. (சரத்து - 14) சமயம், இனம், வகுப்பு, பாலினம், பிறப்பிடம் காரணமாக பாதுகாப்பு உரிமைகளைப் பெற்றவர்கள். (சரத்து - 15) இந்த நோக்கில் அரசு யாரிடமும் எவ்விதமான பாகுபாடும் காட்டக்கூடாது. அரசினால் நடத்தப்படும் விற்பனைக் கூடங்கள், தங்கும் விடுதிகள், கேளிக்கை மையங்கள் ஆகியவற்றுக்குச் சென்று வரும் உரிமையை அரசு தடுக்கக் கூடாது. அரசுக்குச் சொந்தமான கிணறுகள், ஏரிகள், சாலைகள், பொது இடங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்த அனைவருக்கும் உரிமையுண்டு. அவ்வுரிமையைத் தடைப்படாமல் பாதுகாப்பது சமத்துவ உரிமைகளுள் ஒன்று. மகளிர், சிறுவர் போன்றோருக்கு சிறப்புரிமைகள் நல்கி சமுதாயப் பொதுநலனுக்கு உதவ வகை செய்கின்றது. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் ஆகியோரின் நலனுக்காக தனிச்சலுகைகளை அரசு நல்குவதை யாரும் தடை செய்வதில்லை. அரசுப் பணிகளில் அமர அனைத்துக் குடிமக்களுக்கும் உரிமையுண்டு. சாதி, இனம், மொழி, மதம், இருப்பிடம் மூலம் யாரையும் பாகுபடுத்தி அவர்களது வேலை வாய்ப்பைத் தடுக்கக் கூடாது. குறிப்பிட்ட ஒரு அரசு பதவியை வகிக்கக் குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளை விதிக்க அரசாங்கத்திற்குத் தடையில்லை. (சரத்து - 16). தீண்டாமை தடை செய்யப்பட்டது. அதனை நடைமுறைப்படுத்துபவர்கள் தண்டனைக்குரியவர்களாவர். 17ஆம் சரத்தானது இராணுவம் மற்றும் கல்வித் துறை தவிர பிற துறைகளில் விருதுகள் மற்றும் கௌரவப் பட்டங்கள் தருவது தடுக்கப்பட்டுள்ளது. இந்தியரொருவர் வெளிநாட்டிலிருந்து பட்டம் பெறக்கூடாது. இந்திய அரசில் பணியாற்றும் இந்தியரல்லாத பிறரும் இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலின்றி எந்த ஒரு பட்டத்தையும் ஏற்கக் கூடாது. இந்திய அரசுப் பணியிலிருக்கும் யாரும் வெளிநாட்டு அரசிடமிருந்து பதவியையோ ஊதியத்தையோ அல்லது எவ்விதமான அன்பளிப்பையோ பெறக்கூடாது.

## 2. சுதந்திர உரிமை (Right to Freedom)

இந்திய அரசியலமைப்பில் 19 முதல் 22 வயதுள்ள 4 ஷரத்துக்கள் சுதந்திர உரிமைகளை விளக்குகின்றது. இவை அடிப்படை உரிமைகளுக்கான முதுகெலும்பெனக் கூறப்படுகின்றன. இதன்படி ஆறு வகையான உரிமைகள் கூறப்பட்டுள்ளன.

சுதந்திர உரிமைகளுள் முதன்மையானது பேச்சுரிமை மற்றும் கருத்து வெளியிடும் உரிமை என்பதாகும். அமைதியாக எவ்விதமான ஆயுதங்களின்றிக் கூடுவது இரண்டாம் உரிமையாக தரப்பட்டுள்ளது. மூன்றாவது சங்கங்கள் அமைக்கும் உரிமை ஆகும். நான்காவது இந்தியத் துணைக் கண்டத்தின் எந்தப் பகுதிக்கும் இந்தியக் குடிமகன் செல்லுவதற்கான உரிமை. ஐந்தாவது இந்திய ஆட்சிப் பகுதிகளில் தங்கவும் குடியமரவும் உரிமை. இறுதியானது முறையான எந்த ஒரு செயலைச் செய்யவும், வாணிபத்தில் ஈடுபடவும் உரிமையைத் தருகின்றது.

இத்தகைய உரிமைகளை அனுபவிப்பதற்கான சில கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டுள்ளன. நாட்டின் இறைமை மற்றும் ஒருமைப்பாட்டைச் சீர்குலைத்தல், நாட்டின், அரசின் பாதுகாப்பு தொடர்பான செயல்களை மீறல், பொது ஒழுங்கு, அவதூறு, நீதிமன்ற அவமதிப்பு, குற்றம் செய்யத் தூண்டுதல், குற்றம் செய்தவரைப் பாதுகாத்தல் போன்ற உரிமைகளைத் தடைசெய்கின்றன. தொடக்கத்தில் சொத்துரிமையும் இதன் மூலமாகத் தரப்பட்டது. ஆனால் 1978-இல் கொண்டு வரப்பட்ட 44-ஆம் திருத்தப்படி சொத்துரிமை அடிப்படைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டுவிட்டது.

## 3. சுரண்டலுக்கெதிரான உரிமை (Right against Exploitation)

இந்திய அரசியலமைப்பின் 23 ஆம் விதியும் 24 ஆம் விதியும் இவ்வுரிமையை நல்குகின்றன. அரசாங்கம் மற்றும் தனிநபர்கள் பிறரைக் கட்டாயப் பணியில் ஈடுபடச் செய்து அவர்களது வாழ்வைச் சுரண்டுவதைத் தடுக்க இவ்வேற்பாடு உள்ளது. கட்டாயப் பணிகளில் தவறாகப் பயன்படுத்துதலும் தடுக்கப்பட்டுள்ளது. இவற்றைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும்போது சமயம், இனம், மொழி, சாதி

அடிப்படைகளில் எவ்வித வேறுபாடும் காட்டக்கூடாது. அதைப்போல வயதுக்கு உட்பட்ட ஆணையும் பெண்ணையும் (குழந்தைகளை) சுரங்க வேலை போன்ற ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர் முறையானது மனித தன்மைக்கும், பண்பாட்டிற்கும் அப்பாற்பட்டது. அத்தகைய குற்றங்கள் தண்டனைக்குரியவை.

**4. சமய சுதந்திர உரிமை (Right of Freedom of Religion)**

இந்திய அரசியலமைப்பின் 25 முதல் 28 முடியவுள்ள பிரிவுகள் இந்தியக் குடிமக்களுக்கு, பிடித்தமான சமயத்தைப் பின்பற்ற உரிமையளித்துள்ளன. ஒழுக்கம், அமைதி, நல்வாழ்வு ஆகியவற்றிற்கு உட்பட்டு வெளிப்படையாகத் தனது சமயத்தைப் பின்பற்றவும், பரப்பவும் உரிமையுண்டு. சமயச் சார்புடைய சிக்கல்களை ஒழுங்குபடுத்த, சட்டம் இயற்றும் உரிமை அரசுக்கு உண்டு. சமூக நலன் மற்றும் மேம்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட சமயப் பொது நிறுவனங்களைப் பயன்படுத்தி சீர்திருத்தங்கள் மேற்கொள்ள உரிமையுண்டு. இவ்வடிப்படையில் ஏற்கனவே செயலில் உள்ள சட்டங்களுடன் புதிய சட்டங்களை இயற்ற அரசாங்கத்திற்கு உரிமையுண்டு. அனைத்து சமயப் பிரிவினரும் பொது ஒழுங்கு, அமைதி, ஆரோக்கியம் ஆகியவற்றுக்கு கேடு ஏற்படாத வகையில் தனிப்பட்ட அமைப்புகளை உருவாக்கி பயன்படுத்தலாம். தனது சமயக் கடமைகளைத் தாமே ஆற்றிக் கொள்ள அனைவருக்கும் உரிமையுண்டு. சமய மேம்பாட்டிற்காக அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை வைத்துப் பராமரிக்க உரிமை உண்டு. ஆனால் அவை சட்ட வரம்பிற்கு உட்பட்டவையாயிருக்க வேண்டும். சமயப் பணிகளுக்கு நிதி திரட்டும் போது அதற்காக வரி விதிக்க உரிமையில்லை. முற்றிலும் அரசின் நிதியுதவியுடன் செயல்படும் கல்வி நிறுவனங்களில் சமயப் பிரச்சாரங்கள் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் தனிப்பட்ட அறக்கட்டளை மற்றும் வைப்புநிதி அறக்கட்டளைகள் வாயிலாக நடத்தப்படும் நிறுவனங்களில் சமயப் பணிகள் நடைபெறுவதைத் தடை செய்ய இயலாது. அரசின் ஒப்புதல் மற்றும் அரசின் நிதிஉதவியைப் பெறும் கல்வி நிலையங்களில் செய்யப்படும்

சமய போதனைகளில் கலந்து கொள்ள யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. இளவயதினரை அவருடைய காப்பாளரின் ஒப்புதலுடன் தான் சமயப் பணிகளில் கலந்து கொள்ளச் செய்யலாம். சமயச் சிறுபான்மையினர் நடத்தும் கல்வி நிறுவனங்கள் அரசின் நிதி ஆதாரங்களைப் பெற்றாலும் மனமுவந்து வருவோருக்கு சமயத்தைப் போதிப்பதில் எவ்விதமான தடையும் இல்லை.

**5. பண்பாட்டு உரிமைகளும் கல்வி உரிமைகளும்** (Cultural and Educational Rights)

இந்திய அரசியலமைப்பின் 29 ஆம் கூறும் 30 ஆம் கூறும் சிறுபான்மையினரின் நலத்தையும் பாதுகாப்பையும் கல்வி உரிமைகளையும் பற்றிக் கூறுகின்றன. முன்னதன்படி இந்தியப் பகுதிகளில் வாழும் இந்தியரனைவருக்கும் தம்முடைய பண்பாடு, எழுத்து, மொழி ஆகியவற்றைப் பாதுகாக்கும் உரிமை உண்டு. அரசு நடத்தும் அல்லது அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களில், சாதி, இனம், மொழி அடிப்படையில் எக்காரணத்திற்காகவும் ஒருவரைச் சேர்ப்பதைத் தடுக்க முடியாது. சிறுபான்மையினர் தமது விருப்பப்படி கல்வி நிறுவனங்களை உருவாக்க நிர்வகிக்க உரிமையுடையவர்கள். சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்கள், சொத்துக்கள் ஆகியவை கையகப்படுத்தப்படும் போது, அதற்கான இழப்பீட்டுத் தொகையைத் தருவதில் சிக்கல்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அரசின் கடமையாகும்.

சொத்துரிமை

சொத்துரிமை பற்றி பல அரசியலமைப்பு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. சொத்துக்கள் மாற்றம் பற்றிய உரிமைகளில் 4 மற்றும் 25 ஆம் திருத்தங்கள் முறையே 1955, 1971 ஆகிய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டன. 1978-இல் 44-ம் திருத்தம் சொத்துரிமை பற்றிய 19 மற்றும் 31 ஆம் பிரிவுகள் 20 ஜூன், 1979-இல் நீக்கப்பட்டன. ஆனால் சொத்துரிமையை மையமாக வைத்து 300A என்னும் பிரிவின் மூலம் அது சட்ட உரிமையாக ஆக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் எவருடைய சொத்தையும் பறிக்க

முடியாது என்ற உரிமை நல்கப்பட்டுள்ளது. ஆனால் பொதுநன்மைக்காக அதனை எடுத்துக்கொள்ளும் உரிமை அரசுக்கு உண்டு. அவ்வாறு ஒருவரது சொத்தை அரசு எடுத்துக் கொள்கையில் அதற்கான இழப்பீட்டுத் தொகையை மாநிலச் சட்டமன்றங்கள் தீர்மானிக்க வகை செய்யப்பட்டுள்ளது. முறையான இழப்பீடு அல்லது மதிப்பீடு இல்லையெனக் கூறி அதனை நீதிமன்றம் மூலம் சம்பந்தப்பட்டவர் எதிர்க்கலாம். 31 A பிரிவின்படி சட்டங்களின் துணை கொண்டு பண்ணை நிலங்களை இழப்பீடு தந்துவிட்டு அரசு எடுத்துக் கொள்ளாமல் பாதுகாக்கப்பட்டுள்ளது. இப்பிரிவின்படி உரிமை நிலச் சொத்து என்பதில் ரயத்வாரி முறையில் வரி வசூலுக்கான நிலம், தரிசு நிலம், காட்டு நிலம், மேய்ச்சல் நிலம் ஆகியனவும் அடங்கும். உரிமை நிலச் சொத்து தொடர்புடைய உரிமைகள் என்ற சொல் உடமையாளர், உள் உரிமையாளர், உப உரிமையாளர், குத்தகைதாரர் போன்ற பலரையும் உள்ளிட்டதாகும். எனவே அவர்களது உரிமைகள் மற்றும் நில வருவாய் தொடர்பான உரிமைகளும் சலுகைகளும் இதில் அடங்கும். இச்சட்டத்தின் 31 B பிரிவு குறிப்பிட்ட சில சட்டங்களையும் ஒழுங்கு விதிகளையும் செல்லத் தக்கவை எனக் கூறுகின்றது. 31 C பிரிவானது உரிமைகள் நோக்கில் குறிப்பிட்ட நெறிமுறைக் கோட்பாடுகளை செயல்படுத்தும் சட்டங்களை பாதுகாக்கும் உரிமையை அரசுக்கு நல்கியுள்ளது.

### 6. சட்டங்கள் மூலம் பரிகாரம் தேடும் உரிமை (Right of Constitutional Remedies)

இந்திய அரசியலமைப்பின் 32-ஆம் பிரிவு அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் அவை மீறப்பட்டால் அவற்றிற்குப் பரிகாரம் காணும் வழிவகைகளையும் குறிப்பிடுகின்றது. இதன்படி இந்திய எல்லைக்குள் வாழும் இந்தியக் குடிமக்கள் அனைவரும் தமது அடிப்படை உரிமைகளை இழக்க நேரிட்டால் உயர்நீதிமன்றப் பிரிவு 226 மூலமாகவும் அரசியலமைப்பின் 32-ஆம் பிரிவின்படியும் நீதிமன்றத்தை நாட உரிமை தரப்பட்டுள்ளது. அரசியலமைப்பு உத்தரவாதமளித்துள்ள அடிப்படை உரிமைகளை அரசியலமைப்பு குறிப்பிட்டுள்ள வகையில் மட்டுமே நிறுத்தி வைக்கலாம்.

நாடாளுமன்றம், திருத்தங்களின் வாயிலாக இவ்வுரிமைகளை நிறுத்தி வைக்கலாம். அதைப்போல நாட்டில் நெருக்கடி நிலையை குடியரசுத் தலைவர் அறிவித்திருக்கும் நேரத்தில் இவ்வுரிமையைப் பயன்படுத்த முடியாது. பலவித ஆணைகளின் (Writs) மூலம் உரிமைகள் நிலைநாட்டப்படுகின்றன. அவற்றைக் கட்டளைகளாகவும் கொள்ளலாம். அத்தகைய ஆணைகள் கீழ்க்காண்பனவாகும்.

**ஆட்கொணர்வு ஆணை அல்லது நீதிமன்றத்தில் நிறுத்தும்படியான உத்தரவு** (Writ of Habeas Corpus)

சட்டப்படி குற்றமற்ற ஒருவர் சிறைப்படும் போது இவ்வாணையின் வாயிலாக பரிகாரம் தேடிக் கொள்ளலாம். கைதியாக சிறைப்பட்ட ஒருவரை குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட நீதிமன்றத்தில் நிறுத்தி அவரைச் சிறையிட்ட காரணத்தைக் கூறுமாறு ஒரு அதிகாரிக்கு ஆணையிடுவது ஆட்கொணர்வு ஆணை. சிறையிட்டது தவறானது அல்லது முறையற்றது என்றால் மட்டுமே இவ்வாணையை பயன்படுத்தலாம். இவ்வாணையை உச்சநீதிமன்றமோ உயர்நீதிமன்றமோ பிறப்பிக்கலாம்.

**பொதுக் கடமையைச் செய்ய அறிவிக்கும் ஆணை**
(Writ of Mandamus)

இதனை கட்டளை நீதிப் பேராணை என்றும் கூறலாம். இதனை உச்சநீதிமன்றமும் உயர்நீதி மன்றங்களுமே செயல்படுத்த முடியும். தனிநபர் ஒருவரின் உரிமை பாதிக்கப்படும் போது குறிப்பிட்ட அதிகாரிக்கோ அல்லது மன்றத்திற்கோ அனுப்பப்படலாம். பொதுநல நோக்கில் பொதுப்பணிகள் முறையாக செயல்படுத்தப்பட வேண்டுமென்பதற்காகவே இவ்வுரிமை தரப்பட்டுள்ளது.

**தடை நீதிப் பேராணை** (Writ of Prohibition)

நீதிமன்றங்கள் தன்னுடைய வரம்புகளுக்கு உட்பட்டுச் செயல்பட வேண்டுமென்பதற்காக இது உருவாக்கப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கீழ்நிலை நீதிமன்றம் ஒரு குறிப்பிட்ட வழக்கை விசாரிக்க உரிமையில்லை என்பதை அறிவிக்கலாம். இயற்கைக்கு மாறாக அமைந்துள்ள

# அலகு - இரண்டு

- மனித உரிமைகளின் வரலாறும் பண்புகளும்.
- பன்னாட்டு மனித உரிமைகளின் பிரகடனம்.
- பன்னாட்டு உடன்படிக்கை.
- பொருளாதர சமுக மற்றும் கலாச்சார உரிமைகள் பற்றிய பன்னாட்டு உடன்படிக்கை.

# 5

# மனித உரிமைகளின் வரலாறும் பண்புகளும்

அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும் அனைவருக்கும் பொதுவானவை. மக்கள் அவற்றைப் பெற்றுச் சிறக்க உரிமையுடையவர்கள். அவ்வுரிமைகள் பலதரப்பட்டவை என்பதை ஏற்கனவே கண்டோம். அனைத்து மக்களுமே உரிமைகளுடன் பிறந்தார்கள். ஆனால் அவை காலப்போக்கில் பல மாற்றங்களுக்கு உள்ளாயின. சூழல், சமூக அமைப்பு, அரசியல் வேறுபாடு, தனிநபர் வாழ்க்கை முறை, பொருளியல் சிக்கல், பண்பாட்டு மாற்றம் போன்றவையனைத்தும் உரிமைகளின் வளர்ச்சி மற்றும் மாற்றங்களுக்குக் காரணமாயின. எனவே மனித உரிமைகளின் வரலாற்றை அறிவது இன்றியமையாததாகும்.

உரிமைகளின் வரலாறு தொன்மைக்காலத்தது. ஆனால் அண்மைக் காலத்தில் தான் உரிமைகளைப் பற்றிய கருத்துக்கள் செல்வாக்குப் பெற்றன. வரலாற்றுப் பக்கங்களில் அவை சமயம், பண்பாடு, தத்துவம், சமுதாயம், சட்டம் போன்றவற்றைச் சார்ந்திருந்தன என்னும் சான்றுகள் உண்டு. பண்டைக்காலத்தில் மனிதர்கள் இயற்கையான உரிமைகளை இயல்பாகப் பயன்படுத்தினர். ஆனால் அவ்வுரிமைகளைப் பற்றி அவர்கள் பெரிதுபடுத்தவில்லை. ஏனெனில் உரிமைகளுக்கான எதிர்ப்புகள் இல்லை. ஆயினும் உரிமைகளைப் பற்றிய சட்டங்கள் நான்காயிரம் ஆண்டுகட்கு முன்பாகவே இருந்தன என்னும் வரலாற்றுச் சான்றுகள் உண்டு. எனவே அவற்றைப் பற்றிக் காண்போம்.

கி.மு. 3260ஆம் ஆண்டில் லகாய் நாட்டு மன்னர் ருக்கினா என்பவரும், பின்னர் கி.மு. 2300-இல் அந்நாட்டின் மன்னர் சர்கான் என்பாரும் மனித உரிமைகளைச் செயல்படுத்தும் சட்டங்களை உருவாக்கி நடைமுறைப்படுத்தினர். தொடர்ந்து கி.மு. 2130 முதல் 2088 வரை வாழ்ந்த பாபிலோனிய மன்னரான ஹமுராபி தனது சட்டத்தொகுப்பில் உரிமைக்கு முக்கியத்துவம் நல்கியிருந்தார். என்பதை அச்சட்டத் தொகுப்பு வெளிப்படுத்துகின்றது. சொத்துரிமை பற்றிய சட்டத்தில் தகப்பனாரின் சொத்துக்கள் அவரது மகன்களைச் சாரும் என்று கூறப்பட்டுள்ளது. நிர்வாகம், நிதி, திருமணம் போன்றவற்றையும் அது விளக்கியுள்ளது. இச்சட்டங்கள் கடுமையானவையாயிருந்தன. சட்டத்தில் இரக்கம் என்பது குறைவாகவேயிருந்தது. இக்கொடூரமான சட்டங்கள் அனைத்துக் காலங்களுக்கும் பொருந்துவன அல்ல.

ரோமானியச் சட்டங்களும் பழங்காலத்தில் பல உரிமைகளை நல்கியிருந்தன. கி.மு. 450-இல் இயற்றப்பட்ட ரோமானியச் சட்டங்களுள் மனித உரிமைகளைத் தந்த சட்டங்களும் இருந்தன. பாரசீகப் பேரரசர் சைரஸ் கி.மு 539-இல் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். பாபிலோனியப் பேரரசைக் கைப்பற்றிய பின் இத்தகைய சட்டங்கள் வெளிப்பட்டன. கி.மு. 272 முதல் 231-வரை அரசோச்சிய அசோக மாமன்னர் தனது பாறை, குகை மற்றும் கற்றூண் ஆணைகளின் வாயிலாக உரிமைகள், கடமைகள் ஆகியவற்றைப் பற்றி வெளியிட்டார். கி.பி. 622-இல் மதீனாவின் முக்கிய பிரிவினரிடையே ஒரு உடன்பாட்டை ஏற்படுத்த உருவாக்கிய மதீனா அரசியலமைப்பு முகமதியர், யூதர் போன்ற பலருக்கு முக்கியமானதாயிற்று.

**மகாசாசனம்: (1215)**

இங்கிலாந்தில் 15, ஜுன் 1215-இல் ஜான் மன்னரால் ரன்னிமீட் என்ற இடத்தில் வெளியிடப்பட்ட மகாசாசனம் (Magna Carta) ஆங்கிலச் சட்ட வரலாற்றிலும் அரசியலமைப்பு வரலாற்றிலும் முக்கியமானது. அது பன்னாட்டுச் சட்டங்களுக்கும் அரசியலமைப்புக்கும் இன்றும் அடிப்படையாகக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் இரண்டாம் பகுதியானது

மன்னர் மக்களுக்கு வழங்கிய உரிமைகளைப் பற்றிக் கூறுகின்றது. சமநீதி, சமய உரிமை ஆகியனவும் அதன் மூலம் விளக்கப்பட்டுள்ளன. ஆங்கில மக்களுக்குத் தரப்பட்ட தொடக்கக் கட்ட உரிமைச் சாசனமாக அது அமைந்துள்ளது.

**உரிமை விண்ணப்பம்: (1628)**

தற்கால நடைமுறைக்கேற்ப மனித உரிமைகளை விளக்கி பல மனித உரிமைச் சட்டங்கள் இயற்றப்பட்டன. 1628-இல் ஆங்கிலப் பாராளுமன்றம் முதலாம் சார்லஸ் மன்னரின் வரம்பற்ற அதிகாரங்களைக் கட்டுப்படுத்த **உரிமை விண்ணப்பம்** (Petition of Rights) ஒன்றை மன்னரிடம் வழங்கியது. மன்னர் ஒப்புதல் வழங்கியமையால் அது சட்டமாயிற்று. அதன்படி ஆங்கில ஆட்சி கட்டுப்படுத்தப்பட்ட முடியாட்சியாக ஆயிற்று. சட்டத்தின் ஆட்சியும் தொடங்கியது. இறைமையானது மன்னரிடமிருந்து பாராளுமன்றத்திற்கு மாற்றப்பட்டது. இதன்படி யாரையும் விசாரணையின்றி சிறையிலடைப்பதைத் தடுக்கும் உரிமை தரப்பட்டது. இதன் ஒவ்வொரு பிரிவும் மக்களின் உரிமை சார்ந்ததாக விளங்கியது.

**அரசத் துரோக தண்டனைச் சட்டம் 1641** (Act of Attainder)

இச்சட்டப்படி அரசனைவிட நாட்டின் சட்டமே மேலானது என்ற உரிமை நிலைநாட்டப்பட்டது. "சட்டத்தின் ஆட்சி" என்ற கோட்பாடு நிலைநாட்டப்பட்டது. இதன் மூலம் ஆங்கில மன்னரின் சிறப்பு நீதிமன்றங்கள் நாட்டின் பொதுச் சட்டங்களுக்கு உள்ளானவை என்பது நிலைநாட்டப்பட்டது.

**ஹேபியஸ் கார்ப்பஸ் சட்டம் (1679)** (Habeas Corpus Writ)

இது தனிநபர் உரிமையைப் பாதுகாக்க உருவாக்கப்பட்டதாகும். குற்றம் சாட்டப்பட்டு சிறைப்பட்ட ஒருவருக்கு அவர் சிறைப்பட்டதற்கான காரணத்தைக் கூற வேண்டும். அத்துடன் குற்றமற்றவரென்று விடுவிக்கப்பட்ட ஒருவரை மீண்டும் அதே குற்றத்திற்காகச் சிறையிலடைக்க முடியாது. இதை மீறும் அதிகாரிகளும் தண்டனைக்குள்ளாவர் என்று கூறப்படுகின்றது. இதை தனிநபர் உரிமைக்கான பாதுகாப்பு எனலாம்.

## உரிமைகள் மசோதா (1689) Bill of Rights

இச்சட்டம் இரண்டாம் ஜேம்ஸ் மன்னர் காலத்தில் இயற்றப்பட்டது. இங்கிலாந்து நாட்டில் நிலவிய ஒடுக்குதலுக்கு வழிவகுக்கும் முறைகளை இது நீக்கியது. இச்சட்ட வரைவில் மக்கள் மன்னருக்கு விண்ணப்பிக்கும் உரிமை, பாராளுமன்ற உறுப்பினர்களைக் கட்டுப்பாடுகளின்றித் தேர்ந்தெடுக்கும் உரிமை, கருத்துத் தெரிவிக்கும் உரிமை போன்ற தனிநபர் உரிமைகள் வலியுறுத்தப்பட்டன. இச்சட்டம் இங்கிலாந்தின் எழுதப்படா அரசியலமைப்பின் எழுதப்பட்டதோர் உறுப்பாகத் திகழ்கின்றது.

ஹியூகோ குரோஷியஸ் (1583-1645) 'சர்வதேச சட்டம் மற்றும் இயற்கைச் சட்டங்களின் தந்தை' எனப்பட்ட டச்சுக்காரரான ஹியூகோ குரோஷியஸ் மனிதர்களின் சுதந்திரநிலை, சமத்துவ நோக்கு, பிறரது உரிமைகளுக்கும் சட்டங்களுக்கும் மதிப்பளித்தல் என்பன பற்றிக் கூறுகின்றார்.

ஜீன் ஜாக்ஸ் ரூஸோ 'சமூக ஒப்பந்தம்' (Social Contract) என்ற நூலை எழுதினார். அதில் அவர் சுதந்திரமாகப் பிறந்த மனிதன் எல்லா இடங்களிலும் விலங்கிடப்பட்டுள்ளான் என்று அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் (1776), பிரான்சு நாட்டின் மனித உரிமைப் பிரகடனம் (1789) ஆகியவற்றில் இணைக்கப்பட்டுள்ள உரிமைகளைச் சுட்டிக்காட்டினார். அவற்றின் மூலம் சட்ட உரிமைகள் வலுப்பெற்றன.

## அமெரிக்க முயற்சிகள்

1765-இல் சுதந்திர மைந்தர்கள் (Sons of Liberty) என்ற அமெரிக்க அமைப்பு ஆங்கில எதிர்ப்புணர்வை விரிவடையச் செய்தது. உரிமைகள் பற்றி வர்ஜீனிய அறிக்கை (Virginia Declaration of Rights) அடிப்படை உரிமை, விடுதலை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு 4. ஜூலை 1776-இல் வெளியிடப்பட்டது. தாமஸ் ஜெஃபர்சன் என்பவரால் எழுதப்பட்டது. மனிதன் பிறக்கும் போது எவ்விதமான பாகுபாடுமின்றி சமமான உரிமைகளோடு பிறக்கின்றான். உயிர்வாழ்தல், தன் விருப்பம் போல நடத்தல், மகிழ்வு பெறுதல் என்பன போன்றவற்றில்

சம உரிமை கொண்டவன். ஆனால் ஓர் அரசு அவற்றைத் தூர்விட்டால் புதிய அரசை நிறுவ மக்களுக்கு உரிமை உண்டு எனக் கூறியது. இதன்மூலம் மனிதர்களுக்கிடையே வேறுபாடுகள் இல்லையென்பது வெளிப்படுத்தப்பட்டது. 1789-இல் நடைமுறைப்படுத்தப்பட்ட அரசியலமைப்புதான் மனித உரிமை, மக்களாட்சி ஆகிய கோட்பாடுகளைப் பற்றி எழுதப்பட்ட முதல் அரசியலமைப்பாயிற்று. 1791-இல் வெளியான உரிமைச் சட்டவரைவு (Bill of Rights) என்பதன் மூலம் பல உரிமைகள் அமெரிக்க அரசியலமைப்பில் இணைக்கப்பட்டன. பேச்சுரிமை, எழுத்துரிமை, சமய உரிமை, கூட்டம் கூடும் உரிமை, ஆயுதங்கள் வைத்துக் கொள்ளும் உரிமை, உயிர், சொத்து ஆகியவற்றிற்கான உத்தரவாதம் போன்றவை தரப்பட்டன. இவை பின் வந்த மக்களாட்சி நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அரசியலமைப்புகளுக்கு உரிமைகள் பற்றிய அடித்தளமாய் அமைந்தன.

மனித உரிமைகள் பிரகடனம் (Declaration of Human Rights) 1789-இல் பிரான்சு நாட்டில் பிரெஞ்சுப் புரட்சியின் போது வெளியிடப்பட்டது. இப்பிரகடனம் மக்களின் சமத்துவ நிலை மற்றும் உரிமைகளைச் சுட்டிக்காட்டியது. தமக்கான சட்டங்களை உருவாக்க மக்களுக்கு சுதந்திரம், சொத்துரிமை, பேச்சுரிமை, சட்டப் பாதுகாப்புக்கான உரிமை ஆகியன உண்டு எனக் குறிப்பிட்டது. இத்தகைய உரிமைகள் 1791-இல் வெளியிடப்பட்ட பிரெஞ்சு அரசியல் அமைப்பில் இணைக்கப்பட்டன.

**19-ஆம் நூற்றாண்டு:**

19-ஆம் நூற்றாண்டில் உரிமைகளின் வளர்ச்சி உலகின் பல நாடுகளிலும் பிரதிபலித்தது. பல நாடுகளின் அரசியலமைப்புகளிலும் உரிமைகள் பற்றிய கூறுகள் இடம் பெறலாயின. ஸ்வீடன் (1809), நார்வே (1814), பெல்ஜியம் (1831), டென்மார்க் (1849), பிரஷ்யா (1850), சுவிட்சர்லாந்து (1874) போன்ற நாடுகள் மனித உரிமைகளைத் தமது அரசியலமைப்புகளில் இணைத்துக் கொண்டன.

**20-ஆம் நூற்றாண்டு:**

உரிமைகளின் முக்கியத்துவம் காரணமாக 20ஆம் நூற்றாண்டில் அவற்றைப் பல நாடுகள் ஏற்றுக் கொண்டு தமது அரசியலமைப்பில் சேர்த்துக் கொண்டன. ஆஸ்திரேலியா - (1901), மெக்ஸிகோ (1917), ஜெர்மனியின் வெய்மர் குடியரசின் அரசியலமைப்பு (1936), ஜப்பான் (1946), இந்தியா (1950) போன்றவை சில முக்கிய நாடுகளாகும்.

**அடிமை முறையும் நிறவெறி அல்லது இன ஒதுக்கலும்:**

உலகில் அடிமை முறையானது மனிதனை மனிதன் கட்டுப்படுத்தி அடக்கி ஒடுக்கிய ஒரு கொடிய செயல். இதனால் மனித உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டன. அதற்கு இனவேறுபாடு ஓர் அடிப்படைக் காரணமாக இருந்தது. 19-ஆம் நூற்றாண்டிற்குப் பின் அடிமை முறை அறுவெறுப்பான ஒரு செயல் என்பது உணரப்பட்டது. 1807-இல் முதன் முறையாக இங்கிலாந்து குடியேற்றங்களில் அடிமை வாணிபம் மேற்கொள்ளப்படுவதை நிறுத்தியது. 1815-இல் வியன்னா மாநாட்டில் அடிமை முறைக்கான எதிர்ப்புகள் எழுப்பப்பட்டன. 1843-இல் அடிமை ஒழிப்புச் சட்டம் ஒன்று இந்தியாவில் இயற்றப்பட்டது. 1885-இல் நடைபெற்ற பெர்லின் மாநாடு (Congress of Berlin) அடிமை முறை ஒழிப்புச் சட்டத்திற்கு வழிவகுத்தது.

முதல் உலகப் போருக்குப் பின் எழுந்த பன்னாட்டவையில் அடிமை முறை பற்றிய பிரிவுகள் இணைக்கப்பட்டன. 1926-இல் அடிமை முறை பற்றிய செய்திகளைத் திரட்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. இவை பன்னாட்டளவில் மேற்கொள்ளப்பட்டவை.

அமெரிக்காவில் ஆபிரகாம் லிங்கன் 1862, செப்டம்பர் 22-இல் வெளியிட்ட **அடிமைமுறை விடுதலை அறிவிப்பு** (Emancipation of Slavery Proclamation) 1863-இல் செயல் வடிவம் பெற்றது. பின்னர் மார்ட்டின் லூதர் கிங்கின் முயற்சியால் 1964, 1965 ஆகிய ஆண்டுகளில் **சிவில் உரிமைச் சட்டம், வாக்குரிமைச் சட்டம்** ஆகியவை இயற்றப்பட்டன.

**பன்னாட்டு விதிமுறைகளும் மனிதாபிமானச் சட்டங்களும்:**

1864க்கும் 1944க்கும் இடைப்பட்ட காலத்தில், ஹென்றி டுனாண்ட் என்பவரின் முயற்சியால் எழுந்த செஞ்சிலுவைச் சங்கத்தின் பன்னாட்டுக் குழு மனித உரிமைகளைப் பாதுகாக்கும் முயற்சியாயிற்று. அது 1899, 1907 ஆகிய ஆண்டுகளின் திஹேக் மாநாடுகளுக்குக் காரணமாயிற்று. இவை ஜெனீவா உடன்பாட்டிற்கு வித்திட்டன.

1920-இல் தோன்றிய சர்வதேச தொழிலாளர் அமைப்பு, 49 மாநாடுகள் மூலம் தொழிலாளர் உரிமையையும் நலனையும் பற்றி எண்ணியது. 1899க்கும் 1907க்கும் இடைப்பட்ட காலத்தில் திஹேக் உடன்பாடுகளின்படி போர்களைப் பற்றிய விதிமுறைகள் உருவாக்கப்படவும், போர்க் கைதிகளைப் பற்றி முடிவு செய்யவும் சமயச் சார்பற்ற பன்னாட்டுச் சட்டம் இயற்றவும் வகை செய்யப்பட்டது. இதன் விளைவாகவே 1939க்கும் 1945க்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்த நிகழ்வுகளால் பன்னாட்டுச் சமுதாயத்தைப் பற்றி எண்ணும் முயற்சி 1949-இல் மீண்டும் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையில் தொழிலாளர் நல அமைப்பு தொழிலாளர் உரிமைகளை நிலைநாட்டியது. 8 மணி நேர வேலை, ஓய்வுக்கேற்ற ஊதியம், சுரண்டல்கள் தவிர்ப்பு, பெண்கள் மற்றும் குழந்தைகளை ஆபத்தான தொழில்களில் ஈடுபடுத்துதலைத் தவிர்த்தல் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. சர்வதேச சங்கம் சிறுபான்மையினர் சிக்கல்கள், சுகாதாரக் கேடு ஆகியவற்றைக் களைய வகை செய்தது. 1925-இல் நடந்த ஜெனீவா அடிமை ஒழிப்பு மாநாடு, 1932-இல் தோன்றிய நிரந்தர அடிமை ஒழிப்பு ஆணையம் ஆகியன அம்முயற்சியில் வெற்றி பெற்றன.

1941-இல் ரூஸ்வெல்ட் அமெரிக்க காங்கிரசில் அறிவித்த பேச்சுரிமை, வழிபாட்டு உரிமை, அச்சம் மற்றும் தேவைகளிலிருந்து விடுதலை போன்ற கருத்துக்கள் உலக நாடுகளிடையே விழிப்புணர்வை உருவாக்கின. 1941-இல் வெளியான அட்லாண்டிக் சாசனம் 1942-இல் வெளியிடப்பட்ட **ஐக்கிய நாடுகள் பிரகடனத்திற்கு** முன்மாதிரியாயிற்று. அதில் மக்களின் சுயநிர்ணய உரிமை, பொருளாதார சமத்துவம், உலக அமைதி போன்றவை வலியுறுத்தப்பட்டன.

1943-இல் நடந்த டெக்ரான் மாநாடு உலக நாடுகளின் சமத்துவத்தைப் பற்றிக் கூறியது. 1945 ஜனவரியில் நடைபெற்ற யால்ட்டா மாநாடு. தொடர்ந்து நடைபெற்ற சான்பிரான்சிஸ்கோ மாநாடு ஆகியவற்றின் முயற்சியால் ஐக்கிய நாட்டவையின் சாசனத்திற்கு இறுதி வடிவம் தரப்பட்டது.

## ஐக்கிய நாட்டவையின் பணிகள்

ஐ.நா. வின் சாசனமானது ஆண் பெண் இருவரும் அனைத்து உரிமைகளையும் பெற்று சமத்துவத்துடன் நேர்மையாக, தன்மானத்தோடு வாழ வகை செய்துள்ளது. ஐ.நா. பொதுச்சபையானது மனித உரிமைகளைப் பாதுகாக்கக் கூடிய பல பணிகளை ஆற்றுகின்றது. உரிமைகள் பற்றிய தீர்மானம் பொதுச்சபையில்தான் கொண்டுவரப்படுகின்றது. ஐக்கிய நாட்டவையின் பாதுகாப்பு சபை, அறங்காவலர் குழு ஆகியன ஜெனீவாவிலுள்ள செயலகத்தின் வாயிலாக பல பணிகளை ஆற்றுகின்றன. மனித உரிமைகளின் தன்மைகளுக்கேற்ப சிறப்புக் குழுக்கள் உருவாக்கப்பட்டு செயல்கள் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. நிறவெறி, தீவிரவாதம், அடிமை முறை, கொத்தடிமை முறை ஆகியவற்றை நீக்கி, மகளிர், சிறுவர் மற்றும் சிறுபான்மையினர் ஆகியோரைப் பாதுகாத்தல் போன்ற வழிகளில் ஐ.நா. சிறப்புப் பணியாற்றுகின்றது.

1966-இல் வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை, பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கை ஆகியவற்றை ஐ.நா. பொதுச்சபை வெளியிட்டது.

1948-டிசம்பர் 10-இல் சர்வதேச (பன்னாட்டு) மனித உரிமைகள் பிரகடனம் ஐ.நா. சபையால் வெளியிடப்பட்டது. (இதைப் பற்றி விளக்கமாகப் பின்னர் காண்போம்). 1963ஆம் ஆண்டின் இன ஒதுக்கல் ஒழிப்புப் பிரகடனம், 1959ஆம் ஆண்டின் குழந்தைகள் உரிமைப் பிரகடனம், 1960ஆம் ஆண்டின் குடியேற்ற நாடுகளுக்கான சுதந்திரப்

பிரகடனம், இயற்கை ஆதாரங்கள் இறையாண்மைப் பிரகடனம் (1962) இவற்றைப் போல ஆறு ஒப்பந்தங்களின் வாயிலாக மனித உரிமை சட்டங்களுக்கு ஒரு வடிவம் கொடுக்க முற்பட்டது.

வேறுபாடுகளை நீக்கி சமத்துவம் காண்பதற்கான ஒப்பந்தம் 1965-இல் மேற்கொள்ளப்பட்டது. 1966-இல் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் சார்ந்த பன்னாட்டு ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1966-இலேயே குடிமையியல் மற்றும் அரசியல் உரிமை குறித்த சர்வதேச ஒப்பந்தமும் செய்து கொள்ளப்பட்டது. 1979-இல் பெண்கள் உரிமையை நிலைநாட்டுவதற்கான சர்வதேச ஒப்பந்தம் செய்யப்பட்டது. 1984-இல் குழந்தைகளுக்கான உரிமைகள் பற்றிய ஒப்பந்தம் ஆகியன மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் மூலம் ஐக்கிய நாட்டவை மேற்கொண்டுள்ள உரிமைகள் பற்றிய செயல்களை நன்கறியலாம்.

ஐக்கிய நாட்டவையின் மனித உரிமை ஆணையம் உரிமைச் சிக்கல்களை விசாரிக்கின்றது. மனித உரிமை பற்றிய தகவல்கள், ஆய்வுகள் ஆகியவற்றின் மூலம் பல மாற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 1993-இல் நியமிக்கப்பட்ட ஐ.நா. மனித உரிமை ஆணையர் ஐ.நா. உறுப்பு நாடுகளில் மக்களிடையே உரிமைகளைப் பற்றிக் கூறுகின்றார். மேலே கூறப்பட்டுள்ளவற்றைப் போல உரிமை மேம்பாட்டிற்காகப் பல அமைப்புகளையும் கொண்டுள்ளது.

**மனித உரிமை ஆணையம்:**

1946 பிப்ரவரியில் இந்த ஆணையம் தோன்றியது. 2007-இல் இது **மனித உரிமைகள் கவுன்சில்** என்றழைக்கப்பட்டது. இதில் 47 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உண்டு. 19, ஜுன் 2007-இல் இதன் முதல் கூட்டம் ஜெனீவாவில் நடைபெற்றது. இவ்வுறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகள். இது ஆண்டுக்கு ஒரு முறை கூடும். மனித உரிமைகள் சட்ட வரைவை உருவாக்குதல், வாழ்வியல், பெண்ணியல் மற்றும் தகவல் பெறும் உரிமைகள் பற்றிய பிரகடனங்களைத் தயாரித்தல், சிறுபான்மையினர் பாதுகாப்பு, பல்வேறு வகையான வேறுபாடுகளைத் தவிர்த்தல், மற்றும் மனித உரிமை பற்றிய

செய்திகளை சேகரித்தல் போன்றவற்றில் அது கவனம் செலுத்தியது. உரிமைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு தொடர்ந்து செய்ய வேண்டிய பணிகளை அறிவிக்கின்றது. தனிநபருடனும் அரசுகளுடனும் இணைந்து செயல்பட்டு மனித உரிமைகளைப் பாதுகாக்க வகை செய்கின்றது.

**சிறுபான்மையினர் பாதுகாப்பு மற்றும் வேற்றுமைகள் தவிர்ப்பு சார்பு ஆணையம்:**

இந்த சார்பு ஆணையம் 1947-இல் மனித உரிமைகள் ஆணையத்தின் சங்கமாக உருவாக்கப்பட்டது. பெயருக்கு ஏற்ப மனித உரிமைகள் பற்றிய செய்திகளை மனித உரிமை கவுன்சிலுக்கு அறிவிக்கின்றது. இதில் 26 உறுப்பினர்கள் உண்டு. அவர்கள் மூன்றாண்டு பதவி வகிப்பர். சிறுபான்மையினர், பழங்குடியினர், குழந்தைகள், கைதிகள், பெண்கள் ஆகியோரின் உரிமைகளைப் பற்றி விவாதித்து முடிவு செய்கின்றது.

**பெண்களின் நிலை பற்றிய ஆணையம்:**

இது 1946-இல் ஐ.நா.வின் பொருளாதார, சமூக சபையினால் உருவாக்கப்பட்டது. பல்வேறு நிலைகளில் பெண்களின் உரிமைகளை இது பட்டியலிட்டு தன்னை உருவாக்கிய சபையிடம் சமர்ப்பிக்கின்றது. ஆண்-பெண் சமத்துவத்தைச் செயல்படுத்த விழைகின்றது. இதில் 45 உறுப்பினர்கள் உண்டு. அவர்கள் மூன்றாண்டுகள் பதவியிலிருப்பர். பெண்களின் பன்முகப் பொருளாதார வளர்ச்சிக்கு இது உதவுகின்றது. பெண்கள் மீதான வன்முறை, சமவேலைக்கு சம ஊதியத்தைப் பெண்கள் பெறாமை, பெண்களின் கீழ்நிலை போன்ற செய்திகளை ஆய்வு செய்து தனது முடிவுகளையும் பரிந்துரைகளையும் தெரிவிக்கின்றது.

**ஐ.நா. மனித உரிமைகள் மையம்:** 1993

இது ஜெனீவாவிலிருந்து செயல்படுகின்றது. மனித உரிமைகள் பற்றிய செயல்களை ஒருங்கிணைக்க இம்மையம் உதவுகின்றது. இதன் செயல்பாட்டிற்காகத் தனிப்பட்ட நிதி உண்டு. இதன் மூலமாக ஐ.நா. வின் மனித உரிமைத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு உறுப்பு நாடுகளால்

நடைமுறைப்படுத்தப் படுகின்றன. பயிற்சிகள், ஆலோசனை ஆகியவற்றையும் உரிமைகள் அடிப்படையில் நல்குகின்றது. மனித உரிமைகளை நடைமுறைப்படுத்தும் செயல்திட்டங்களை உறுப்பு நாடுகளுக்கு வழங்குகின்றது.

**மனித உரிமைக் காவல் மேலாளர்:**

20, டிசம்பர் 1993-இல் இப்பதவி உருவாக்கப்பட்டது. பொதுச் செயலாளரால் நான்கு ஆண்டுகள் பதவியிலிருக்குமாறு நியமிக்கப்படுகின்றார். ஜெனீவாவிலிருந்து செயல்படுகின்றார். உரிமைகள் பற்றிய பல அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளராகச் செயல்படுகின்றார். தனிமனிதர்களின் பல்வேறு வகையான உரிமைகளை இவரது செயல் பாதுகாக்கின்றது. உரிமைகளை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தடைகளை அகற்றுகின்றார். உரிமைகள் மீது ஆலோசனைகளை நல்குகின்றார். தன்னுடைய செயல்களை ஆண்டறிக்கைகளாக மனித உரிமைக்குழு மற்றும் பொதுச் சபையில் சமர்ப்பிக்கின்றார்.

**மனித உரிமை பற்றிய பிற ஐ.நா. அமைப்புகள்:**

தனிநபர் உரிமைகள் பற்றிய சிறப்புக் கண்காணிப்பாளர்கள் பலர் உள்ளனர். 1982-இல் நீதிமன்ற விசாரணைக்குப் பின்னர் நீதி வழங்குவதைக் கண்காணிப்பாளரின் தன்னிச்சையான விசாரணை மூலம் தண்டனை வழங்கல் தவிர்க்கப்படுகின்றது. 1984-இல் நியமிக்கப்பட்ட சித்திரவதைக்கு எதிரான கண்காணிப்பாளர், முறையற்ற வழிகளில் உண்மையை வரவழைக்க முயல்வது தவறு என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார். 1986-இல் மத சகிப்புத் தன்மையைக் கண்காணிக்கும் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டார். 1987-இல் மக்களின் சுயாட்சி உரிமைச் சிறப்புக் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டு சுயாட்சி உரிமையைத் தடுக்கும் முயற்சிகள் தடை செய்யப்பட்டன. 1990-இல் குழந்தைகளை முறைகேடாகப் பயன்படுத்துவதைத் தடைசெய்யத் தனிக் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டார். 1994-இல் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுப்பதற்கான சிறப்புக் கண்காணிப்பாளரும்,

நீதிபதிகளின் சுதந்திரமான செயலுக்கான கண்காணிப்பாளரும், கருத்து வெளியிடும் உரிமைக் கண்காணிப்பாளரும் நியமிக்கப்பட்டனர். 1998-இல் கல்வி உரிமைக் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டார்.

மேலே கூறியவற்றால் மனித உரிமையின் பல பிரிவுகளைப் பாதுகாக்க ஐக்கிய நாட்டவை மேற்கொள்ளும் முயற்சிகளை நன்கறியலாம். அதற்காக அது மேற்கொண்ட பல வழிமுறைகளையும் உணர்தல் வேண்டும். ஐக்கிய நாட்டவையானது உரிமைகளின் பாதுகாவலனாகும். இதனை மேலே கூறப்பட்டுள்ள ஐ.நா. வின் உள் அமைப்புகள் வெளிப்படுத்தும். மனித உரிமைகளைப் பாதுகாக்கும் ஐக்கிய நாட்டவை மனித உரிமைகள் மீறப்படும் போதும், உரிமைகள் தடுக்கப்படும்போதும் ஒரு சேவை மையமெனச் செயல்படுகின்றது.

**பிராந்திய அமைப்புகள்**

ஏராளமான பிராந்திய அமைப்புகள் உலக அமைதிக்காகவும் உரிமைகளைப் பாதுகாக்கவும் செயல்பட்டன. அவற்றைப் பற்றி தெரிந்து கொண்டால்தான் மனித உரிமைகளின் வளர்ச்சி நிலைகளை நாம் நன்கறியலாம்.

**ஐரோப்பியக் குழு:**

ஐக்கிய நாட்டவையானது உலகளாவிய வகையில் உரிமைகள் பற்றிய செயல்களில் ஈடுபட்ட போது தனிப்பட்ட உலக அமைப்புகள் உருவாக்கப்பட்டன. இந்நிலையில் 1949-இல் இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பானது 1950-இல் உரிமைகள் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கியது. இதனைச் செயல்படுத்த வேண்டுமென்பதற்காக ஐரோப்பிய மனித உரிமை ஆணையம், ஐரோப்பிய மனித உரிமை நீதிமன்றம் போன்ற உறுப்புகள் உருவாக்கப்பட்டன. பல வழக்குகள் இந்நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டன. அதைப் போல 1961-இல் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய சாசனம் சித்ரவதை செய்வதும் துன்புறுத்துவதும் மனிதனது உரிமையை பறிப்பதாகும் என்ற கருத்தில் அச்செயலைத் தடுக்க உருவாக்கப்பட்டது.

அமெரிக்க நாடுகள் கூட்டமைப்பின் வாயிலாக அமெரிக்காவில் மனித உரிமைகளைக் காத்து மேன்மை பெற வழிகள் மேற்கொள்ளப்பட்டன. 1948-இல் இவ்வமைப்பின் வாயிலாக அமெரிக்க மனித உரிமைகள் பிரகடனம் வெளியிடப்பட்டது. 1948இலேயே பெண்களுக்கான அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகள் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு பெண்ணியத்தின் பெருமை போற்றப்பட்டது. தொடர்ந்து மனித உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் 1969-ஆம் ஆண்டில் அனைத்து அமெரிக்க மனித உரிமைகள் ஆணையமும், மனித உரிமைகள் நீதிமன்றமும் உருவாக்கப்பட்டன. இவை அமெரிக்க மக்களின் மனித உரிமைப் பாதுகாப்பிற்குச் சான்றுகளாய் உள்ளன.

**ஆப்பிரிக்க ஒற்றுமைக் கழகம்**

இவ்வமைப்பு ஆப்பிரிக்க நாடுகளின் மனித உரிமைகளைப் பேண உருவாக்கப்பட்டது. தன்னுடைய ஆக்கப் பணிகளை நிலைநாட்ட 1987-இல் ஆப்பிரிக்க மக்கள் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் மூலம் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான வழிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்துடன் உரிமை மீறல்கள் தடுக்கப்பட்டு மனித இனம் ஒற்றுமையாகக் காக்கப்பட வழிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மனித உரிமைகள் திடீரென்று தோன்றியவையல்ல. இயற்கை தந்த உரிமைகள் படிப்படியாக காலப்போக்கில் உணரப்பட்டு விரிவு பெற்றன. இன்று உரிமைகள் அனைத்து நாடுகளாலும் ஏற்கப்பட்டு அரசுப் பொறுப்பில் உள்ளன. ஒவ்வொரு நாடும் தன்னுடைய அரசியலமைப்பில் உரிமைகளை இணைத்துள்ளன. உரிமைகளின் முக்கியத்துவத்தை உணர்ந்து, பன்னாட்டு அவையான ஐக்கிய நாட்டவை உரிமைகளைப் பெருக்க, பேணிப் பாதுகாக்க பல அரிய, நல்ல முயற்சிகளை மேற்கொண்டு சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. எனவே உரிமைகள் மனித குலத்தின் மேம்பாட்டிற்கான அடிப்படை என்பது உணரப்பட்டுள்ளது.

- - -

# 6

## பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனம்

## (Universal Declaration of Human Rights)

இப்பிரகடனமானது ஒரு உடன்படிக்கையல்ல. ஆனால் உலக மகாசாசனம் எனக் கூறப்படுமளவிற்கு புகழ்மிக்கது. 1946-ஆம் ஆண்டில் ஐக்கிய நாட்டவையின் பொருளாதாரம் மற்றும் சமூகக் குழுவானது மனித உரிமைகள் ஆணையம் ஒன்றைத் தோற்றுவித்தது. அவ்வாணையத்தின் தலைவராக திருமதி எலியனோர் ரூஸ்வெல்ட் திகழ்ந்தார். இவ்வமைப்பானது கீழ்க்காணும் பணிகளை ஆற்றியது.

- ★ பன்னாட்டு உரிம்மகள் சட்ட வரைவை உருவாக்குதல்
- ★ வாழ்வியல் உரிமைகள், பெண்ணியம் மற்றும் தகவல் பெறும் உரிமை போன்றவற்றில் பன்னாட்டு ஒருங்கிணைப்பை உருவாக்குதல்
- ★ சிறுபான்மையினரைப் பாதுகாத்தல்
- ★ இனம், மொழி, சமயம், ஆண், பெண் போன்ற பாகுபாடுகளைத் தடுத்தல்.

1948-ஜுனில் உரிமைப் பிரகடனத்திற்கான வரைவை உருவாக்கி பொருளாதார சமூக அவையிடம் வழங்கியது. பின்னர் அது ஐ.நா. பொது அவையிடம் சமர்ப்பிக்கப்பட்டது. யாரையும் கட்டுப்படுத்தாத இப்பிரகடனம், இரண்டாம் உலகப்போரின் போது நிகழ்ந்த கொடுமைகளுக்கு எதிராக, உலக நாடுகளின் வழக்கமானதொரு சட்டமாக

ஏற்றுக் கொள்ளப்பட்டது. பலநாடுகளின் சட்டப்படியான ஒப்புதலும் இதற்கு உண்டு. உலகில் அமைதி, நீதி, சுதந்திரம் ஆகியவற்றை நிலைநாட்டும் பொருட்டு ஐ.நா. வின் உறுப்பு நாடுகளை, மனித, பொருளாதார, சமூக உரிமைகளை மேம்படச் செய்யுமாறு கேட்டுக் கொண்டது. உரிமை-கடமை எனப்பட்ட இருநிலைப் பண்புகளை நிலைக்களனாகக் கொண்டு, பிரிக்கமுடியாத உரிமைகளை இப்பிரகடனம் உலகக் குடும்பத்திற்கு விடுதலை, நீதி, அமைதி ஆகிய நோக்குகளுக்காக அறிவித்தது. மனித உரிமைக் குழுவின் உறுப்பினர்களால் அதன் தலைவரான எலியனோர் ரூஸ்வெல்ட்டால் உருவாக்கப்பட்டது. பேராசிரியர் ஜான் ஹம்ப்ரி என்ற கனடா நாட்டினரும், ரெனிகாஸின் என்ற பிரெஞ்சு வழக்கறிஞரும் ஆய்வு செய்து பிரகடனத்தின் வாசகங்களை எழுதினர். மதிப்பு, விடுதலை, சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இப்பிரகடனம் உருவாக்கப்பட்டது. சில அடிப்படை உரிமைகள் அனைத்துக் கண்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளால் ஆய்வு செய்யப்பட்டு எழுதப்பட்டவை. முக்கியமான சமயக் கோட்பாடுகளையும், காந்தியடிகள் போன்ற தலைவர்களையும் கலந்து ஆலோசித்து உருவாக்கப்பட்டது. அடிப்படை உரிமைகள் மனிதனிடமிருந்து பிரிக்க இயலாதவை என்பது இப்பிரகடனத்தின் மற்றொரு பண்பாகும். ஒரு முகவுரையையும் 30 பிரிவுகளையும் உள்ளடக்கிய இப்பிரகடனம், எந்த எதிர்ப்புமின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## முன்னுரை

மனித இனத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் விடுதலை, நீதி மற்றும் அமைதி ஆகிய உரிமைகளை அனுபவிக்க இயல்பான இயற்கையான மதிப்பு மற்றும் சமத்துவம் ஆகியன அங்கீகரிக்கப்பட வேண்டும். மனித உரிமைகளை மறுப்பதும், எதிர்ப்பதும் காட்டுமிராண்டித்தனமான செயல். மனிதன் பேச்சுரிமையுடனும், சமய உரிமையுடனும், அச்சமில்லாத இயல்பான வாழ்க்கையை மகிழ்வுடன் வாழவேண்டும். பல்வேறு கொடுங்கோன்மை, அடக்குமுறை போன்றவற்றால் எழும் கலவரங்கள் தவிர்க்கப்பட்டு அமைதி நிலவ

உரிமைகள் இன்றியமையாததாகும். உரிமைகள் சட்டத்தால் பாதுகாக்கப்பட வேண்டும். நட்புறவு என்ற நோக்கில் நாடுகளுக்கிடையில் ஒருங்கிணைப்பு தேவை. மனிதனின் உரிமைகள், சுயமதிப்பு, பால் வேறுபாடில்லாத சமத்துவம் ஆகியவற்றின் வெளிப்பாடுகளான உரிமைகள் ஐ.நா. அவையின் உதவியுடன் மனிதர்களால் பயன்படுத்தப்பட்டு வாழ்வியல் வெற்றிகளைப் பெற உறுதியளித்துள்ளது. உறுப்பினர்களும் அதற்கான ஒத்துழைப்பையும் உறுதிமொழியையும் தரவேண்டியவர்களானார்கள். உலக நாடுகளின் ஒத்துழைப்பு இப்பிரகடனத்தின் வெற்றிக்குக் காரணமானதென்பது முன்னுரையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இதிலுள்ள 30 பிரிவுகள் வெளிப்படுத்தும் உரிமைகளைத் தொடர்ந்து காணலாம்.

**விடுதலை மற்றும் சமத்துவ உரிமை**

(Right to Freedom and Equality)

முதற்பிரிவின்படி மனச்சாட்சியுடைய மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள் என்ற நிலையில் இனம், மொழி, சமயம், சொத்து, பிறப்பு போன்ற பாகுபாடுகளில்லாமல் அனைத்து உரிமைகளையும், சுதந்திரத்தையும் பெற உரிமையுண்டு. சுதந்திர நாடுகள், அந்நியரின் பொறுப்பிலுள்ள நாடுகள், சுதந்திரமின்றிக் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நாடுகள் ஆகியன அந்தந்த நாட்டின் இறையாண்மை மற்றும் பன்னாடுகளின் மதிப்பு ஆகியவற்றிற்கு உட்பட்டவையாயிருக்க வேண்டும். இது பிரகடனத்தின் இரண்டாவது கூறு ஆகும்.

**வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள்:**

(Civil and Political Rights)

இவை பிரகடனத்தின் 3 முதல் 21 முடியவுள்ள 19 பிரிவுகளில் விளக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் பிரிவு, மனிதர்களுக்குச் சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழ உரிமையுண்டு எனக் கூறுகின்றது.

மனிதர்களை அடிமையாக்குவதும், மனிதர்கள் அடிமையாவதும் கூடாது. அடிமைத்தனம் எல்லா வழிகளிலும் தடுக்கப்பட வேண்டுமென்பது நான்காம் பிரிவு.

மனிதர்களைச் சித்ரவதை செய்தல், மனிதாபிமானமற்ற முறையில் நடத்துதல், மனிதப் பண்புகளுக்குக் கீழான தண்டனை அளித்தல் ஆகியன தவிர்க்கப்பட வேண்டுமென்று ஐந்தாம் பிரிவு குறிப்பிடுகின்றது.

ஒவ்வொருவருக்கும் சட்ட அங்கீகாரம் பெற உரிமையுண்டு என்று ஆறாம் பிரிவு தெரிவிக்கின்றது.

சட்டத்தின் வாயிலான உரிமைகளைப் பெற அனைவருக்கும் உரிமையுண்டு. மனித உரிமைகள் பிரகடனம் கூறும் சட்ட உரிமையையும் பாதுகாப்பையும் எதிர்ப்பவை முறியடிக்கப்பட்டு சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற நோக்கில் சமமாக நடத்தப்பட அனைவருக்கும் உரிமையுண்டு. (7-ஆம் பிரிவு)

அரசியலமைப்பு மற்றும் சட்டங்கள் நல்கியுள்ள அடிப்படை உரிமைகள் நீக்கப்பட்டால் தகுந்த தீர்ப்பாயங்கள் மூலம் பரிகாரம் காணும் உரிமை அனைவருக்கும் உண்டு (8-ஆம் பிரிவு).

யாரையும் காரணமின்றித் தன்னிச்சையாகக் கைது செய்வதோ, சிறையிலடைப்பதோ, நாடுகடத்துவதோ கூடாது. (9-ஆம் பிரிவு)

ஒருவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை, சட்டப்படி தடுக்க, பாரபட்சமில்லாத தீர்ப்பாயங்களின் நியாயமான நேர்மையான பொது விசாரணையைக் கேட்கும் உரிமை அனைவருக்கும் உண்டு. (10-ஆம் பிரிவு)

குற்றம் சாட்டப்பட்ட ஒருவரின் குற்றங்கள் பொது விசாரணையில் நிரூபிக்கப்படும் வரை, அவரை நிரபராதி என்று அனைவரும் ஏற்கக் கூறும் உரிமை அனைவருக்கும் உண்டு. குற்றம் நடந்ததாகக் கூறப்படும் போது அக்குற்றமானது அந்நாட்டின் தேசியச் சட்டங்களாலோ அல்லது

பன்னாட்டுச் சட்டங்களாலோ குற்றமென அங்கீகரிக்கப்படவில்லையெனில் அவரை குற்றவாளியெனக் கொள்ளக்கூடாது. மேலும் குறிப்பிட்ட தவறுக்குப் போதுமான தண்டனை முறையாகத் தரப்பட வேண்டுமேயன்றி கூடுதலாகத் தரப்பட்டால் அச்செயல் ஓர் உரிமை மீறலாகும். (11-ஆம் பிரிவு).

ஒருவர் மற்றொருவரது தனிப்பட்ட குடும்பம், வாழ்க்கை, வீடு, தகவல் பரிமாற்றம் போன்ற செயல்களில் முறையின்றி குறுக்கிட்டு அவருடைய பெயருக்கும் புகழுக்கும் களங்கம் விளைவித்தால் அதிலிருந்து தம்மை சட்டப்படி காத்துக்கொள்ள அனைவருக்கும் உரிமையுண்டு (12-ஆம் பிரிவு).

ஒரு நாட்டின் குடிமக்கள் அனைவருக்கும் அந்நாட்டின் எல்லைக்குள் எங்கு வேண்டுமானாலும் நடமாட, வசிக்க, வாழ்க்கை நடத்த உரிமையுண்டு. அதைப்போல ஒரு நாட்டின் குடிமகன் மற்ற நாடுகளுக்கு அந்தந்த விதிமுறைகளுக்கு உட்பட்டுச் சென்று திரும்பவும் உரிமையுண்டு. (13ஆம் பிரிவு).

சொந்த நாட்டுக் கொடுமைகள், அநீதி ஆகிய காரணங்களுக்காக பிறநாடுகளுக்குச் சென்று அடைக்கலம் தேடவும், தஞ்சம் புகவும் உரிமையுண்டு. ஆனால் இந்த உரிமையை சர்வதேசக் குற்றங்கள், அரசியல் சாராக் குற்றங்கள், ஐக்கிய நாட்டவையின் கொள்கை மற்றும் கோட்பாடு ஆகியவற்றிற்கு எதிராகப் பயன்படுத்த முடியாது. (14ஆம் பிரிவு)

ஒவ்வொரு மனிதனுக்கும் நாட்டின் குடிமகன் என்ற நோக்கில் அந்நாட்டில் வாழ உரிமையுண்டு. அவ்வுரிமையை பறிக்கக்கூடாது. அதே நேரத்தில் ஒரு நாட்டின் குடிமகன் மற்றொரு நாட்டின் குடிமகனாக சட்டப்படி மாறுவதையும் தடுக்க முடியாது. (15-ஆம் பிரிவு)

வயது வந்த எல்லா ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமயம், சாதி, இடம், மொழி ஆகியவற்றைக் கடந்து மணம்புரிந்து, இல்லறம் நடத்த உரிமையுண்டு. அதைப்போல விவாக ரத்திலும் (மணமுறிவிலும்)

இருவருக்கும் சம உரிமை உண்டு. குடும்பம் என்பது ஒரு சமுதாயத்தின் அடிப்படையாதலால் அதனைப் பாதுகாக்க வேண்டியது தனிநபர், சமுதாயம் மற்றும் அரசின் கடமையாகும். (16-ஆம் பிரிவு)

ஒவ்வொரு மனிதனுக்கும் சொத்து வைத்துக் கொள்ள உரிமையுண்டு. அதைத் தனியாகவோ அல்லது கூட்டாகவோ வைத்துக் கொள்ளலாம். அவ்வுரிமையைக் கட்டுப்படுத்தவோ தடுக்கவோ கூடாது. (17-ஆம் பிரிவு)

ஒவ்வொரு மனிதனுக்கும் தான் விரும்பும் கடவுளை வணங்கவும், வழிபடவும் உரிமை உண்டு. சமயத்தை மாற்றிக் கொள்ளவும் உரிமையுண்டு. அதைப்போல, சமயக் கடமைகளைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளலாம்; பரப்பலாம். ஆனால் அவை எதிர்க்கப்படாமல் இருக்க வேண்டும். (18-ஆம் பிரிவு)

மனிதனுக்குக் கருத்துரிமை உண்டு. சுதந்திரமாகக் கருத்துக்களைத் தெரிவிக்கவும், ஒரு குறிப்பிட்ட கருத்தை உருவாக்கவும், ஊடகங்கள் மூலமாகவும் பிறவழிகளிலும் செய்திகளைப் பெறவும் அனுப்பவும் உரிமைகள் உண்டு. (19-ஆம் பிரிவு)

மனிதர்கள் பல காரணங்களுக்காக அமைதியாகக் கூட்டம் கூடுவதற்கும், சங்கங்கள் அமைத்துக் கொள்ளவும் உரிமையுண்டு. ஆனால் சங்கத்தில் சேரும் உரிமை சொந்த விருப்பம் சார்ந்ததாக இருக்க வேண்டும். கட்டாயத்தின் பேரில் அமையக் கூடாது. (20-ஆம் பிரிவு)

அனைத்து நாட்டுக் குடிமக்களுக்கும் தத்தம் நாட்டு அரசாங்கத்தில் பணிபுரிய உரிமையுண்டு. மக்களின் விருப்பப்படி அரசு செயல்பட வேண்டும். அத்துடன் மக்கள் அனைவருக்கும் சட்டங்கள் மற்றும் அரசியலமைப்பு விதிகளின்படி வாக்குரிமை உண்டு. (21-ஆம் பிரிவு)

**பொருளியல், சமூக மற்றும் பண்பாட்டு உரிமைகள்:**
(Economic, Social and Cultural Rights)

மனித உரிமைப் பிரகடனத்தில் 22 முதல் 27 முடியவுள்ள ஆறு பிரிவுகள் பொருளாதார, சமுதாய மற்றும் பண்பாட்டு உரிமைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன.

ஒரு சமுதாயத்தின் உறுப்பினர் அனைவருக்கும் சமூகப் பாதுகாப்பைப் பெறும் உரிமையுண்டு. எனவே சுயகௌரவம், ஆளுமைப் பண்பு ஆகிய அடிப்படைகளில் தேசிய மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பைப் பெறவும் உரிமை பெறுகின்றனர். (22-ஆம் பிரிவு)

தமது வாழ்வுத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள, நியாயமான, முறையான வேலையை மேற்கொள்ளவும், வேலையின்மை ஏற்பட்டால் பாதுகாப்புப் பெறவும் மக்களுக்கு உரிமையுண்டு. வேலைகளிலும் சமமான பாகுபாடற்ற நடத்தையும், சம ஊதியமும் பெற உரிமையுண்டு. உழைக்கும் வர்க்கத்தினருக்கு உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெறவும், சங்கங்கள் அமைத்து அவற்றின் மூலம் உரிமைகளைப் பெறவும் உரிமைகள் உண்டு. (23-ஆம் பிரிவு)

குறிப்பிட்ட வேலை நேரம், வேலை நேரத்தின் போது குறிப்பிட்ட நேர ஓய்வு, ஊதியத்துடன் கூடிய விடுமுறை ஆகியவற்றிற்கு தொழிலாளர்களுக்கு உரிமை உண்டு. (24-ஆம் பிரிவு)

அனைத்து மனிதர்களுக்கும் தரமான வாழ்க்கைக்கான உணவு, உடை, இருப்பிடம், சுகாதாரம் ஆகியவற்றைப் பெற உரிமையுண்டு. வேலையின்மை, உடல்நலக்குறைவு, முதுமை போன்ற காலங்களில் வாழ்க்கைக்கான பாதுகாப்பைப் பெறும் உரிமை உண்டு. குழந்தைகள் அனைவருக்கும் போதுமான சமூகப் பாதுகாப்பு உரிமைகள் தரப்பட வேண்டும். (25-ஆம் பிரிவு)

கல்வியுரிமை எல்லோருக்கும் உண்டு. தொடக்கக் கல்வி இலவசமானதாகவும், கட்டாயமானதாகவும் இருக்க வேண்டும். கல்வித் துறையில் சம உரிமை தரவேண்டும். தொழில் கல்வி, மேல்நிலைக்

கல்வி, சுயதொழில் கல்வி போன்றவை தகுதியடிப்படையில் அனைவருக்கும் தரப்பட வேண்டும். கல்வியின் நோக்கம் மனிதனைச் சிறப்படையச் செய்வதால் அது விரிவானதாக, பல நாடுகளிலும், பலபகுதி மக்களுடனும், மற்றும் சகிப்புத் தன்மையுடனும் அமைதல் வேண்டும். கல்வியின் வாயிலாக அமைதியைக் காக்க வேண்டும். குழந்தைகளின் கல்வியை பற்றித் தீர்மானிக்கும் உரிமை பெற்றோருக்கு உண்டு. (26-ஆம் பிரிவு)

சமூகத்தின் பண்பாடு, கலை மேம்பாடு ஆகியவற்றில் பங்கேற்று அவற்றின் பயனைப் பெற அனைவருக்கும் உரிமையுண்டு. தம்முடைய அறிவியல், கலை மற்றும் இலக்கியப் படைப்புகள் மூலம் ஒவ்வொருவரும் பல நோக்குப் பயன்களைப் பெற உரிமையுடையவர்கள். (27-ஆம் பிரிவு)

**பிற உரிமைகள்:**

ஒவ்வொரு மனிதனுக்கும் கடமைகளும் உரிமைகளும் உண்டு. அவ்வுரிமைகள் பயன்படுத்தப்படும்போது அவை பிறரின் உரிமைகளையும் அதிகாரங்களையும் பாதிக்காதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். (28-ஆம் பிரிவு) இச்சாசனம் தந்துள்ள உரிமைகளை ஐக்கிய நாட்டவையின் நோக்கங்களுக்கு எதிரான வகையில் எந்நிலையிலும் பயன்படுத்தக்கூடாது. (29-ஆம் பிரிவு)

இப்பிரகடனம் குறிப்பிட்டுள்ள உரிமைகளை எந்த அரசோ, தனிப்பட்ட குழுவோ அல்லது நபரோ பாதிப்புக்கு உள்ளாக்க உரிமையற்றவர்கள். (30-ஆம் பிரிவு)

**மதிப்பீடும் தாக்கமும்:**

உரிமைகள் மனிதர்கள் அனைவருக்கும் உரித்தானவை. மனித உரிமைகளை இப்பிரகடனம் ஏற்றுக் கொண்டு சமத்துவ நோக்கில் மனித இனம் அனைத்துக்கும் அவை சொந்தம் என்று அறிவித்தது. மனித இனத்தின் பன்னாட்டு மகாசாசனம் எனப் புகழப்பட்ட இப்பிரகடனம்,

உருவாக்கப்பட்ட சமகாலச் சமுதாயத்தின் எழுச்சிக்கு வித்தாக அமைந்தது. மனித உரிமைகளின் பாதுகாவலனாயிற்று. உரிமைகள் உறுப்பு நாடுகளிடையே பலவிதமான உடன்படிக்கைகளுக்குத் தூண்டுகோலாயிற்று. (எ.கா) அடிமை வாணிபம், விபச்சாரம் ஆகியவற்றைத் தடுக்கும் பன்னாட்டு உடன்படிக்கை (1949), அகதிகள் பாதுகாப்புக்கான உடன்படிக்கை (1951), பெண்களின் அரசியலுரிமை பற்றிய பன்னாட்டு உடன்படிக்கை (1952); அடிமைகள் பற்றிய ஜெனீவா உடன்படிக்கை (1956); திருமணமான பெண்களின் உரிமைகள் (1953) போன்றவை மனித உரிமைப் பிரகடனத்தைப் பின்னணியாகக் கொண்டவை. பிரவுன்லீ கூறியவாறு, இப்பிரகடனம் சர்வதேசச் சட்டம் எனப்படுமளவிற்கு வலிமையுடையது. 1993-ஆம் ஆண்டின் வியன்னா மாநாடு பாராட்டியபடி, அனைத்து நாடுகளைச் சேர்ந்த மக்களுக்கும் உரிமை பெற உதவும் அளவுகோலாக உள்ளது. இப்பிரகடனத்தின் பின்னணியில் தான் இனப்பாகுபாடு (1962), வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் (1966), இனப் பாகுபாட்டைக் களைதல் (1966), நிறவெறி பற்றிய பன்னாட்டு ஒப்பந்தம் (1977) போன்றவை முக்கியமானவையாயின. புதிதாக உருவான ருமேனியா, புரூனை, கேமரூன், காங்கோ, கோபன், மடகாஸ்கர், செனீகல், ஐவரிகோஸ்டு போன்ற நாடுகளின் அரசியல் அமைப்புகளில் இப்பிரகடனத்தின் தாக்கங்கள் உள்ளன. 1993-இல் இந்தியாவில் இயற்றப்பட்ட மனித உரிமைகள் சட்டம் இப்பிரகடனத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. இப்பிரகடனமானது உரிமைகளுடன், உரிமைகளின் நிலை, அவற்றின் பாதுகாப்பற்ற தன்மை, அதை நீக்கும் வழி ஆகியன பற்றிக் கூறுகிறது. எனவே இதை உரிமைகள் பற்றிய தற்காலத்திய மகாசாசனம் எனக் கொள்வது தவறாகாது.

- - -

# 8

# பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் பற்றிய பன்னாட்டு உடன்படிக்கை

## (International Covenant on Economic, Social and Cultural Rights - 1966)

வாழ்வியல் மற்றும் அரசியல் சார்ந்த உடன்படிக்கைகளைப் போல ஐக்கிய நாட்டவையின் பொதுச்சபையானது 16, டிசம்பர் 1966-இல் தீர்மானம் 2200A (XXI) மூலம் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் பற்றிய பன்னாட்டு உடன்படிக்கையை ஏற்றுக் கொண்டது. 175 நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கையானது 5 பகுதிகளாக 31 பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதற்கெனத் தனிப்பட்ட முன்னுரையும் உண்டு. 3, ஜனவரி 1973 முதல் இது செயல்படுத்தப்பட்டது.

முதல் பகுதி, சுயநிர்ணய அடிப்படையில் உறுப்புநாடுகள் மேற்கொள்ள வேண்டிய உரிமைகளையும் அவற்றை நடைமுறைப்படுத்தும் வகையையும் கூறுகின்றது.

இரண்டாம் பகுதி, இவ்வுரிமைகள் பற்றிய உறுதி மொழிகளை பன்னாட்டளவிலும் மற்றும் தனிப்பட்ட நாடுகள் அளவிலும் குறிப்பிடுகின்றது. செயல்முறை விதிகளும், கட்டுப்பாடுகளும் விளக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் பகுதி, பொருளியல், சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் பற்றிய பட்டியலைக் கொண்டுள்ளது.

நான்காம் பகுதி, உறுப்பு நாடுகள் பின்பற்ற வேண்டிய முயற்சிகளையும் அவை பற்றிய அறிக்கையையும் பற்றிக் கூறுகின்றது.

ஐந்தாம் பகுதி, உறுப்பு நாடுகள் கைக்கொள்ள வேண்டிய வழிவகைகள், திருத்தங்கள் செய்யும் முறை போன்றவற்றை விளக்குகின்றது.

**முன்னுரை:**

மனித உரிமைகள், மனிதனின் சுதந்திரம், நேர்மை, அமைதி மற்றும் நீதி ஆகிய அடிப்படைகளைக் கொண்டவை. எனவே உறுப்பு நாடுகளின் அனைத்து மக்களுக்கும் அவை கிடைக்க வேண்டும். ஒவ்வொரு நாடும் தன்னுடைய குடிமக்கள் பலவிதமான உரிமைகளை எவ்விதமான கட்டுப்பாடுகளும் இல்லாமல் பெற வகை செய்ய வேண்டும். இதை நாடுகளும் ஐக்கிய நாட்டவையும் தனிநபர்களும் போற்றிக் காக்க வேண்டும். இது ஒரு சமுதாயக் கடமை ஆகும்.

**சுயநிர்ணய உரிமை:** (Right of Self Determination)

மனிதர்களுக்கு தம்முடைய விருப்பப்படியான சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு நிலைகளைப் பின்பற்றவும் முடிவெடுக்கவும் உரிமையுண்டு. இதுவே சுயநிர்ணய உரிமை ஆகும். இயற்கை நல்கிய உரிமைகளையும், நாடு தந்த உரிமைகளையும் பன்னாட்டு அமைப்புகள் உருவாக்கிய உரிமைகளையும் பயன்படுத்தும் உரிமை மக்களுக்கு உண்டு. சுதந்திரமில்லாமல் மற்ற நாடுகளின் கட்டுப்பாட்டிலுள்ள நாடுகளுக்கு சுய உரிமைகளைப் பெற்றுத்தர பிற நாடுகள் உதவ வேண்டும். (பிரிவு-1)

**பொறுப்புரிமை:** (States' Role of Undertaking)

உடன்படிக்கை நாடுகளனைத்தும் தம்மிடமுள்ள இயற்கைவளம், தொழில்நுட்பம் ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்ளக்கூடிய உரிமைகளை மக்களுக்குத் தர வேண்டும். இவை பன்னாட்டு அளவிலும் பொருந்தக் கூடியவை. இவ்வுரிமைகள் அனைத்தும் அனைவருக்கும் எவ்விதமான பாகுபாடுமின்றி பொருந்தக்கூடியவை. இதற்கான உத்திரவாதத்தை இவ்வுடன்படிக்கை நாடுகள் தந்துள்ளன. வளர்ந்த நாடுகள், வளரும் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட வழிமுறைகளில் உதவ உரிமை கொண்டவை. (பிரிவு-2) இத்தகைய உரிமைகள் ஆண் பெண் என்ற பாலினப் பாகுபாடின்றி பயன்படுத்தப்பட வேண்டும். (பிரிவு-3)

**உரிமைகள் மற்றும் சுதந்திரத்தினை அங்கீகரித்தல்:** (Approval of Rights and Freedom)

ஒப்பந்த நாடுகள் உரிமைகளை அனுபவிப்பதை நடைமுறைப்படுத்த சில கட்டுப்பாடுகளை விதிக்கும் உரிமையுண்டு. உரிமைகள் நெறிமுறைகளுக்கு உட்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். (பிரிவு-4)

உடன்படிக்கையில் கூறப்பட்டுள்ள உரிமைகள், உரிமைகளையும், சுதந்திரத்தையும் அழிக்கக்கூடிய செயல்களில் ஈடுபடுவதற்கல்ல. உறுப்பு நாடுகளில் ஏற்கனவே உள்ள அடிப்படை உரிமைகள் அந்நாட்டின் அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்டவையாகையால் அவற்றை விலக்க இவ்வுடன்படிக்கையின் உரிமைகளைப் பயன்படுத்த இயலாது. (பிரிவு-5)

**பொருளாதார உரிமைகள்:** (Economic Rights)

உடன்படிக்கையை ஏற்றுக்கொண்ட உறுப்பு நாடுகளின் பணியாளர்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தொழில்நுட்ப மேம்பாடு, பயிற்சிகள், மேம்பாட்டிற்கான வழிமுறைகள் ஆகியவற்றை சுதந்திரமாகச் செயல்படுத்த உரிமைகள் உண்டு. தொழிற் பெருக்கம், வேலை வாய்ப்பு ஆகியவற்றிற்கான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். (பிரிவு-6)

**பணிச் சூழல்களை அனுபவிக்கும் உரிமை:**
(Right to Utilise Work Environments)

ஒரு பணியின் பல நோக்குடைய சூழ்நிலைகளை அனுபவிக்க அனைவருக்கும் உரிமையுண்டு. சரியான, நியாயமான ஊதியம், ஆண், பெண் இருபாலருக்கும் சம ஊதியம், பணிப் பாதுகாப்பு, பணி மூப்புக்கு மதிப்பு, திறமை, தகுதிக்கான வாய்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஓய்வு, ஊதியத்துடன் கூடிய விடுமுறை, மருத்துவ வசதி, காப்பீட்டு வசதி போன்றவற்றைப் பெறத் தொழிலாளர்களுக்கு உரிமை உண்டு. (பிரிவு-7)

**தொழிற்சங்கங்கள் அமைக்கும் உரிமை:**
(Right to Form Labour Unions)

தொழிற்செறிவு பெற்றுள்ள இந்நாளில் தொழிலாளர்கள் பெருகியுள்ளனர். அவர்கள் சங்கங்களை அமைத்து தமது பாதுகாப்பு மற்றும் தேவை நிறைவு ஆகியவற்றைப் பெற விழைகின்றனர். அதற்கான உரிமை அனைவருக்கும் உண்டு. அத்தொழிற்சங்கங்கள் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டவையாய் அமைதல் வேண்டும். தொழிற்சங்கங்களுக்கு முறையான வேலை நிறுத்தம் செய்வதன் மூலம் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் உரிமை உண்டு. நாட்டின் இறையாண்மை, பாதுகாப்பு, பன்னாட்டு தொழில்கள் ஆகியவற்றுக்கு எதிர்ப்புகளும் தீங்கும் ஏற்படாவண்ணம் இவ்வுரிமைகள் போற்றப்பட வேண்டும். (பிரிவு-8)

**சமூகப் பாதுகாப்பு:** (Social Security)

ஒவ்வொருவருக்கும் சமூகத்தின் வாயிலாகவும், காப்பீடுகளின் வாயிலாகவும் பாதுகாப்பு பெறும் உரிமையுண்டு. இவ்வுரிமையானது உடன்படிக்கையின் உறுப்பு நாடுகள் அனைத்தாலும் ஒப்புக்கொள்ளப்பட்டதாகும். (பிரிவு-9)

**குடும்பம் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு:**
(Security of Family and Children)

சமுதாயத்தின் அடிப்படை உறுப்பான குடும்பம் பாதுகாக்கப்பட்டால் தான் சமூகம் பாதுகாப்பாகத் திகழும். எனவே சீரான, வளமான குடும்பத்தை அமைக்க மக்களுக்கும், அதற்கு உதவ அரசுக்கும் உரிமையுண்டு. குடும்பம் சீராக இயங்க உரிமையுண்டு. அதைப் போல குழந்தைகளைப் பாதுகாக்க, கல்வி கற்பிக்க வசதி செய்து தர வேண்டும். குழந்தைகளை வேலைக்கு வைத்துக் கொள்வதைத் தடை செய்ய வேண்டும். குடும்பம் மற்றும் குழந்தைகளின் சுற்றுப்புறச் சூழல், சுகாதாரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டும். (பிரிவு-10)

**சீரான வாழ்க்கை அமைத்தல்:**
(Scope for Proper Living)

ஒவ்வொரு நாட்டின் குடிமகனுக்கும் தனது வாழ்க்கைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள உரிமை உண்டு. அவற்றைத் தரவேண்டிய கடமை அரசுக்கு உண்டு. தேவையான அளவு உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றைப் பெற்றுக் கொள்ள அவர்களுக்கு உரிமையுண்டு. அரசையும் அவர்கள் அணுக உரிமையுண்டு. அரசு மக்களின் இத்தகைய உரிமையைப் பாதுகாக்க வேண்டும். தொழில் வளர்ச்சி, ஏற்றுமதி அதிகரிப்பு, சீரான பகிர்வுமுறை போன்றவற்றால் அரசு அவர்களை இன்னல்களிலிருந்து காப்பாற்றி சீராக வாழ வேண்டும் என்னும் அவர்களது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். (பிரிவு-11)

**உடல்நலத்துடன் வாழும் உரிமை:**

(Right of Leading a Healthy Life)

மனிதர்களுக்கு உடல்நலத்துடன் வாழ உரிமையுண்டு. உடல்நலம் மனநலத்திற்கு வழிவகுக்கும். அவற்றிற்கான முயற்சிகளில் பன்னாட்டு உடன்படிக்கை ஈடுபட வேண்டும். குழந்தைகளின் உடல்நலம், இறப்பு விகிதத்தைக் குறைத்தல், தொற்றுநோய்களிலிருந்து காப்பாற்றுதல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல், கடுமையான நோய்களுக்குப் பரிகாரம் தேடல் போன்றவற்றின் வாயிலாக உடல்நலம் பெற்று வாழும் உரிமைகளை நடைமுறைப் படுத்தலாம். (பிரிவு-12)

**கல்வி கற்கும் உரிமை:** (Right of Education)

மனிதனின் மேம்பாட்டிற்கு உறுதுணையாகத் திகழ்வது கல்வியேயாகும். ஒவ்வொருவருக்கும் கல்வி கற்கும் உரிமையுண்டு. கல்வி கற்று தமது சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ளக்கூடிய வகையினை, இனம், திறம், மொழி, சமய வேறுபாடுகளின்றித் தர வேண்டும். கட்டாய இலவச தொடக்கக் கல்வி, தகுதியடிப்படையிலான உயர்நிலை தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றைப் பெற அனைவருக்கும் உரிமையுண்டு. கல்வியானது, தரமானதாய் வாழ்க்கைக்குப் பயன்தரக்கூடியதாய் இருக்க வேண்டும். மேலும் மனிதன் தன் மதிப்பை வளர்த்துக் கொள்ளவும் உரிமையுண்டு. குழந்தைகளுக்குக் கல்வியைத் தருவதில் பெற்றோருக்கும் பாதுகாவலர்களுக்கும் பங்குண்டு. (பிரிவு-13 மற்றும் 14).

**பண்பாடு மற்றும் அறிவியல் வளர்ச்சியைப் பயன்படுத்தும் உரிமை:** (Right to Use the Developed Culture and Scientific Achievements)

ஒவ்வொரு மனிதனுக்கும் பண்பாடுமிக்க வாழ்க்கை வாழவும் இன்றைய அறிவியல் வளர்ச்சியின் பயன்களை அனுபவிக்கவும் உரிமையுண்டு. தன்னுடைய முயற்சியால் படைக்கப்பட்ட அறிவியல்

இலக்கியம் மற்றும் கலைப் படைப்புகளைப் பயன்படுத்தவும் பாதுகாக்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. உறுப்பு நாடுகளுக்கு இத்தகைய உரிமைகளைப் பாதுகாக்க வேண்டிய கட்டாயமும் கடமையும் உண்டு. மேற்கண்ட செயல்களை வளர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டியதும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் நாடுகளின் செயல்களை அங்கீகரிக்க வேண்டியதும் உறுப்பு நாடுகளின் கடமையாகும்.

**மதிப்பீடு:** (Estimate)

வாழ்வியல் மற்றும் அரசியல் சார்ந்த பன்னாட்டு உடன்படிக்கையும் (1966) பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் பற்றிய பன்னாட்டு உடன்படிக்கையும் (1966) மனித உரிமைகள் மற்றும் அவற்றைப் பற்றிய சாசனம் சார்ந்தவை. இவ்வுடன்படிக்கைகளின் ஆண்டறிக்கை பொதுச்சபைக்கு அனுப்பப்பட்டு ஐ.நா. பொதுச் செயலாளரால் பொருளாதார சமூகக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்படுகின்றது. அதன் செயல்பாடுகள் சிறப்பு நிறுவனங்களுக்கும் தேவையடிப்படையில் அனுப்பப்படுகின்றன. இவற்றால் இவ்வுடன்படிக்கைகளின் இயல்பான தன்மைகளை நன்கறியலாம். ஐ.நா. அவையின் ஒப்புதலுடன் பல உதவிகள் பெறப்பட்டு செயல்கள் மேற்கொள்ளப்படுதலால் இதன் உலகளாவிய தன்மைகளை நன்கறியலாம். இவ்வுடன்படிக்கைகள் மனிதர்களின் இயல்பான, பிரிக்க முடியாத உரிமைகளைப் பறைசாற்றுகின்றன. இவ்வுடன்படிக்கைகள் வாழ்வியல், அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளை நிலைநாட்ட பன்னாட்டளவில் உதவுகின்றன. ஐக்கிய நாட்டவைக்கு உறுதுணையாகவும் உள்ளன. இன்றைய உலகில் மனிதனுக்குத் தேவையான அடிப்படை உரிமைகளை நடைமுறைப்படுத்த இவ்வமைப்பு எடுத்த முயற்சிகள் பாராட்டத்தக்கவை.

- - -

## அலகு - மூன்று

- தேசிய மனித உரிமை ஆனையம்.
- மாநில மனித உரிமை ஆனையம்.
- அமைப்பும் செயல்பாடுகளும்.
- கைது, வாரண்ட் விளக்கம்.
- கைது செய்யப்பட்டவரின் உரிமைகள்.
- முனித உரிமைகள் குறித்த சாசனங்கள்.

# 11

## தேசிய மனித உரிமைகள் ஆணையம்

## ( National Human Rights Commission - 1993 )

இந்திய மனித உரிமை பாதுகாப்புச் சட்டப்படி தேசிய மனித உரிமைகள் ஆணையம் உருவாக்கப்பட்டது. அக்டோபர் 1993-இல் இது நிறுவப்பட்டது. 1991 ஆம் ஆண்டு பாரீஸ் நகரில் நடந்த மனித உரிமைகள் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு பற்றிய சர்வதேச கருத்துப் பட்டறையின் முடிவுப்படி இவ்வமைப்பு உருவாக்கப்பட்டது. ஐக்கிய நாட்டவையின் அங்கீகாரம் பெற்ற இந்த ஆணையம் மனித உரிமைகளில் இந்தியா ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாக உள்ளது. இதன் பலவிதமான பண்புகளைக் காணலாம்.

**அமைப்பு** (constitution)

1993-ஆம் ஆண்டு நவம்பரில் இயற்றப்பட்ட மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் மூன்றாம் பிரிவு தேசிய மனித உரிமைகள் ஆணையத்தைப் பற்றி விளக்குகின்றது. இவ்வமைப்பில் ஒரு தலைவர் மற்றும் நான்கு உறுப்பினர்கள் இருப்பர். இந்திய உச்சநீதிமன்றத்தின் தலைவராயிருந்த ஒரு தலைமை நீதிபதி இதன் தலைவராயிருப்பார். நான்கு உறுப்பினர்களுள் ஒருவர் உச்சநீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதியாகவும், ஒருவர் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற தலைமை

நீதிபதியாகவும், மற்ற இருவர் மனித உரிமைப் பணிகளில் நேரடித் தொடர்பும் அனுபவமும் உடையவர்களாக இருப்பர். மனித உரிமைகளின் பாதுகாப்புச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு கூறும் பணிகளை நிறைவேற்றுகையில் சிறுபான்மை இனத் தேசிய ஆணையத் தலைவர், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கான தேசிய ஆணையத் தலைவர், பெண்களுக்கான தேசிய ஆணையத் தலைவர் ஆகியோர் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் உறுப்பினர்களாகச் செயல்படுவர். இதற்கெனத் தனிப்பட்ட பொதுச் செயலர் ஒருவர் உண்டு. ஆணையத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு தேவைக்கு ஏற்பச் செயல்படுவார். இதன் தலைமையகம் டில்லியில் உள்ளது. ஆனால் இந்த நடுவணரசின் ஒப்புதலுடன் இந்த ஆணையம் தனது அலுவலகங்களை இந்தியாவின் பிற பகுதிகளிலும் நிறுவிக் கொள்ளலாம்.

**நியமனங்கள்**

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவரையும் உறுப்பினர்களையும் கீழே தரப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் நியமனம் செய்வார். அக்குழுவில் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாவர்.

| | |
|---|---|
| இந்தியப் பிரதமர் | - தலைவர் |
| லோக்சபைத் தலைவர் (சபாநாயகர்-மக்களவைத்தலைவர்) | - உறுப்பினர் |
| இந்திய உள்துறை அமைச்சர் | - உறுப்பினர் |
| லோக்சபை (மக்களவை) எதிர்க்கட்சித் தலைவர் | - உறுப்பினர் |
| ராஜ்ய சபாவின் (மாநிலங்களவையின்) எதிர்க்கட்சித்தலைவர் | - உறுப்பினர் |
| மாநிலங்களவையின் துணைத்தலைவர் | - உறுப்பினர் |

இவர்களைத் தவிர பதவியிலிருக்கும் உச்சநீதிமன்ற நீதிபதியோ, தலைமை நீதிபதியோ அவரால் பரிந்துரைக்கப்பட்டவரோ கூட உறுப்பினராக நியமிக்கப்படலாம்.

**பதவி நீக்கம்**

ஆணையத் தலைவர் அல்லது உறுப்பினர் தவறு செய்தால் குடியரசுத் தலைவரின் பரிந்துரைப்படி உச்சநீதிமன்றம் அவர்களை விசாரிக்கும். தவறு செய்யப்பட்டுள்ளது என்பது உறுதியானால் உச்சநீதிமன்றம் குடியரசுத் தலைவருக்கு அறிக்கை மூலம் தெரிவிக்கும். அவ்வறிக்கையின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் குற்றம் செய்தவரைப் பதவி நீக்கம் செய்ய ஆணையிடுவார். தலைவரோ அல்லது உறுப்பினர்களோ கடன்பட்டு அதனைத் திரும்பச் செலுத்தவில்லை என்றாலும், பதவியைத் தவிர வேறு வகைகளில் வருவாயை ஈட்டினாலும், பணியைச் செவ்வனே செய்ய இயலாத மனநிலை ஏற்பட்டாலும், உடலளவில் பாதிக்கப்பட்டாலும், நீதிமன்றத் தீர்ப்பின்படி மனநிலை சரியில்லாதவர் என்றாலும், ஒழுக்கக் குறைபாடுடையவராயிருந்தாலும், ஏதோ ஒரு குற்றத்திற்காக சிறைப்பட்டிருந்தாலும் அவர்கள் பதவி நீக்கம் செய்யப்படுவர்.

**பதவிக் காலம்**

தலைவராக நியமிக்கப்பட்டவர் ஐந்தாண்டுகள் அல்லது அவரது 70 வயது முடிய பதவியில் இருக்கலாம். உறுப்பினர்களின் பதவிக் காலமும் ஐந்து ஆண்டுகளே. அவர்களது பதவி மேலும் ஐந்து ஆண்டுகள் நீட்டிக்கப்படலாம். இருப்பினும் அவர்கள் 70 வயதுக்கு மேல் பதவி வகிக்க முடியாது. பதவிக் காலம் முடிந்தபின் தலைவர் அல்லது உறுப்பினர்கள் மைய, மாநில அரசுகளில் பதவியை வகிக்க முடியாது. தலைவர் பதவிக் காலத்தில் மரணமடைந்தாலோ, பதவியை இராஜினாமா செய்தாலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ பதவி காலியானால் புதிய தலைவர் நியமிக்கப்படும் வரை உறுப்பினர் ஒருவர் தற்காலிகமாக அப்பதவியை வகிப்பார். தலைவர் விடுப்பிலிருந்தால் குடியரசுத் தலைவரின் ஒப்புதலின் அடிப்படையில் உறுப்பினர் ஒருவர் அப்பதவியிலிருப்பார்.

### அலுவலர்கள்

இந்திய நடுவணரசில் செயலராகத் தகுதியுடையவ் ஆணையத்தின் செயலராகப் பணிபுரிவார். காவல் துறைத் தலைமை நிலையிலுள்ள ஒருவர் காவல் மற்றும் புலனாய்வுப் பணிகளுக்காக நியமிக்கப்படலாம். பிற தொழில்நுட்ப அலுவலர்கள் மற்றும் பிற அலுவலர்களையும் மத்திய அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நியமித்துக் கொள்ளலாம்.

பணியாளர்களை நியமிப்பதில் ஆணையம் தன்னாட்சி பெற்றுள்ளது. ஆணையத் தலைவரின் விருப்பப்படி எங்கும்; எப்போதும் கூட்டம் நடத்தப்படலாம். ஆணையம் தமக்கு வழங்கப்பட்டுள்ள நிதியை முறைப்படி செலவிடலாம். ஆணையத்தன் முடிவுகள் ஆணையச் செயலர், அதன் தலைவர் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு நபரால் உறுதி செய்யப்பட வேண்டும்.

### ஆணையத்தின் பணிகள்

### பொது அதிகாரங்கள்

பலவித மனித உரிமைகள் தொடர்பான சிக்கல்களை அணுக ஆணையம் பல அதிகாரங்களைப் பெற்று கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்கின்றது.

ஆணையமானது உரிமை மீறல்; அதற்குத் துணை நின்றமை, ஆகியவற்றை தனிநபர் அல்லது அவரது சார்பில் தாக்கல் செய்யப்பட்ட புகார்களின் அடிப்படையில் விசாரிக்கின்றது.

மனித உரிமை மீறல் வழக்குகளில் நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் ஆணையம் தலையிடலாம்.

மாநில சிறைச்சாலைகளிலும் சீர்திருத்தப்பள்ளிகளிலும் இருக்கும் குற்றவாளிகளை பாதுகாப்பு, சீர்திருத்தம், சிகிச்சை போன்ற காரணங்களுக்காக அரசுக்குத் தகவல் கொடுத்துவிட்டு அவர்களுக்கு வாழ்வளிக்கத் தேவையான செயல்களை ஆணையம் மேற்கொள்ளலாம்

ஆணையமானது அரசியலமைப்பு மற்றும் அரசின் சட்டங்களுக்கு உட்பட்டு மனித உரிமைகள் பாதுகாப்புக்கான பரிந்துரைகளைச் செய்யலாம். பாதுகாப்பு முயற்சிகளை மறுபரிசீலனை செய்யலாம்.

மனித உரிமைகளைத் தகர்க்கக் கூடிய அல்லது அச்சுறுத்தக்கூடிய தீவிரவாதம் போன்றவற்றிற்கான காரணங்களை ஆணையம் ஆய்ந்தறிந்து தகுந்த பரிகார நடவடிக்கைகளைப் பரிந்துரைக்கலாம்.

மனித உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்படிக்கைகள், ஆவணங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்து அவற்றை நடைமுறைப்படுத்த ஆணையம் உதவுகின்றது.

மனித உரிமைகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ள உதவி செய்கின்றது.

மனித உரிமைகளை மக்களிடம் பரப்பக் கூடிய வகையில் பாதுகாப்பான வழிகளை மேற்கொள்ளுகின்றது. அதனைச் செயல்படுத்த கருத்தரங்குகள், பயிலரங்கங்கள், ஊடகங்கள் போன்ற பலவற்றையும் பயன்படுத்துகின்றது. மக்களிடையே உரிமைகளைப் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்துகின்றது. அரசு சாராத தொண்டு நிறுவனங்களையும் பயன்படுத்துகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக மனித உரிமைக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க ஆணையம் வகை செய்கின்றது.

**விசாரணை சார்ந்த அதிகாரங்கள்**

மனித உரிமைகள் மீதான புகார்களை விசாரிக்க 1908 ஆம் ஆண்டின் வாழ்வியல் நடைமுறைச் சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதன்படி சாட்சிகளிடம் சத்திய வாக்குமூலம் வாங்கி விசாரணையைத்

தொடர்வது, ஆவணங்கள் தரும் சாட்சியங்களைப் பெற்று விசாரிப்பது மற்றும் மேலே கூறப்பட்டுள்ள செயல்முறைகளை ஆணையிடும் உரிமை ஆணையத்திற்கு உண்டு.

தன்னால் நியமிக்கப்பட்ட அலுவலர்களைக் கொண்டு நீதிமன்ற மற்றும் அலுவலகங்களிலிருந்து தேவைப்படும் ஆவணங்களைக் கோரி பெற்று பரிசீலிக்கவும் உரிமையுண்டு. எந்த ஒரு தனிநபரிடமிருந்தும் தேவையான தகவல்களைப் பெற ஆணையம் உரிமை பெற்றுள்ளது. அத்தகைய நபர் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 176, 177 இன்படி கேட்கப்படும் தகவல்களைக் கொடுக்க வேண்டியவர் ஆவார்.

இந்திய தண்டனைச் சட்டத்தின் 100ஆம் பிரிவின்படி விசாரணைக்குத் தேவைப்படும் ஆவணங்களை தம்மால் நியமிக்கப்படும் அலுவலரைக் கொண்டு எவ்விடத்திலிருந்தும் தேடிக் கண்டுபிடிக்கும் உரிமை ஆணையத்திற்கு உண்டு.

தேசிய மனித உரிமைகள் ஆணையமானது ஒரு உரிமையியல் நீதிமன்றமாகச் செயல்படுகின்றது. இந்தியத் தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 175, 178, 179, 180 மற்றும் 228இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களை விசாரிக்கும் ஆணையம், தன்னுடைய விசாரணைக்குப்பின் குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் ஆகியவற்றுடன் இந்திய குற்றவியல் சட்டம் பிரிவு 348-இன் படி குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்புகின்றது. இவற்றிலிருந்து ஆணையமானது ஒரு வாழ்வியல் நீதிமன்றமாகச் செயல்படுதலைக் காணலாம்.

**புலனாய்வு அதிகாரங்கள்**

மனித உரிமை மீறல்களைப் பற்றிப் புலனாய்வு செய்யத் தேவையான பணியாளர்களை ஆணையம் அமர்த்திக் கொள்ளலாம். மைய, மாநில அரசு அலுவலர்கள் மற்றும் புலனாய்வு நிறுவன அலுவலர்கள் ஆகியோரைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பிறரையும் புலனாய்வாளர்களாகவோ பணியாளர்களாகவோ ஆணையம் அமைத்து

கொள்ளலாம். புலனாய்வு அமைப்பானது ஆணையத்திற்கு உட்பட்டு யாரையும் விசாரிக்கலாம்; எந்த ஆவணத்தையும் கண்டாய்ந்து பயன்படுத்தலாம்; ஆவணங்களை எங்கிருந்தும் பெறலாம். புலனாய்வுத்துறை பெறும் வாக்குமூலத்தை ஆணையத்திற்கான சாட்சியாகக் கொள்ளலாம். புலனாய்வு அறிக்கையானது திட்டமிட்ட குறிப்பிட்ட காலத்திற்குள் ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் ஆணையம் விசாரணையை மேற்கொள்ளலாம்.

## புகார்கள் அனுப்பும் முறையும் ஆணையத்தின் நடைமுறைகளும்

ஆணையத்துக்கு அனுப்பும் புகார்களுக்கு எவ்வித கட்டணமும் கிடையாது. புகாரை தபால் போன்ற எவ்வகையிலும் பாதிக்கப்பட்டவரோ அல்லது அவர் சார்பாக யார் வேண்டுமானாலும் அனுப்பலாம். அப்புகார் இந்திய அரசியலமைப்பில் ஏற்கப்பட்ட எம்மொழியிலும் அனுப்பப்படலாம். அப்புகார்களைப் பற்றிய செய்திகளை செல்போன் மற்றும் இணையதளம் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

## நடைமுறைகள்

புகார்கள் பெறப்பட்டவுடன் பதிவு செய்யப்பட்டு அதற்கான எண் தரப்படும். பின்னர் அந்தப் புகார் இரண்டு வாரங்களுக்குள் இரு நீதிபதிகளால் பரிசீலிக்கப்படும். ஒரு ஆண்டிற்கு முன்பு நடைபெற்ற சம்பவம் பற்றிய புகார்கள், பிற நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள வழக்கு சம்பந்தப்பட்ட புகார்கள், முறைப்படியான முகவரி இல்லாத புகார்கள், ஆணையத்தின் எல்லா வரையறைக்கு அப்பாற்பட்ட புகார்கள் போன்றவற்றை ஆணையம் ஏற்பதில்லை. புகாரை ஏற்பதோ மறுப்பதோ புலனாய்வுக்கு விடுவதோ ஆணையத்தின் தலைவரைச் சார்ந்தது. அவர் புகாரை ஏற்காமல் தள்ளிவிடலாம். புகார்கள் ஏற்கப்பட்டபின் தொடர்புடைய மைய, மாநில அரசு அதிகாரிகளின் அறிக்கை பெறப்படுகின்றது. புகார்

கொடுத்தவரை விசாரிக்கவும் ஆணையத்திற்கு உரிமையுண்டு. புகார்களை நிரூபிக்க சாட்சியங்கள் இருந்தால் அவர்களிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு தீர்ப்புகள் வழங்கப்படுகின்றன. புலனாய்வின் வழங்கப்பட்ட தீர்ப்புகள் மீது மீண்டும் விசாரணை செய்ய ஆணையத்திற்கு உரிமையுண்டு.

**விசாரணைக்குப் பின் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள்**

விசாரணைக்குப் பின் உரிமை மீறல் உள்ளதென்று முடிவு செய்யப்பட்டால் ஆணையம் அந்நபர் மீது நடவடிக்கை எடுக்க அரசுக்குப் பரிந்துரைக்கலாம். தகுந்த நீதிமன்றங்கள் குறிப்பிட்ட ஆணைகளை பிறப்பிக்க கட்டாயப்படுத்தலாம். உரிமை மீறலால் பாதிக்கப்பட்டவருக்கு நிவாரணம் பெற்றுத் தர ஆணையம் நடவடிக்கை எடுக்கின்றது. அதன்பின் அரசு அல்லது அதிகார அமைப்புகளுக்கு நடவடிக்கைக்காக பரிந்துரை செய்யலாம். விசாரணையின் நகல் மனுதாரர் மற்றும் அவரது பிரதிநிதிக்கு வழங்கப்படலாம். ஆணைய அறிக்கை மீதான நடவடிக்கையை ஆணையத்திற்கும் பொது மக்களுக்கும் அரசு தர வேண்டும்.

படைப் பிரிவினரின் உரிமை மீறல் இந்நாட்டில் நடைபெற்றால் நடுவண் அரசிடமிருந்து உரிமை மீறல் பற்றிய தகவல்களை அறிக்கையாகப் பெறலாம். அதன் பின்பு புகாரை விசாரித்து நடுவணரசுக்குத் தன் பரிந்துரைகளை அனுப்பும். நடுவணரசு தான் மேற்கொண்ட முடிவுகளையும் செயல்களையும் பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அவ்வறிக்கையின் நகலை, தகவல் அடிப்படையில் மனுதாரருக்கும் தரலாம்.

**ஆண்டறிக்கை**

ஆணையம் தன்னுடைய ஓராண்டுச் செயல்களைப் பற்றிய அறிக்கையை மைய மற்றும் மாநில அரசுகளுக்கு அறிவிக்கும். தேவையான முக்கியமான செயல்களைப் பற்றிய சிறப்பு

அறிக்கைகளையும் தரலாம். நடுவணரசும், மாநில அரசுகளும் ஆணையம் சார்பாகத் தம்மால் மேற்கொள்ளப்பட்ட செயல்களை நாடாளுமன்றத்தில் அறிக்கையாகத் தாக்கல் செய்யலாம்.

**சாதனைகள்**

தேசிய மனித உரிமை ஆணையமானது ஆண்டுதோறும் பெருகி வரும் எண்ணிக்கையில் புகார்களைப் பெற்றுத் தீர்வு காண்கின்றது. தற்காலச் சூழல்களுக்கேற்ப கணினிகள் மூலம் புகார்கள் மீது விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மனித உரிமைகள் மையம் என்ற அமைப்பு மாநிலங்களிலும், காவல்துறை அலுவலகங்களிலும் உருவாக்கப்பட்டுள்ளன. தனிநபர் புகார்கள் மீது நடவடிக்கை, காவல்துறை, சிறைத்துறை நிர்வாகச் சீர்திருத்தம் போன்ற செயல்களைச் செய்வதன் வாயிலாகத் தவறுகளைத் தடுக்கிறது. கடுமையான நடவடிக்கைகளை எடுத்து காவல்நிலைய மரணங்கள், பெண்களைப் பலாத்காரம் செய்து கொடுமைப் படுத்துதல் ஆகியவை பற்றிய அறிக்கைகளைப் பெற வகை செய்துள்ளது. சிறுபான்மையோர், பின்தங்கியோர் போன்ற பிரிவினருக்கு ஆதரவாகச் செயல்பட வழிகள் செய்யப்பட்டுள்ளன. பள்ளிகள், பல்கலைக்கழகங்கள் அளவில் மனித உரிமைகளைப் பற்றிய விபரங்கள் பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளன. மனித உரிமைகள் பற்றிய தேசீயக் கல்வித் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. பயிற்சி முகாம்களின் வாயிலாக பலதுறைப் பிரிவினருக்கும் மனித உரிமை பற்றிய விழிப்புணர்வை உருவாக்குகின்றது. சுகாதாரம், சுற்றுச்சூழலைப் பேணுதல், கொத்தடிமை, குழந்தைத் தொழிலாளர் முறை போன்ற குறைகளைக் களைய பல செயல்களைச் செய்கின்றது. இந்தியாவில் இயற்கையின் சீற்றத்தால் நிகழும் துயரங்களிலிருந்து மக்களைக் காக்கும் முயற்சிகள் பற்றிய செயல்களையும் கண்காணிக்கின்றது. மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டியதன் இன்றியமையாமையை உணர்த்துகின்றது.

- - -

# 12

# மாநில மனித உரிமைகள் ஆணையம் - அமைப்பும் செயல்பாடுகளும்

இந்தியாவின் மைய அல்லது தேசிய மனித உரிமைகள் ஆணையத்தைப் போன்று மாநிலங்களிலும் மனித உரிமைகள் ஆணையங்கள் இயங்குகின்றன. அவை மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் 21-ஆம் பிரிவின்படி உருவாக்கப்பட்டுள்ளன.

## அமைப்பு

மாநில மனித உரிமைகள் ஆணையத்தில் ஒரு தலைவரும் நான்கு உறுப்பினர்களும் உள்ளனர். உயர்நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி இதன் தலைவராக இருப்பார். உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர், மாவட்ட நீதிபதியாக இருந்தவர், மற்றும் மனித உரிமைகளில் அனுபவமுடைய வேறு இருவரையும் சேர்த்து மொத்தம் நான்கு உறுப்பினர்கள் இருப்பார்கள். செயலர் ஒருவர் மூலம் அதன் பணிகள் நடைபெறும். ஆணையத்தின் தலைமையிடத்தை அந்தந்த மாநில அரசுகளே தீர்மானிக்கும்.

## அதிகார எல்லை

மாநில ஆணையமானது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாவது அட்டவணையில் கூறப்பட்டுள்ள மாநில மற்றும் பொதுப்பட்டியலில் உள்ள அதிகாரங்கள் மீது மட்டுமே தலையிடலாம்.

வேறு அமைப்புகள் ஒரு உரிமை மீறலை விசாரித்துக் கொண்டிருக்கும் போது மாநில ஆணையங்கள் அது தொடர்பாக விசாரிக்க முடியாது.

**நியமனங்கள்**

மனித உரிமை ஆணையத்தின் மாநிலப் பிரிவுகளின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை அந்தந்த மாநிலங்களின் ஆளுநர்கள் நியமனம் செய்கின்றார்கள். ஆனால் மாநில முதலமைச்சரைத் தலைவராகவும், மாநில சட்டப் பேரவைத் தலைவர், மாநில உள்துறை அமைச்சர், மற்றும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழுவின் பரிந்துரைகளின் பேரில் ஆளுநர் அத்தகைய நியமனங்களை மேற்கொள்கின்றார். மாநிலங்களில் சட்டமன்ற மேலவைகள் இருந்தால் அவற்றின் தலைவர்களும் தேர்வுக்குழு உறுப்பினர்களாவர். பதவியிலுள்ள உயர்நீதிமன்ற அல்லது மாவட்ட நீதிமன்ற நீதிபதிகளை உறுப்பினர்களாக நியமிக்க உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியின் ஒப்புதல் தேவை.

**பதவிக் காலம்**

70

மாநில மனித உரிமைகள் ஆணையத் தலைவர் ஐந்தாண்டுகள் அல்லது 70 வயது முடிய பதவியிலிருப்பார். அவர் மீண்டும் ஒருமுறை பதவி வகிக்கலாம். தன் பதவிக் காலம் முடிந்தபின் அவர் எவ்விதமான அரசுப் பதவியையும் வகிக்க முடியாது. தலைவர் இறந்துவிட்டால் அல்லது பணியாற்ற முடியாத நிலை ஏற்பட்டால் உறுப்பினர் ஒருவரை அப்பொறுப்பிலிருக்குமாறு ஆளுநர் அறிவிப்பார். மாநில அரசுகள் ஆணையத்தின் செயல்களைச் செய்யத் தேவையான அலுவலர்களைத் தருகின்றது. மாநில ஆணையங்கள் தேவைக்கேற்ப தொழில்நுட்ப மற்றும் அறிவியல் வல்லுநர்களை நியமித்துக் கொள்ளலாம். மைய ஆணைய முறைகளைப் பின்பற்றியே மாநில ஆணையங்களின் உறுப்பினர்களும் பதவி நீக்கம் செய்யப்படலாம்.

## வரலாற்றுப் படிநிலை

இந்தியாவில் கேரளா, தமிழ்நாடு, மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம், பஞ்சாப், இராஜஸ்தான், மணிப்பூர், அஸ்ஸாம், இமாச்சலப் பிரதேசம், ஜம்முகாஷ்மீர், சட்டீஸ்கர் ஆகிய 13 மாநிலங்களில் மனித உரிமை ஆணையங்கள் செயல்படுகின்றன. 1995-இல் முதன்முறையாக மேற்கு வங்காளத்தில் இவ்வாணையம் செயல்படலாயிற்று. 1996-இல் அஸ்ஸாமிலும், தமிழகத்திலும் ஆணையங்கள் உருவாக்கப்பட்டன. 1997-இல் மத்தியப் பிரதேசத்தில் இது தோற்றுவிக்கப்பட்டது.

## பணிகள்

மனித உரிமை மீறல், உரிமை மீறலுக்குத் துணை நிற்றல், மனித உரிமைகள் மீறப்படுவதை அரசு அதிகாரிகள் கண்டுகொள்ளாதிருத்தல் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களின் புகார்களை விசாரித்தல்.

நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள உரிமை மீறல் வழக்குகள் தீர்க்கப்பட உதவி செய்தல்.

சிறைச்சாலைகள், பாதுகாப்பு இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள் ஆகியவற்றைப் பார்வையிட்டு தேவையான பரிந்துரைகளை வழங்குதல்.

மனிதஉரிமையைப் பாதிக்கக்கூடிய தீவிரவாதம் போன்ற செயல்கள் மற்றும் பிற காரணங்களை ஆய்ந்தறிந்து தக்க தீர்வுகள் ஏற்பட வகை செய்தல்.

மனித உரிமைப் பாதுகாப்புச் சட்டங்கள் முறைப்படி செயல்படுவதைக் கண்காணித்துச் செவ்வனே நடைபெறச் செய்தல்.

மனித உரிமை பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே உருவாக்க பயிலரங்குகள், கருத்துப் பட்டறைகள், மாநாடுகள் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்துதல்.

மனித உரிமைகள் வளர்ச்சிக்கான ஆய்வுகளை மேற்கொள்ளல்.

அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள் ஒருங்கிணைந்து செயல்படச் செய்தல்.

**அதிகாரங்கள்**

மாநில மனித உரிமைகள் ஆணையம் உரிமையியல் நீதிமன்றம் பெற்றுள்ளதைப் போன்ற பல அதிகாரங்களைப் பெற்றுள்ளது. அதன்படி சாட்சிகளிடம் உண்மை பற்றிய வாக்குறுதிகளைப் பெற்று விசாரிக்கலாம். இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டம் 100ஆம் பிரிவின்படி ஆவணங்களைப் பெற உரிமையுடையது. விசாரணைக்கான தகவல்களுக்காக ஆணையம் யாரையும் அணுகலாம். ஆவணத்தையும் ஆவண நகல்களையும் பெற ஆணையம் உரிமையுடையது. விசாரணை, ஆவண ஆய்வு போன்றவற்றிற்காக அலுவலர்களை நியமிக்கலாம். இந்தியத் தண்டனைச் சட்டம் 175, 178, 179, 189, 228 ஆகிய பிரிவுகளின்படி குற்றங்கள் பற்றிய செய்திகளை குற்றவியல் நடுவருக்கு அனுப்பிவைக்க ஆணையத்துக்கு உரிமையுண்டு. அத்தகைய வழக்கினை குற்றவியல் நடைமுறைச் சட்டம் 348-ன்படி நீதிபதி விசாரிப்பார். இந்தியத் தண்டனைச் சட்டம் 176, 177 ன்படி ஒருநபர் ஆணையம் கேட்கும் தகவல்களைக் கட்டாயம் தரவேண்டும். அவ்வாறு பெற ஆணையத்திற்கு அதிகாரம் உண்டு.

புலனாய்வு தேவைப்படும் காலங்களில் மாநில ஆணையம், மாநில அரசுகளின் ஒப்புதலுடன் மாநில புலனாய்வுத் துறை அலுவலர்களின் பணிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அவ்வலுவலர்கள் சாட்சியங்களை அழைத்து விசாரிக்கலாம். ஆதாரங்களைத் தேடிச் சமாப்பிக்கக் கட்டளை இடலாம். தேவையான அலுவலகங்களிலிருந்து தேவைப்படும் ஆவணத்தையோ அல்லது அதன் நகல்களையோ பெற்றுக் கொள்ளலாம்.

புலனாய்வுப் பிரிவினர் முன் தரப்படும் வாக்குமூலம் ஆணையத்திடம் சாட்சிகள் வழங்கும் வாக்குமூலத்திற்குச் சமமானதாகும். புலன் விசாரணை செய்வோர் ஆய்வு முடிந்ததும் அறிக்கையைப் பெற ஆணையம் அதிகாரம் பெற்றது.

**மாநில ஆணையங்களால் ஏற்க மறுக்கப்படும் புகார்கள்**

- நீதிமன்றம் அல்லது நடுவர் மன்றத்தில் விசாரணையிலுள்ள புகார்கள்.
- உரிமையியல் அல்லது சொத்துரிமை குறித்த புகார்கள்
- ஒரு சம்பவம் நடந்து ஓராண்டு காலத்திற்குப் பின் அனுப்பப்படும் புகார்கள்.
- தெளிவில்லாத முகவரியுடனோ புனைப்பெயருடனோ அனுப்பப்படும் புகார்கள்.
- அரசியலமைப்புச் சட்டத்தின் ஏழாம் அட்டவணைப் பட்டியலில் தொடர்புடைய புகார்கள்.
- பணிகள் பற்றிய அடிப்படை விதிகள் மற்றும் தொழில் தகராறு சார்ந்த புகார்கள்.
- மனித உரிமைகள் மீறப்பட்டதற்கான குறிப்புகள் இல்லாத புகார்கள்.
- ஏற்கனவே தீர்க்கப்பட்ட அல்லது முடிவு செய்யப்பட்ட விவகாரங்கள்.
- வேறு ஆணையத்திற்கு ஏற்கனவே அனுப்பப்பட்ட புகார்கள்.
- ஆணைய வரம்புக்கு அப்பாற்பட்ட புகார்கள்.

**விசாரணைக்குப் பின் ஆணையம் மேற்கொள்ளும் பணிகள்**

விசாரணைக்குப் பின் மாநில ஆணையம் கீழ்க்கண்டவற்றுள் ஏதாவதொரு முடிவை எடுக்கின்றது:

ஒரு அரசு ஊழியர் மனித உரிமையை மீறியுள்ளார் அல்லது அவரால் உரிமை மீறலைத் தடுக்க முடியவில்லை என்ற நிலை ஏற்பட்டால் அவர் மீது நடவடிக்கை எடுக்க தொடர்புடைய அரசுக்கு ஆணையம் பரிந்துரை செய்யும். உச்சநீதிமன்றம் அல்லது உயர்நீ

மன்றங்களின் வாயிலாக ஆணையத்தின் செயல்முறைக்குத் தேவையான ஆணைகளைப் பெற்றுச் செயல்படலாம். உரிமை மீறலால் பாதிக்கப்பட்டவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உடனடி நிவாரணம் வழங்கப்படவேண்டும். விசாரணை அறிக்கையின் நகல் மனுதாரருக்கும், ஆணையத்தின் குறிப்புகளுடன் அரசுக்கும் ஆணையம் அனுப்பும். அரசாங்கம் தான் எடுக்கும் நடவடிக்கைகளை ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும்.

**ஆண்டறிக்கை**

மாநில ஆணையம் ஆண்டறிக்கையை அந்தந்த மாநில அரசுகளுக்கு அனுப்பவேண்டும். தேவையான காலங்களில் தேவை அடிப்படையில் சிறப்பு அறிக்கைகளையும் தரவேண்டும்.

**தமிழ்நாட்டில் மனித உரிமைகள் ஆணையம்**

தமிழ்நாட்டில் மனித உரிமைகள் ஆணையம் 17.4.1997-ல் உருவாக்கப்பட்டது. மாநில அளவில் ஆணையங்களை நியமித்ததில் ஐந்தாம் இடத்தைப் பெற்றுள்ளது. நீதிபதி எஸ்.நயினாரைத் தலைவராகவும் கே.தீனதயாளனை செயலராகவும் கொண்டு ஆணையம் செயல்பட்டது. விதிமுறைகளுக்கு ஏற்ப இயங்குகிறது. தற்போது கிரீன்வேஸ் ரோடு, சென்னை - 28 இல் இயங்குகிறது.

மாநில மனித உரிமை ஆணையத்தின் (எஸ் எச் ஆர் சி) பிரிவு 12 இன்படி அதன் செயல்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்த நீட்சியுடன் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் வரையறுக்கப்பட்டுள்ளன. (தேசிய மனித உரிமை ஆணையத்தைப் போன்றே இதன் செயல்களும் அமைந்துள்ளன.)

தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையம் பின்வரும் பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் புரிதல் வேண்டும்:

(அ) தாமே முற்பட்டோ அல்லது பாதிக்கப்பட்டவரால் அல்லது நபர் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றின் பேரில்:

மன்றங்களின் வாயிலாக ஆணையத்தின் செயல்முறைக்குத் தேவையான ஆணைகளைப் பெற்றுச் செயல்படலாம். உரிமை மீறலால் பாதிக்கப்பட்டவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் உடனடி நிவாரணம் வழங்கப்படவேண்டும். விசாரணை அறிக்கையின் நகல் மனுதாரருக்கும், ஆணையத்தின் குறிப்புகளுடன் அரசுக்கும் ஆணையம் அனுப்பும். அரசாங்கம் தான் எடுக்கும் நடவடிக்கைகளை ஆணையத்திற்கு அனுப்ப வேண்டும்.

ஆண்டறிக்கை

மாநில ஆணையம் ஆண்டறிக்கையை அந்தந்த மாநில அரசுகளுக்கு அனுப்பவேண்டும். தேவையான காலங்களில் தேவை அடிப்படையில் சிறப்பு அறிக்கைகளையும் தரவேண்டும்.

தமிழ்நாட்டில் மனித உரிமைகள் ஆணையம்

தமிழ்நாட்டில் மனித உரிமைகள் ஆணையம் 17.4.1997-ல் உருவாக்கப்பட்டது. மாநில அளவில் ஆணையங்களை நியமித்ததில் ஐந்தாம் இடத்தைப் பெற்றுள்ளது. நீதிபதி எஸ்.நயினாரைத் தலைவராகவும் கே.தீனதயாளனை செயலராகவும் கொண்டு ஆணையம் செயல்பட்டது. விதிமுறைகளுக்கு ஏற்ப இயங்குகிறது. தற்போது கிரீன்வேஸ் ரோடு, சென்னை - 28 இல் இயங்குகிறது.

மாநில மனித உரிமை ஆணையத்தின் (எஸ் எச் ஆர் சி) பிரிவு 12 இன்படி அதன் செயல்கள் அதிக முக்கியத்துவம் வாய்ந்த நீட்சியுடன் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் வரையறுக்கப்பட்டுள்ளன. (தேசிய மனித உரிமை ஆணையத்தைப் போன்றே இதன் செயல்களும் அமைந்துள்ளன.)

தமிழ்நாடு மனித உரிமைகள் ஆணையம் பின்வரும் பணிகள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எதனையும் புரிதல் வேண்டும்:

(அ) தாமே முற்பட்டோ அல்லது பாதிக்கப்பட்டவரால் அல்லது நபர் ஒருவரால் தாக்கல் செய்யப்பட்ட மனு ஒன்றின் பேரில்

மனித உரிமைகளின் மீறுகைக்கான அல்லது அதில் தலையிட்டு குறைத்தலுக்கான; அல்லது அரசு பணியாளர் ஒருவரால் அத்தகைய மீறுகையைத் தடுப்பதில் காணப்பட்ட கவனமற்ற தன்மைக்கான முறையீட்டை விசாரித்தல் வேண்டும்.

(ஆ) நீதிமன்றம் ஒன்றின் முன்னர் முடிவுறா நிலையிலுள்ள மனித உரிமை மீறலுக்கான குற்றச்சாட்டு எதையும் உள்ளடக்கியுள்ள நடவடிக்கை எதிலும் மாநில மனித உரிமைகள் ஆணையர் அத்தகைய நீதிமன்றத்தின் ஒப்புதலுடன் தலையிடலாம்.

(இ) அணுகுமுறை, சீர்திருத்தம் அல்லது பாதுகாப்பு நோக்கங்களுக்காக மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள சிறைச்சாலை அல்லது நிலையம் எதிலும் எங்கே நபர்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளார்களோ அல்லது அடைத்து வைக்கப்பட்டுள்ளார்களோ அங்கே இருக்கின்றவர்களின் வாழ்க்கை நிலையைக் கவனமாக ஆராய்வதற்கும் அதில் பரிந்துரைகளை (சிபாரிசுகளை) செய்வதற்கும் மாநில அரசாங்கத்திற்கு தகவல் அளித்துவிட்டு மாநில மனித உரிமை ஆணையம் அதனைப் பார்வையிடலாம்.

(ஈ) மாநில மனித உரிமைகள் ஆணையம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அல்லது அப்போதைக்கு அமலில் உள்ள சட்டத்தின்கீழ் மாநில மனித உரிமைகளின் பாதுகாப்பிற்காக வகை செய்யப்பட்டுள்ள நடைமுறைகளை மறு ஆய்வு செய்யலாம். அவற்றைத் திறம்படச் செயல்படுத்துதற்கான நடைமுறைகளைப் பரிந்துரை செய்யலாம்.

(உ) வன்முறைச் செயல்கள் (தீவிரவாதம்) உள்ளடங்களாக மனித உரிமைகள் நுகரப்படுவதைத் தடுத்து நிறுத்துகின்ற விடயங்கள் மறு ஆய்வு செய்தல் மற்றும் தீர்வுக்கான உரிய நடவடிக்கைகளைப் பரிந்துரை செய்யலாம்.

(ஊ) மனித உரிமைகள் மீதான உடன்படிக்கைகள், பிற பன்னாட்டு முறையாவணங்களைக் கவனமாக ஆராயவும் அவை திறம்பட செயல்படுதலுக்குப் பரிந்துரை செய்யலாம்.

(எ) மனித உரிமைகள் பற்றிய துறையியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் அதனை மேம்படுத்தவும் பல கள ஆய்வுகளை மேற்கொள்ளும் பணியை ஆணையமே மேற்கொள்ளலாம்.

(ஏ) மனித உரிமைகள் பாதுகாப்பு குறித்த கல்வியையும், விழிப்புணர்வையும் சமுதாயத்தின் பல்வேறு பிரிவினர்களுக்கிடையில் பரப்பவும், மக்கள் தொடர்பு சாதனங்கள், கருத்தரங்கங்கள், ஊடகங்கள், பிரசுரங்கள் வாயிலாக மக்கள் அறிய ஆணையம் வழிகள் ஏற்படுத்தலாம்.

(ஐ) மனித உரிமை போன்ற துறைகளில் பணிபுரியும் அரசு சாரா நிறுவனங்கள், அமைப்புகளின் மனித உரிமை பாதுகாப்பு முயற்சிகளை ஊக்குவிக்கின்றது.

(ஒ) மனித உரிமை மேம்பாட்டிற்குத் தேவையானதென்று கருதப்படும் இன்னபிற பணிகளையும் மாநில மனித உரிமை ஆணையம் ஆற்றலாம்.

ஒருவர் மாநில மனித உரிமை அல்லது தேசிய மனித உரிமை ஆணையம் என்று ஏதாவதொரு ஆணையத்தில் புகார் செய்யலாம். மாநில ஆணையத்தில் புகார் செய்தபின் தேசிய ஆணையம் அவ்வழக்கை மேற்கொள்ளாது. தேசிய ஆணையத்தில் புகார் செய்தபின் மாநில ஆணையம் அப்புகாரை மேற்கொள்ளாது. (ஒரே நேரத்தில் ஒரு வழக்கை இரு ஆணையங்கள் மேற்கொள்ளா). புகார் பெற்றபின் அதற்குரிய புகார் பெற்றதற்கான இரசீது கொடுக்கப்படும்.

- - -

# ஆ) கைது, வாரண்ட் விளக்கம்

பிடி ஆணை அல்லது வாரண்ட் (Warrant)

குற்றவாளி எனக் கருதப்படும் ஒருவரைப் பிடித்து அவரை நீதிமன்றத்தில் நிறுத்துமாறு காவல் துறையினருக்கு நீதிமன்றம் தரும் உரிமை அல்லது இடும் கட்டளை என்பது வாரண்ட் அல்லது பிடிஆணை அல்லது பிடிப்பாணை எனப்படும். குற்றவாளியாகக் கருதப்படுபவரிடம், காவல்துறை அலுவலர், அவரைக் கைது செய்யத் தரப்பட்டுள்ள பிடி ஆணையைக் காட்டி விளக்கமளிக்க வேண்டும். வாரண்ட் பிறப்பிக்கப்பட்டவருக்கு அவரை விடுவித்துக் கொள்ள எவ்வளவு பிணையத் தொகை தரப்பட வேண்டும்; எத்தனைபேர் பிணைக் கைதிகளாகத் தரப்பட வேண்டும் என்ற விபரங்களும் வாரண்ட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும். அவரை எப்போது நீதிமன்றத்தின் முன் நிறுத்த வேண்டுமென்பதும் தரப்பட்டிருக்கும்.

கொலை, கொள்ளை, கற்பழிப்பு கொடூரச் செயல்களைச் செய்தல் போன்ற குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டவர்களை ஜாமீனில் விட முடியாது. அப்போது வழங்கப்படும் வாரண்ட்டில் எவ்விதமான நிபந்தனைகளும் குறிப்பிடப்படுவதில்லை. அது ஜாமீனில் விட முடியாத பிடிப்பாணை எனப்படும். காவல்துறை அலுவலர், பிடிப்பாணை இல்லாமல், குற்றவியல் நடுவரின் ஆணையில்லாமல் கைது செய்வதற்குரிய குற்றத்தைச் செய்தவர் என்று ஒருவரைக் கருதினால் அவர்மீது குற்றம் சாட்டி அவரைக் கைது செய்யலாம். ஆனால் நேரடியாக அறியப்படாத குற்றம் அல்லது குற்றவியல் நடைமுறைக் கோட்பாடுகளின் அட்டவணையில் கூறப்படாத குற்றம் செய்த குற்றவாளியை, பிடிப்பாணை இல்லாமல் கைது செய்ய இயலாது.

**பிடிப்பாணையின் தன்மை**

நீதிமன்றத்தால் வழங்கப்படும் பிடிப்பாணையானது எழுத்து மூலம் வழங்கப்படும் ஆவணம். அதில் நீதிபதியின் கையொப்பம், நீதிபதி மற்றும் நீதிமன்ற முத்திரைகள் இருக்கவேண்டும். குற்றம்

சாட்டப்பட்டுள்ளவரின் பெயர், முகவரி, அவர்மீது சாட்டப்பட்டுள்ள குற்றம் குற்றத்தைப் பற்றிய விளக்கமும் இருக்க வேண்டும் அந்த ஆணையானது அதில் கூறப்பட்டுள்ள செயல்களை நடைமுறைப்படுத்தும்வரை அல்லது பிடிப்பாணைகள் ரத்து செய்யப்படும்வரை செல்லத்தக்கவையாகும். மேலே கூறப்பட்டுள்ள விபரங்கள் தரப்படவில்லையெனில் அந்த ஆணையானது செல்லாததாகி விடும். அவ்வாறு செல்லாத ஆணையைப் பயன்படுத்தி ஒருவர் கைது செய்யப்பட்டால் அத்தகைய கைது செல்லாது.

**பிடிப்பாணைகளின் வகைகள்**

பிடிப்பாணை அல்லது வாரண்ட் இருவகைப்படும். அவை ஜாமீனில் விடக்கூடியவையும் (Bailable warrant) ஜாமீனில் விடமுடியாதவையும் (Non-bailable warrant) ஆகும்.

பிணைய அடிப்படையில் அல்லது ஜாமீனில் விடக் கூடிய வாரண்ட்டைப் பிறப்பித்தால் நீதிமன்றமானது பிணையாளர்கள் (Sureties), பிணையத் தொகை, ஜாமீன் பெற்றவர், நீதிமன்றத்திற்கு முன் வருகை தரவேண்டிய நாள், மற்றும் நேரம் குறிப்பிட வேண்டும். நீதிமன்றம் குறிப்பிடும்போது ஆஜராவதாக உறுதியளித்தால் அந்த நபர் சிறைக்கு வெளியிலிருக்கலாம்.

ஜாமீனில் விடமுடியாத வாரண்ட் என்பது ஒருவர் செய்த குற்றம் அதன் கடுமைத் தன்மை ஆகியவை அதிகமாக இருக்கும்பட்சத்தில் அவ்வாறு கைது செய்யப்பட்டவர் வெளியில் விடப்பட்டால் குழப்பங்கள் மேலும் அதிகரிக்கும் என்ற நிலை எழும்போது பிறப்பிக்கப்படுவதாகும். இந்த முறைப்படி கைதியை நீதிமன்றம் மட்டுமே விடுவிக்க இயலும்.

**கைது என்பதன் பொருள்** (Imprisonment)

காவல்துறை அதிகாரியோ அல்லது சட்டப்படியான முறையான அதிகாரம் பெற்றுள்ள அலுவலரோ, குற்றம் செய்தவராகக் கருதப்படுவபவரைப் பிடித்து அவரது சுதந்திரமான நடத்தையைக் கட்டுப்படுத்தி காவலில் வைப்பது கைது என்று அழைக்கப்படும். குற்ற

செய்தவர் எனக் கருதப்படும் ஒருவர் காவல்துறையிடம் சரணடையும்போது காவல்துறை அவரைக் கட்டுப்படுத்தித் தனிமைப்படுத்துவது கைது செய்யப்படும்.

## கைது நடவடிக்கைகள்

குற்றம் செய்தவர் ஒருவரை காவல் துறையினர் கைது செய்ய விழைகையில் அதனைத் தடுக்க அக்குற்றவாளி முயற்சித்தால் அல்லது தவிர்க்க எத்தனித்தால் அவற்றையெல்லாம் கடந்து காவல் துறையானது பல வழிகளில் கைது நடவடிக்கையைத் தொடரலாம். கொலைக் குற்றம் புரிந்தவர் ஒருவரைக் கைது செய்யும் போது அவர் வன்முறையாக, மீண்டும் கொலை செய்தாலும் பரவாயில்லை என்ற நோக்கில் கடும் எதிர்ப்பைக் காட்டினால் அவருக்கு மரணம் ஏற்படக்கூடிய வழிகளையும் கையாளலாம். இருப்பினும் தேவைக்கதிகமாக வலிமையைப் பயன்படுத்தக் கூடாது. தேவைப்பட்டால் மட்டுமே விலங்கிடல், கை, கால்களைக் கட்டுதல் போன்றவற்றைச் செய்யலாம்.

பிடிப்பாணையின்றி (பிடி ஆணையின்றி) சந்தர்ப்ப சூழல்களின் அடிப்படையில் ஒருவரைக் கைது செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் அவரைக் கைது செய்ததும் அவர் எந்த காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டுள்ளார் என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று இந்திய அரசியலமைப்பின் 22-ஆம் பிரிவும், கிரிமினல் சட்டத் தொகுப்பின் 50-ஆம் பிரிவும் குறிப்பிடுகின்றன. ஜாமீனில் விடத்தக்க குற்றமாயிருப்பின், பிணையத் தொகை, பிணையாளர்கள் ஆகியோரை ஏற்பாடு செய்து கொண்டு தன்னை விடுவித்துக் கொள்ளலாமென்பதும் தெரிவிக்கப்பட வேண்டும். கிரிமினல் சட்டத்தின் 75-ஆம் பிரிவின்படி வாரண்ட் (பிடி ஆணை) பிறப்பிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டால் அவருக்கு வாரண்டைப் படித்துப் பார்க்க உரிமையுண்டு. எனவே வாரண்ட் அவரிடம் தரப்பட வேண்டும். கைது செய்யப்பட்டவரின் விருப்பத்திற்கு இணங்க அவருக்குத் தேவையான வழக்கறிஞரைக் கலந்தாலோசிக்க

உரிமையுண்டு. கைது செய்யப்பட்டவரை, இந்திய அரசியலமைப்பின் 22-ஆம் பிரிவின்படி, 24 மணி நேரத்திற்குள் (இதில் பயணநேரம் அடங்காது) அருகாமையிலுள்ள மாஜிஸ்ட்ரேட்டின் முன் நிறுத்த வேண்டும்.

## சோதனை

கைது செய்யப்பட வேண்டியவர் இருக்கக்கூடிய வீடு மற்றும் இடத்தை சோதனை செய்யும் உரிமை காவல்துறைக்கும் காவல் அலுவலர்களுக்கும் உண்டு. மேல் நடவடிக்கைகளுக்காகத் தேடப்படும் ஒருவரை அடைத்து வைத்திருந்தால் அவ்விடத்தின் ஜன்னல் அல்லது கதவுகளை உடைத்து உள்ளே சென்று அவரைக் கைது செய்யலாம். கைது செய்யப்பட்டவர் முழுமையான சோதனைகளுக்கு உட்படுத்தப்படலாம். அவருடைய ஆடைகளைத் தவிர அவரிடமிருந்து எடுக்கப்பட்ட பொருள்களனைத்தும் எழுத்து மூலம் குறிக்கப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட வேண்டும். அதற்கான ரசீது அவரிடம் தரப்பட வேண்டும். கைது செய்யப்படுபவர் ஒரு பெண்ணாயிருந்தால் அவருடைய கௌரவம், கற்பு, மானம் ஆகியவற்றுக்குக் குறைவு நேராமல் மற்றொரு பெண்ணை வைத்து சோதனை மேற்கொள்ளப் படவேண்டும். கைது செய்யப்பட்ட நபரை மருத்துவப் பரிசோதனை செய்தால் பல செய்திகள் கிடைக்குமென உதவி ஆய்வாளரின் நிலைக்குக் குறையாத ஒரு அலுவலர் நம்பினால், பதிவு பெற்ற மருத்துவரின் மூலம் பரிசோதனை செய்ய ஏற்பாடு செய்யலாம். அப்பரிசோதனையை பெண் மருத்துவர் ஒருவரே பெண் குற்றவாளிகளிடம் செய்ய வேண்டும்.

கட்டாயப்படுத்தி பாலியல் தொடர்பில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டால், அல்லது காவலரால் கொடுமைப்படுத்தப்பட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டால் ஒருவர் மற்றொருவரின் உடலைப் புண்படுத்தியதற்கான சான்று இருந்தால் மருத்துவ பரிசோதனைகள் செய்யப்படுகின்றன. தான் கொடுமைப்படுத்தப்பட்டதை நீதிமன்றத்தில் நிரூபிப்பதற்காக தம்மை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொண்டால் அவரது உரிமை ஏற்கப்பட்டு பரிசோதனைக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொடர் நடவடிக்கை

யாராவது ஒருவர் பிடிப்பாணை இல்லாமல் கைது செய்யப்பட்டால், அவரை அவரது வழக்கினை விசாரிக்கத் தகுதியுடைய குற்றவியல் நடுவரின் முன் ஆஜர்படுத்த வேண்டும். நீதிமன்ற நடுவரின் ஆணையின்றி எவரையும் 24 மணி நேரத்திற்கு மேல் பிடித்து வைத்திருக்கக் கூடாது. தம்முடைய அதிகார வரம்புக்கு உட்பட்டு கைது செய்த எவரையும் குற்றவியல் நடுவரின் ஆணையின் பேரில் பிணை அல்லது அவரது கட்டுப்பாட்டு ஆணை இல்லாமல் விடுதலை செய்ய முடியாது. சட்டப்படி கைது செய்யப்பட்ட ஒருவர் தப்பிவிட்டால் அவரை எங்கிருந்தாலும் கைது செய்யலாம்.

குற்றவியல் நடுவரின் ஆணைப்படி ஒருவரை 15 நாட்கள் வரை காவலில் வைக்கலாம். 15 நாட்கள் கழிந்து பின்னர் அவரை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும். அப்போது தேவையை மனத்திற் கொண்டு அவரது காவல் காலத்தை நீட்டிக்கலாம். அத்தகைய காவல் நீட்டிப்பு 60 நாட்கள் வரை தொடரலாம். யாராவதொருவர் பிணையம் தந்து மீட்க முடியாத குற்றத்தைச் செய்திருந்தால் நீதிமன்ற விசாரணை முடியும்வரை அவரை காவலில் வைக்கலாம்.

## சில விளக்கங்கள்

சட்ட ரீதியான உரிமைகளின் அடிப்படையில் சட்டப்படியான சொற்களுக்கான விளக்கங்களைத் தெரிந்து கொள்வோம்.

### குற்றம்

சட்டத்திற்குப் புறம்பாக பிறரைப் பாதிக்கக்கூடிய செயல்களால் தண்டனை பெறக்கூடிய செயல்தான் குற்றம் எனப்படும். குற்றத்தை பிணையில் விடத்தக்க குற்றம் (bailable offence) எனவும் பிணையமளித்தாலும் வெளியில்விட முடியாத குற்றம் எனவும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

பிணையில் அல்லது பிணையமின்றி வழங்கப்படும் தற்காலிக வெளியிடல், குற்றத்தின் தன்மை சார்ந்ததாகும். கைகலப்பு, கலாட்டா குழப்பம் போன்றவை முன்பிணையமின்றி விடத் தகுதியான குற்றங்கள். கொலை, கற்பழிப்பு மற்றும் மூன்றாண்டு தண்டனை தரக்கூடிய குற்றங்கள் பிணையமளித்தாலும் வெளிவிட முடியாத குற்றங்களாகும்.

**பிணைய விடுப்பு**

நீதிமன்றத்தால் மட்டுமே பிணைய விடுப்பு (bail) வழங்க முடியும். அப்போது குற்றங்கள் மற்றும் சாட்சிகளின் தன்மை, குற்றச்சூழல், குற்றம் சாட்டப்பட்டவரின் தன்மை ஆகியன கணக்கில் எடுத்துக் கொள்ளப்படலாம். கைது செய்யப்படும்போது வழங்கப்படும் பிடிப்பாணையில் என்ன கூறப்பட்டுள்ளதோ அது நிறைவேற்றப்படும். பிடிப்பாணை இன்றி ஒருவர் கைது செய்யப்பட்டால், உறுதிப் பத்திரம் ஒன்றைப் பெற்றுக் கொண்டு தன்னை விடுவிக்குமாறு கைதி கேட்டுக் கொள்ள உரிமையுண்டு. காவல்துறையினர் பிணையமின்றியே ஒருவரை விடுவிக்கலாம். காவல் நிலையத்தில் பிணையம் மறுக்கப்பட்டால் கைது செய்யப்பட்டவர் தன் வீட்டிலுள்ளோர் அல்லது உறவினர் அல்லது வழக்கறிஞருக்கு தகவல் தர உரிமையுண்டு. காவல்துறையினர் இவ்வுரிமை வேண்டுகோளை நிறைவேற்றி வைக்க வேண்டும். கைதியை எந்த நீதிமன்றத்தில் எப்போது கொண்டுசெல்லப் போகிறார்கள் என்ற விபரத்தை கைதியின் வழக்கறிஞருக்கு அளிக்க வேண்டும். பிணையப் படிவத்தில் கைதி கையொப்பமிட்டவுடன் அவருக்கு தற்காலிக விடுவிப்பு தரப்பட வேண்டும். நீதிமன்றத்தில் சிறுகுற்றங்களுக்காக உடனடி பிணைய விடுப்பு தரப்படும். கொலை முதலிய கடுமையான குற்றங்களுக்காக மரணதண்டனை அல்லது ஆயுள் தண்டனை வழங்கப்பட்டோருக்கு மாவட்ட அல்லது உயர்நீதிமன்றம் மட்டுமே பிணைய விடுப்பு தரமுடியும். பிணைய விடுப்பு தரப்படாமல் மறுக்கப்பட்டால் அதற்கான காரணங்கள் குறிப்பிடப்பட வேண்டும். கைது செய்யப்பட்டு காவலில் இருப்பவர் மாவட்ட

அல்லது உயர்நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்து பிணைய விடுப்பு பெறலாம். மேலும் பிணைய விடுப்பு நிபந்தனைகள் நடைமுறைக்கு மாறாக, ஏற்கக்கூடியதாக இல்லையெனில் அவற்றைத் தளர்த்த அல்லது குறைக்க வேண்டுகோள் விடுக்கலாம். விண்ணப்பமும் மறுக்கப்பட்டால் கைதி வெளியே வரமுடியாது.

## பிணைய உறுதி (Surety)

குறிப்பிட்ட ஒரு கைதிக்கு பிணைய விடுப்பு வழங்கப்படும்போது பிணையத் தொகை, உறுதித் தொகை ஆகியவற்றுடன் நீதிபதியானவர் தனிநபர் ஒருவரை பிணைய உறுதி வழங்குமாறு ஆணையிடலாம். அனுமதியளிக்கலாம். பிணைய உறுதியளிப்பவர் நீதிமன்றத்தில் நேரடியாக வந்து உறுதியளித்தல் வேண்டும். அப்பிணைய நபரை ஏற்பதும் மறுப்பதும் வேறு பிணையாளரைக் கேட்பதும் நீதிபதியின் உரிமையாகும்.

பிணைய உறுதி தருபவர் குறைந்தது 18 வயது நிரம்பியவராய், நிரந்தர முகவரி மற்றும் வருவாயுடன் சமூக அந்தஸ்து உடையவராயிருக்க வேண்டும். தன்னைப் பற்றிய சான்றுகளை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும். முறையான பிணைய உறுதியாளரை முறையற்ற காரணங்களைக் காட்டி மறுக்கக் கூடாது.

ஒருவர், தம்மால் செய்யப்பட்ட குற்றத்திற்காக பிணைய விடுப்பு கிடைக்காது என்று கருதினால் தாம் குற்றத்திற்காகக் கைது செய்யப்படக் கூடும் என எண்ணினால் செசன்ஸ் மற்றும் உயர்நீதி மன்றத்தில் தான் கைது செய்யப்படாமலிருக்க எதிர்பார்ப்புப் பிணைய விடுப்புக்கு வேண்டுகோள் விடுக்கலாம். இது முன் ஜாமீன் எனப்படும். அவ்வாறு எதிர்பார்ப்புப் பிணைய விடுப்பைப் பெற்றவரை பிணைய விடுப்பு இல்லாமல் காவலரே வெளியே அனுப்பலாம். பிடிப்பு ஆணை பிறப்பிக்கப்பட்டால் எதிர்பார்ப்புப் பிணைய விடுப்பில் நிபந்தனைகள் உள்ளது என்று பொருள்.

**சோதனை பிடிப்பாணை** (Search Warr...

சோதனையிட வரும் அதிகாரிகளுக்கு பிடிப்பாணை பெற்று என்னென்ன காரணங்களுக்காக அவ்வாணை வழங்கப்பட்டுள்ளதென்பது தெளிவாகத் தெரியும். திருடப்பட்ட பொருள் அல்லது போலி ஆவணங்கள் உள்ளதாகக் கருதப்படும் இடம், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணத்தைக் கைப்பற்ற, அரசினால் தடைசெய்யப்பட்ட நூல்கள் மற்றும் வெளியீடுகளைக் கைப்பற்ற, சட்டத்திற்குப் புறம்பாக, வலுக்கட்டாயமாக அடைத்து வைக்கப்பட்டவர்களைத் தேடிக் கண்டுபிடித்து விடுவிக்க சோதனை பிடிப்பாணை வழங்கப்படுகின்றது. மேலே கூறப்பட்டுள்ளவற்றைச் செயல்படுத்த காவல்துறை அதிகாரிக்கு அதிகாரம் உண்டு. அதை அவர்கள் முறையின்றிப் பயன்படுத்தக் கூடாது. பெண்களாயிருந்தால் அவர்கள் பெண்களால் முறையோடு சோதனையிடப்பட வேண்டும்.

## சோதனை நடைமுறைகள்

சோதனையின் போது சாட்சியாக அப்பகுதியைச் சேர்ந்த பொறுப்புள்ள குடிமக்கள் இருவர் இருக்க வேண்டும். அவ்வாறு சாட்சியாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டவர் சாட்சியாக இருக்க மறுக்கக் கூடாது. அவ்வாறு மறுப்பது சட்டப்படி குற்றம். சோதனைக்குச் சாட்சியாக உள்ளவர்கள் முன்பு தான் சோதனை நடைபெற வேண்டும். பஞ்சாயத்தார் முன்னால் கைப்பற்றப்படும் ஆவணங்கள், பொருட்கள் ஆகியன தவறின்றி பட்டியலிடப்பட வேண்டும். சாட்சியாக உள்ள பஞ்சாயத்தார் அதில் கையொப்பமிட வேண்டும். வீடு மற்றும் பொருட்களின் உடமையாளர் உடனிருத்தல் வேண்டும். அவருக்கும் பட்டியல் நகல் தரப்படல் வேண்டும். பஞ்சாயத்தார் அல்லது சாட்சியானவர் நீதிமன்றத்தில் அல்லது அது ஆணையிடும் இடத்தில் மட்டும் சாட்சி கூறினால் போதுமானது.

சோதனையின் போது சோதனையிடப்படுபவருக்கும் சில உரிமைகள் உண்டு. குற்றம் சாட்டப்பட்டவரையே ஆவணத்தைக்

...பிடித்துத் தருமாறு வற்புறுத்தக்கூடாது. மேலும் தனக்கு தண்டனை ...றுத் தரக்கூடிய ஆவணங்கள் அல்லது சான்றுகளைத் தருமாறு ...யப்படுத்தக் கூடாது. முறையான பிடிப்பாணையும் வீட்டுக்காரரின் ...தல் இல்லாமலும் சோதனையை மேற்கொள்ளக் கூடாது.

பிடிப்பாணை பற்றிய அனைத்து விபரங்களும் சம்பந்தப்பட்ட ...னைவருக்கும் படித்துக் காட்டப்பட்ட பின்னரே சோதனை ...ற்கொள்ளப்படும். சட்டத்திற்குப் புறம்பாக மேற்கொள்ளப்பட வகை ...யும் சோதனையை வீட்டுக்காரர் தடுக்கலாம். சோதனை நடக்கும் ...டத்தில் உள்ள யாரையும் வெளியேறச் சொல்லலாம். அவ்வாறு செய்ய ...றுத்தால் வலுக்கட்டாயமாக அவரை வெளியேற்றலாம்.

## நீதிபதிகளின் உரிமைகளும் கடமைகளும்

நீதிபதியானவர் நேர்மையுடன் எவ்விதமான பாகுபாடுமின்றி நீதி வழங்க வேண்டும். பாரபட்சமற்ற நீதிபதிகளே நியாயமான தீர்ப்பாளர்களாவர். தெளிவான சிந்தனை சீரான சட்ட அறிவு உடையவராயிருக்க வேண்டும். சுதந்திரமான முடிவெடுத்து தீர்ப்பளிக்க அவருக்கு உரிமையுண்டு. சட்டங்களுக்கு உட்பட்டு உண்மையாக செயல்பட வேண்டியதும், நீதித்துறையின் சுதந்திரத் தன்மையைப் பாதுகாக்க வேண்டியதும் நீதிபதியின் கடமையாகும். கடமையாற்றும் போது யாருடைய குறுக்கீடும் இல்லாமல் பாதுகாப்பது அவருடைய உரிமை. எவ்விதமான உள்நோக்கமும், எவ்விதமான பாகுபாடும் இல்லாமல் அவர் நீதி வழங்கவேண்டும். நீதி மற்றும் நீதிமன்றத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படச் செய்வது நீதிபதிகளின் கடமை.

மேலே கூறப்பட்டுள்ளவற்றின் மூலம் இந்தியாவின் மனித உரிமைகள் எவ்வாறு பலவழிகளில் செயல்படுகிறது. இனி பெண்களின் உரிமைகளைப் பற்றிக் காணலாம்.

## இ) கைது செய்யப்பட்டவரின் உரிமைகள்

பன்னாட்டு மனித உரிமைப் பிரகடனத்தின் 5ஆம் பிரிவும், பன்னாட்டு அரசியல் உரிமைகள் பற்றிய உடன்படிக்கையும் கைதிகளின் உரிமைப் பின்னணியில் பல கருத்துக்களைக் கூறியுள்ளன. அவற்றைப் பின்பற்றியே இந்திய நீதிமன்றமும் பல தீர்ப்புகளைத் தந்துள்ளது.

### இரும்புச் சங்கிலியால் பிணைப்பதற்கு எதிரான உரிமை

(Right against Bar Fetters)

ஒரு கைதியை இரும்புச் சங்கிலியால் பிணைத்து வைத்தல் என்பது அவனை விலங்கைப்போல நடத்துவதாகும். அது தாங்கவொண்ணாத சித்ரவதையும் ஆகும். இந்திய அரசியலமைப்பின் அடிப்படைப் பண்புகளுக்கு மாறானவையாகும். அது கைதியின் சுதந்திரத்தை கொடூரமாகத் தடை செய்வதாகும்.

கைதியை சங்கிலியால் பிணைப்பது காட்டுமிராண்டித்தனமான செயல். இச்செயல் கைதிக்கு உள்ள சுதந்திரத்தில் கொடூரமாகத் தலையிடலாகும். ஒரு கைதியை பாதுகாப்பு நோக்கில் சங்கிலியால் பிணைக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் அப்பாதுகாப்பு பற்றி விசாரணை நடத்தப்பட்டு தேவைப்பட்டால் மட்டுமே அவரைக் காப்பிடலாம். அப்போதும் இரவு பகல் பாராமல் அச்செயலைச் செய்யக் கூடாது.

### கைவிலங்கிடுதல் மனித உரிமைக்கு எதிரானது!

(Right against Hand Cuffing)

கைதிகளுக்கு விலங்கிடுவது மனித உரிமைக்கு எதிரானது. நீதிபதி கிருஷ்ணய்யர், "விசாரணைக் கைதிக்கு விலங்கிடல் என்பது மனித அடிப்படை உரிமைகளின் 21-ஆம் பிரிவினை மீறிய செயலாகும்" என்று கூறியுள்ளார். அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் 5 ஆம் பிரிவின்படி கைதிகளுக்கு கைவிலங்கிடல் என்பது ஒரு இழிசெயல் ஆகும். உச்சநீதிமன்றம் ஒரு விசாரணைக் கைதியை ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்கு மாற்றும் போதோ அல்லது நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லும் போதோ கைவிலங்கிடுவதோ அல்லது சங்கிலியிட்டுக் கொள்ளுமாறு கட்டாயப்படுத்துவதோ கூடாது என்கிறது.

**காலந்தாழ்த்தித் தூக்கிலிடலை எதிர்க்கும் உரிமை (Right against Delayed Execution)**

உச்சநீதிமன்றத் தீர்ப்பில் தூக்குத் தண்டனை வழங்கப்பட்டு அது நிறைவேற்றப்படாமல் காலதாமதம் செய்யப்பட்டால், தொடர்புடைய கைதி அத்தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றிப் பெற உரிமையுடையவர் என்று கூறப்பட்டுள்ளது. பின்னால் வந்த வழக்குகளில் காலதாமதமாகக் கூடிய அனைத்து வழக்குகளிலும் மேலே கூறப்பட்டுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. எனவே கைதியின் நடத்தையை மனத்திற்கொண்டே தண்டனை குறைப்பை மேற்கொள்ள முடியுமேயொழிய பிற காரணங்களைக் காட்ட முடியாது. குருசாமி Vs. தமிழக அரசு வழக்கில் முன்னவரின் தூக்குத் தண்டனை இரண்டாண்டுகள் நிறைவேற்றப்படவில்லை. ஆனால் அவ்விரு ஆண்டுகளிலும் கைதியின் நன்னடத்தையின் காரணமாக அவருடைய தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

**காவலில் உள்ள கைதியின் மீது எடுக்கப்படும் வன்முறைச் செயல்களுக்கு எதிரான உரிமை (Right against Custodial Violence)**

விசாரணைக் கைதியை காவல் துறையினர் காவல் நிலையத்தில் அதிகார வரம்பினை மீறி சித்ரவதை செய்தால் அச்செயல் இந்திய அரசியலமைப்பின் 21ஆம் பிரிவின்படி தனிநபர் உரிமையை மீறும் செயலாகும். குற்றவாளிகளிடம் குற்றத்தைப் பற்றிய வாக்குமூலத்தைப் பெற வேண்டுமென்பதற்காக இச்செயல்கள் நடக்கின்றன. ஷரத்துகள் 19, 21, 22 ஆகியவற்றின்படி இவை தண்டனைக்குரிய குற்றங்கள்.

**பொது இடத்தில் தூக்கிலிடுதலுக்கு எதிரான உரிமை (Right against Public Hanging)**

இந்திய அரசியலமைப்பின் 21ஆம் பிரிவின்படி பொது இடத்தில் தூக்கிலிடல் என்பது உரிமை மீறிய செயல் என்பதை, இராஜஸ்தான் மாநில உயர்நீதிமன்றம் வழங்கிய ஒரு தீர்ப்பை ரத்து செய்ததன் மூலம் உச்சநீதிமன்றம் தீர்மானித்தது.

**வழக்கை துரிதமாக விசாரிக்கக் கேட்கும் உரிமை (Right to Speedy Trial)**

குறிப்பிட்ட ஒரு குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டவர் குறிப்பிட்ட காலத்திற்குள் தன் மீதான வழக்கை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமெனக் கேட்கும் உரிமையுண்டு. ஒரு வழக்கை தகுந்த காரணமின்றி தாமதப்படுத்தக்கூடாது. கைது செய்யப்பட்டவரை காவலில் வைத்திருக்கக் கூடாது. கால தாமதத்தைத் தடுக்க நேரடியான சட்டங்கள் இல்லையென்றாலும் பிரிவு 21-இன் படி விசாரணையை துரிதப்படுத்துமாறு கேட்க உரிமையுண்டு. இதனை அரசியல் உரிமைகள் பற்றிய பன்னாட்டு உடன்படிக்கையின் 9ஆம் பிரிவும் ஏற்றுக் கொள்கின்றது. இன்று இந்தியாவின் 80 விழுக்காட்டுப் பிரிவினர் விசாரணைக்குக் காத்திருக்கும் கைதிகளாவர். ஒருவரது வழக்கு விசாரணைக்கு வராமல் இருந்தால் அவர் காவல் கைதியாக சிறையில் இருக்கும் காலம் அவருக்கு விதிக்கப்படும் சிறை தண்டனை நாட்களைவிட மிகுதி என்ற நிலை ஏற்பட்டால் அது அடிப்படை உரிமையை மீறும் செயலாகும் என்ற உச்சநீதிமன்றத் தீர்ப்பு உள்ளது.

**சட்ட உதவி பெறும் உரிமை** (Right to Free Legal Assistance)

மனித உரிமைகள் மீறப்பட்டு கைது செய்யப்படும் போது சட்ட உதவி பெறும் உரிமையுண்டு. சட்ட உதவியென்பது ஓர் அரசியலமைப்பு உரிமை. இதனை ஏழைகளுக்கும் படிக்காதவர்களுக்கும் உணர்த்த வேண்டியது நீதித் துறையின் கடமையாகும். இந்திய அரசியலமைப்பின் 39 (A) பிரிவானது சமநீதி, இலவச சட்ட உதவி என்பதை சுதந்திரம் என்பதற்கு ஒரு விளக்கமாக அமைத்துள்ளது. இந்நிலையில் 1987-இல் சட்ட உதவிக்குக் குழு ஒன்று உருவாக்கப்பட்டது. 1994-இல் அது விரிவுபடுத்தப்பட்டு ஏழைகளுக்கான சட்ட உதவி உறுதியாக்கப்பட்டது. இவ்வுதவியானது குற்றவியல், வாழ்வியல் மற்றும் ஆட்சித் துறை வழக்குகளுக்கும் பொருந்தும் எனப்பட்டது. பெண்கள், சிறுவர், மலைவாழ் மக்கள், வணிகர், இயற்கையின் சீற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள், தொழிலாளர்கள் போன்ற பல பிரிவினரும் இலவசச் சட்ட உதவியைப் பெற உரிமையுடையவர்கள். சட்ட உதவியால் பலதரப்பட்ட கட்டணங்களும் நல்கப்படும்.

## மரண தண்டனை (Capital Punishment)

கொலை, கொலை முயற்சி, அரசுக்கு எதிரான கிளர்ச்சி, இராணுவக் குற்றங்கள் போன்றவற்றிற்கு மரண தண்டனை வழங்க இந்திய தண்டனைச் சட்டம் வகை செய்கின்றது. ஆனால் இந்திய குடியரசுத் தலைவருக்கு கருணை மனு அனுப்பி அதனை நிறுத்தி வைக்கலாம். மனிதாபிமான அடிப்படையில் மனித உரிமைப் பிரகடனத்தின் 51ஆம் பிரிவும், வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய பன்னாட்டு உடன்படிக்கையின் 7ஆம் பிரிவும் மரண தண்டனை கூடாதென்பதைக் குறிப்பிட்டுள்ளன. 18 வயதுக்கு உட்பட்டோர், கர்ப்பிணிகள் ஆகியோருக்கு மரண தண்டனை விதிப்பது தடை செய்யப்பட்டுள்ளது. மரண தண்டனையைப் பற்றி உலக நாடுகள் பலவற்றில் மாறுபட்ட பல கருத்துகள் நிலவுகின்றன. இந்தியாவில் தவிர்க்க முடியாத அளவுக்குக் கொடுமையான குற்றங்களைச் செய்தவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகின்றது. உயர்நீதிமன்றங்கள், உச்சநீதிமன்றம் போன்றவற்றில் மரண தண்டனை பற்றிய பல கருத்துகள் நிலவுகின்றன. 1980 ஆம் ஆண்டில் பஞ்சாப் வழக்கு ஒன்றில் உச்சநீதிமன்றம் கொடுமை நிறைந்த அரிய செயல்களுக்கு மட்டும் மரண தண்டனை விதிக்கலாமென அறிவித்தது. மரண தண்டனையென்பது ஒரு மதிப்புக் குறைந்த செயல் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனிதத் தன்மையற்ற குற்றம் ஒன்றிற்காக மனிதத் தன்மையற்ற தண்டனையைச் செயல்படுத்தலாகாது என்ற கருத்தும் நிலவுகின்றது. இத்தகைய மாறுபட்ட சூழல்களில் சட்டக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் குடியரசுத் தலைவர் மரண தண்டனையை ரத்து செய்யலாம். குற்றவாளியின் மனநிலை, நோய், பாலினம், வயது போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. 1974 முதல் செயலில் உள்ள புதிய சட்டத் தொகுப்பில் பல மாற்றங்கள் காணப்படுகின்றன. இத்தகைய கடுமையான தண்டனைகள் வழங்கப்படுகையில் நீதிபதி அவற்றுக்கான முழுமையான காரணங்களைத் தெரிவிக்க வேண்டும்.

மரண தண்டனையை பொருளாதாரம் மற்றும் சமூகச் சூழலின் கீழ்நிலையில் உள்ளவர்கள் மட்டுமே பெறுகின்றனர். சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களும் இச்சூழலுக்கு ஆளாகின்றனர். வசதியும் செல்வாக்கும் உடையவர்கள் இத்தண்டனையிலிருந்து தப்பித்துக்

கொள்கின்றனர். இந்தியத் தலைவர்கள் பலர் மரண தண்டனைக்கு எதிரான கருத்துக்களையே கொண்டிருந்தார்கள். உலக நாடுகளிலும் இதற்கு எதிர்ப்புகள் உள்ளன. 1976-இல் கனடாவிலும், 1998-க்குப் பின் மேலும் 67 நாடுகளிலும் மரணதண்டனை விதிப்பது நீக்கப்பட்டு விட்டது. மரணதண்டனை என்பது எவ்விதமான பயனையும் தரக்கூடியதல்ல; அது குற்றத்திற்கு பரிகாரம் ஆகாது. கொலையாளியை மனிதாபிமான நோக்கில் மனிதத்தன்மையுடன் நடத்தினால் அவரிடம் மனமாற்றத்தை உருவாக்கலாம். அதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும்.

குற்றவாளி, சிறைபட்டால் அவருக்கு அடிப்படை உரிமைகளும் சுதந்திரமும் இல்லை எனக் கொள்ள முடியாது. மனிதாபிமான நோக்கில் அவர்களுக்கும் உரிமைகள் உண்டு. சிறைக் கைதிகளுக்கென சில அடிப்படை உரிமைகள் உண்டு. இந்திய அரசியலமைப்பின் 14 ஆம் ஷரத்து வழங்கும் சட்டப்படியான சமத்துவ மற்றும் சமமான பாதுகாப்பு அனைவரையும் போல கைதிகளுக்கும் உண்டு. அரசியலமைப்பின் 21 ஆம் பிரிவு தனிநபர் உரிமையைப் பற்றிய பல செய்திகளைக் கொண்டுள்ளது. சட்டத்திற்குப் புறம்பாக ஒருவரது உரிமை, சுதந்திரம், உயிர் ஆகியவற்றைப் பறிக்க முடியாது. ஒருவரைக் கொடுமையாகவோ, மரியாதையின்றியோ, மனிதாபிமானத்திற்கு எதிராகவோ நடத்தக்கூடாது. கைதிகளைக் காவலர்களோ, சிறை அதிகாரிகளோ கொடுமைப்படுத்தக் கூடாது. உச்சநீதிமன்றமானது கைதிகள் நடத்தப்படும் முறையை கவனித்து கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கிறது. சித்ரவதை வற்புறுத்தல்கள், தனியாக அடைத்து வைத்தல் போன்றவற்றிலிருந்து கைதிகள் காக்கப்படுகின்றார்கள். தம்முடைய வழக்கறிஞர், குடும்பத்தினர் மற்றும் நண்பர்களைச் சந்திக்க கைதிகளுக்கு உரிமையுண்டு. அவர்களுக்கு பிணை பெறுவதற்கும் உரிமையுண்டு. மனிதத்தன்மை, மனிதாபிமானம் போன்ற வழிகளில் அவர்களும் மனித உரிமைகளைப் பெற தகுதியுடையவர்களே. குற்றங்கள் அவர்களுடைய உரிமைகளுக்குக் குறுக்கீடாய் அமைவதில்லை.

# அலகு – நான்கு

- குழந்தைகள் உரிமைகள்.
- இளங்குற்றவாளிகள், கொத்தடிமைகள் மற்றும் அகதிகளின் உரிமைகள்.
- இனப்பாகுபாடு ஒழிப்புக்கான பன்னாட்டு உடன்படிக்கை.
- சித்தரவதை பிற கொடுரமான, மனிதத் தன்மையற்ற நடத்தை மற்றும் தண்டனைகளுக்கு எதிரான உடன்படிக்கை.

# 15

## குழந்தைகளின் உரிமைகள்

### (Rights of Children)

குழந்தைகளைப் பேணி அவர்களது எதிர்காலத்தைக் காப்பது பெரியவர்கள், நாடு, ஐ.நா. அவை ஆகியவற்றின் பொறுப்பாகும். உலக மக்கள் தொகையில் 240 கோடி குழந்தைகள் உள்ளனர். அவர்களுள் 25 கோடி குழந்தைத் தொழிலாளர்கள் உள்ளனர். அவர்களுள் 12 கோடிப் பேர் முழுநேரத் தொழிலாளர்கள். கல்வி வாய்ப்பின்மை, பொருளாதாரத் தேவை போன்ற காரணங்களால் அவர்கள் பாதுகாப்பு அற்றவர்களாய் உரிமைகளற்றவர்களாயுள்ளனர். வளரும் நாடுகளில் மனிதர்களின் உரிமைப் பெருக்கம் காரணமாக குழந்தைகளின் உரிமைகளைப் பற்றிய எண்ணங்கள் வலுப்பெறலாயின. மேலும் இந்தியாவிலும் 5.4 விழுக்காடு 5 முதல் 14 வயதுக்கு உட்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் இருந்தனரென்பதை 1991-ஆம் ஆண்டின் மக்கள்தொகைக் கணக்கெடுப்பு கூறுகிறது. 1981-இல் இருந்ததைவிட 10 விழுக்காடு அதிகமாக 64.16% குழந்தைகள் கல்வி கற்றவர்களாகவும், 35.84% குழந்தைகள் கல்வி அறிவில்லாதவர்களாகவும் இருந்தனர். இதைப்போல தமிழகத்தில் 1991ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 85.03% குழந்தைகள் கல்வி கற்றவர்களாக இருந்தார்கள். இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2011 ஆம்

ஆண்டின்படி 5 முதல் 14 வயதுள்ள குழந்தைத் தொழிலாளர்கள் ஒருகோடியே இரண்டு இலட்சம். குழந்தைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை கிராமங்களில் குறைந்து நகரங்களில் மிகுந்து கொண்டிருக்கிறது. இந்நிலையில் குழந்தைகளின் உரிமைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளல் இன்றியமையாததாகும்.

**கல்வி உரிமை**

அரசு கட்டாய இலவசக் கல்வியை அமல் செய்தாலும் பள்ளிக்குச் செல்லத் தொடங்கிய குழந்தைகளின் அளவு 72.77 விழுக்காடாயிருந்தது. ஆனால் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்திவிடும் குழந்தைகளின் எண்ணிக்கை குறையவில்லை. மேலும் கல்வி கற்காமலேயே இருந்துவிடும் குழந்தைகளின் எண்ணிக்கையும் பெருகுகின்றது. குழந்தைகளின் கல்வி கற்றல் மற்றும் பல்வேறு உரிமைகளும் எவ்வாறு உள்ளனவென்பதைக் காணலாம்.

**பிற உரிமைகள்**

இந்திய அரசியலமைப்பு 24ஆம் பிரிவின்படி குழந்தைகளை ஆபத்தான தொழிற்சாலைகளிலோ சுரங்கப் பணிகளிலோ ஈடுபடுத்தக் கூடாது. மனிதப் பண்பாட்டிற்கும், குழந்தைகளின் உரிமைக்கும் பாதிப்பளிக்கக்கூடியவையாகையால் அவற்றைத் தடுக்க வேண்டியதாயுள்ளது. அப்பணிகளில் அவர்களை ஈடுபடுத்தினால் அவர்களுடைய உடல்நலம் கெடும். அவர்கள் முழுமையான வளர்ச்சியை அடைய முடியாது. அவர்களது செயல்கள், ஒழுக்கம் ஆகியவற்றில் குறை ஏற்பட்டு குற்றச் சூழல்கள் அதிகரிக்கும். அவர்களை அத்தகைய பணிகளில் ஈடுபடுத்தாமல் பள்ளிக்குச் செல்ல வகை செய்வது அவர்களுடைய உரிமையைப் பாதுகாப்பதாகும்.

23-ஆம் பிரிவின்படி மனிதனைக் கட்டாயப் பணிகளில் ஈடுபடச் செய்து குழந்தைகளைப் பணியாளர்களாக்கி அவர்களுடைய உரிமை மற்றும் உழைப்பினைச் சுரண்டுவது தடுக்கப்பட வேண்டும்.

39-ஆம் பிரிவு இளமைக் காலத்தில் குழந்தைகளின் வாழ்க்கையை நலமும், பாதுகாப்பும், மகிழ்ச்சியும் உடையதாக இருக்கச் செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றது.

45-ஆம் பிரிவு 1960ஆம் ஆண்டுக்குள் 14 வயது முடிய குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி வழங்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது

இந்திய அரசியலமைப்பு குழந்தைகளின் உரிமைகளைப் பற்றிய கூறுகளைக் கொண்டுள்ளது. இதன் வாயிலாக குழந்தைகளின் உரிமைகளை நாம் நன்கறியலாம்.

**ஐக்கிய நாட்டவையும் குழந்தைகளின் உரிமைகளும்**

பன்னாட்டுக் குழந்தைகளின் நலன் மற்றும் மேம்பாட்டிற்காக ஐக்கிய நாட்டவை பல முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

மனித உரிமைகள் பிரகடனமானது 1948-டிசம்பர் 10-இல் வெளியிடப்பட்டது. அதன் 25-ஆம் பிரிவின்படி திருமண உறவின் மூலம் பிறந்த குழந்தைகளுக்குப் போதுமான சமூகப் பாதுகாப்பு உண்டு எனப்பட்டது. குழந்தைப் பருவத்தில் அவர்களது வளர்ச்சி, பாதுகாப்பு ஆகியவற்றிற்கான உரிமைகள் உண்டு.

அப்பிரகடனத்தின் 26ஆம் பிரிவு கட்டாய இலவச தொடக்கக் கல்வியை குழந்தைகளுக்குத் தரவேண்டுமெனக் கூறுகின்றது.

1966 டிசம்பர் 16-இல் உருவாக்கப்பட்ட வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் பற்றிய கூட்டு ஒப்பந்தத்தின் 24-ஆம் பிரிவு குழந்தைகளின் உரிமைகளைப் பற்றி விளக்குகின்றது. எவ்விதமான வேறுபாடுகளும் இன்றி பெற்றோர், அரசு மற்றும் சமுதாயத்தின் பாதுகாப்பைப் பெற குழந்தைகளுக்கு உரிமையுண்டு என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு குழந்தைக்கும் நாட்டின் பல்வேறு பிரிவுகளால் ஆன உரிமைகளைப் பெற உரிமையுண்டு.

அதைப் போல 3, ஜனவரி 1966-இல் வெளியிடப்பட்ட பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் பற்றிய பன்னாட்டு ஒப்பந்தத்தில் குழந்தை பெற்ற தாய்மார்களின் பாதுகாப்புடன் குழந்தைகளின் பாதுகாப்பைப் பற்றியும் கூறப்பட்டுள்ளது. அவர்களைத் தேவையில்லாத ஆபத்தான பணிகளில் ஈடுபடுத்தக்கூடாது. அவர்களது சுதந்திரத்தையும், சுகாதாரத்தையும் பாதுகாக்கும் உரிமையும் தரப்பட்டுள்ளது. அவ்வுடன்படிக்கையின் 10(2)ஆம் பிரிவு, குற்றம் செய்த குழந்தைகள் தனியாகப் பிரிக்கப்பட்டு அவர்களுடைய வயதுக்கேற்ப நடத்தப்பட்டு, திருத்தப்பட வேண்டும் எனப் பகர்கின்றது.

## குழந்தைகளின் உரிமைகள் பற்றிய ஐ.நா. உடன்படிக்கை

ஐ.நா. பொதுச்சபையால் 20 நவம்பர் 1989-இல் ஏற்றுக்கொள்ளப்பட்டு 2, செப்டம்பர் 1990-இல் நடைமுறைப்படுத்தப்பட்ட உடன்படிக்கை 11, 12, ஜூன் 1989-இல் நடைபெற்ற ஸ்டாக்ஹோம் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. இதற்குப் பல முன் மாதிரிகள் உண்டு. 1924-இல் குழந்தைகள் நலன் குறித்து வெளியிடப்பட்ட ஜெனீவா பிரகடனம், 1948-இல் வெளியான மனித உரிமைப் பிரகடனம், 1986 நவம்பரில் நடந்த சார்க் மாநாடு போன்றவற்றால் குழந்தைகளின் உரிமைகள், நலன்கள் மற்றும் பாதுகாப்பு பற்றிய நடவடிக்கைகள் பல வழிகளில் மேற்கொள்ளப்பட்டன. 2, செப்டம்பர் 1990-இல் இது நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் மூலம் குழந்தைகளின் உரிமைகள் அவற்றுக்கான சட்டப் பாதுகாப்பு, அவற்றுக்கான குடும்பம் மற்றும் அரசின் கடமைகள் ஆகியன தெளிவுபடுத்தப்பட்டன. இதை 61 நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

இவ்வுடன்படிக்கை பல காரணிகளை உள்ளடக்கியிருந்தது. குழந்தைகளுக்கு உள்ள உரிமைகளைப் பாதுகாப்பதில் மிகுதியான கவனம் செலுத்துதல், அவர்களுடைய நலவாழ்விற்கான சுற்றுச்சூழல்கள் சீரானவையாக அமைக்கப்படல், பெற்றோரையும், பெரியோரையும் குழந்தைகளின் நலனுக்காக விட்டுக்கொடுத்து வாழ வகை செய்தல் ஆகியன இன்றியமையாததாகும். இதில் ஒரு முன்னுரை 42 பிரிவுகளும் ...

## முன்னுரை

குழந்தைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவம், சம உரிமைகள், மதிப்பு போன்றவற்றில் தனிக்கவனம் செலுத்தி அவர்களது வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றிற்கு பாதுகாப்பையும் உதவிகளையும் செய்தல் வேண்டும். குழந்தைகள் தங்களது எதிர்காலத்துக்கான தனியான வழியை அமைத்துக் கொள்ள உரிமையுடையவர்கள். சட்டப் பாதுகாப்பின் மூலம் அவர்களது மனஉணர்வுகளை வளரச் செய்யவேண்டும். இளங்குற்றவாளிகள் மீது போதுமான அளவு கவனம் செலுத்தி அவர்களின் வாழ்க்கை புத்துயிர் பெற வழிசெய்தல் வேண்டும். அவர்களது வாழ்க்கை தரமானதாக அமைய ஆவன செய்ய வேண்டுமென்ற நோக்கில் இவ்வுடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது.

## பிரிவுகள்

18 வயதுக்கு உட்பட்டோர் அனைவரும் குழந்தைகள் எனக் கொள்ளப்பட்டு, குழந்தைகள் யார் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. (பிரிவு-1)

எவ்விதமான பாகுபாடுகளும் வேறுபாடுகளுமின்றி நடத்தப்பட்டு பாரபட்சங்கள் நீக்கப்பட்டு பெற்றோர் தேவையில்லாமல் கண்டிப்பதையோ, தண்டிப்பதையோ தடுத்து நிறுத்த வேண்டும். (பிரிவு-2)

குடும்பம், அரசு, சமூகம், நீதிமன்றம், சட்டம் ஆகியன குழந்தைகளின் உரிமைகளை நிலைநாட்டி பாதுகாக்கக் கூடியதாயிருத்தல் வேண்டும். (பிரிவு-3)

அனைத்து குழந்தைகள் நலன்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள பல்வேறு அமைப்புகளும் அதைச் செயலாக்க முயற்சித்தல் வேண்டும். (பிரிவு-4)

பெற்றோர்கள், குழந்தைகளின் வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றைச் செயல்படுத்தக்கூடிய வகையில் தமது பொறுப்புகளையும் கடமைகளையும் செய்யும் உரிமையை உறுப்பு நாடுகள் மதிக்க வேண்டும். (பிரிவு-5)

குழந்தைகளின் வாழ்க்கை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை நாடுகளின் அரசுகள் உத்தரவாதத்துடன் தரவேண்டும். (பிரிவு-6)

குழந்தையின் பிறப்பைப் பதிவு செய்ய வேண்டும். தனக்கென ஒரு பெயரைப் பெறும் உரிமையும், பெற்றோரின் அரவணைப்பைப் பெறும் உரிமையும் உண்டு. (பிரிவு-7)

குழந்தைகளுக்கான பெயர், உறவு, தேசீயம் ஆகியன மறுக்கப்படாமல் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். (பிரிவு-8)

பெற்றோரிடமிருந்து குழந்தையைப் பிரிக்கும் உரிமை யாருக்கும் இல்லை. ஆனால் குழந்தை குற்றவாளியானால், முறையற்ற செயல்களில் ஈடுபட்டால் அல்லது ஈடுபடுத்தப்பட்டால் அந்த நேரங்களில் குழந்தையைப் பற்றித் தீர்மானிக்கும் பொறுப்பு நீதிமன்றத்துக்கு உண்டு. (பிரிவு-9)

ஒரு குழந்தையானது பெற்றோரின் பாதுகாப்பில் வாழ உரிமையுண்டு. பெற்றோர் வெளிநாட்டில் வாழ்ந்தால் அவர்களுடன் குழந்தை சேர்ந்து வாழ மனிதாபிமான முறையில் அனுமதிக்க வேண்டும். (பிரிவு-10)

ஒரு நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டிற்கு சட்டத்திற்குப் புறம்பாகச் செல்வதற்கோ, அல்லது அனுப்புவதற்கோ உரிமையில்லை. அது நிகழாமலிருக்க இருநாடுகளின் அரசுகளும் தக்க நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். (பிரிவு-11)

அனைத்து நிலைகளிலும் தன்னைப் பாதிப்பவற்றைப் பற்றிக் கருத்துக் கூற குழந்தைக்கு உரிமையுண்டு. அவ்வுரிமையை நிலைநாட்ட அரசுகள் உதவ வேண்டும். (பிரிவு-12)

சிந்தனை, மனச்சாட்சி, சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் செயல்பட குழந்தைகளுக்கு உரிமையுண்டு. அதைப் பாதுகாக்க பெற்றோருக்கு உரிமையுண்டு. (பிரிவு-13)

குழந்தைகள் அமைதியாகப் பலருடன் கூடி வாழ உரிமை உடையவர்கள். (பிரிவு-14)

குழந்தைகளின் சொந்த விருப்பு வெறுப்புகளை, அவை முறையானவையாக இருப்பின், தடுப்பதற்கு யாருக்கும் உரிமையில்லை. (பிரிவு-15)

குழந்தைகளின் தனிமை, சிறப்புரிமை ஆகியன எவ்விதமான குறுக்கீடுகளும் இல்லாமல் பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றில் மாற்றங்கள் அல்லது மீறல்கள் ஏற்பட்டால் சட்டப்படியான பாதுகாப்புக்கு உரிமையுண்டு. (பிரிவு-16).

குழந்தைகளைப் பற்றிய செய்திகளை அறிந்து, குழந்தைகள் முழுவளர்ச்சி அடைய உரிமையுண்டு. குழந்தை நூல்கள், குழந்தைகளுக்கான தகவல் தொடர்பு சாதனங்கள், நெறிமுறைகள் ஆகியன உருவாக்கப்பட வேண்டும். குழந்தைகளின் பாதுகாப்புக்கான தகவல் தொடர்புகளை ஏற்படுத்த வேண்டும். (பிரிவு-17)

பெற்றோர் தம்முடைய குழந்தைகளை நல்ல முறையில் வளர்த்து ஆளாக்க கடமைப்பட்டவர்கள். குழந்தைகளின் சுகாதாரம், வளர்ச்சி, படிப்பு, முன்னேற்றம், உரிமைப் பாதுகாப்பு ஆகியவற்றில் பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும். இவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொண்ட நாடுகள் குழந்தைகளின் நலனைப் பேண, பெற்றோர்களுக்கு வழிகாட்டி பெற்றோர்களைச் செயல்படச் செய்யவேண்டும். (பிரிவு-18).

உடல் மற்றும் மன அடிப்படையிலான சுரண்டல்கள், வன்முறை, இழிவுபடுத்தப்படல், புறக்கணிக்கப்படல், கொடுமைப்படுத்தப்படல் போன்ற முறைகேடுகள் இன்றி குழந்தைகளுக்குத் தேவையான பாதுகாப்புகள் கிடைக்க வகை செய்ய வேண்டும். (பிரிவு-19)

பெற்றோரிடமிருந்தும், குடும்பத்திலிருந்தும் பிரிந்து வாழவேண்டிய நிலை ஒரு குழந்தைக்கு ஏற்பட்டால் அக்குழந்தையைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும். (பிரிவு-20)

குழந்தைகளைத் தத்தெடுப்பதைச் சட்டம் அங்கீகரிக்கின்றது. ஆனால் தத்தெடுக்கும் போது குழந்தைகளின் உச்சக்கட்ட நலன் மனத்திற் கொள்ளப்பட வேண்டும். (பிரிவு-21)

ஒரு குழந்தை அகதியானால் பிற குழந்தைகளுக்குள்ள உரிமைகள் அந்தக் குழந்தைக்கும் தரப்பட வேண்டும். அதைச் செய்து தருவது அரசின் பொறுப்பாகும். இது, மனிதத்தன்மை மற்றும் மனிதாபிமான உரிமை காரணமாக மேற்கொள்ளப்படுவதாகும். (பிரிவு-22)

உடல் ஊனமுற்ற, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு அவர்களுக்கு சுயசார்புநிலை தரப்பட வேண்டும். சமுதாயத்திலும் அவர்கள் பங்கேற்க வகை செய்ய வேண்டும். அவர்களுடைய உடல் ஊனங்களை நீக்க, மன வளர்ச்சியை உண்டாக்க அரசு தேவையான மருத்துவ வசதிகளைத் தரவேண்டும். (பிரிவு-23)

முழுமையான பராமரிப்பின் மூலம் குழந்தைகளுடைய உடல்நலம் பேணிப் பாதுகாக்கப்படவேண்டும். குழந்தை மரணம் தடுக்கப்பட வேண்டும். அவர்களுக்கான ஊட்டச்சத்து நிறைந்த உணவை நல்க வேண்டியதும் அரசின் பொறுப்பாகும். தூய்மையான நீர் வசதி, காற்றோட்ட வசதி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, அக்குழந்தையின் தாயின் பாதுகாப்பு போன்ற பல வழிகளிலும் அந்தந்த நாடுகளின் அரசுகள் செயல்பட வேண்டும். (பிரிவு-24)

மனநலம் குன்றிய, உடல் ஊனமுற்ற குழந்தைகளின் மனஉளைச்சலைக் குறைக்கக் கூடிய வகையில் அவர்கள் கவனிக்கப்பட வேண்டும். பொருளாதாரப் பின்னணிகள் அவர்களுக்கு பக்கபலமாக இருக்கச் செய்ய வேண்டும். (பிரிவு-26)

குழந்தைகளின் மன வளர்ச்சிக்காக அவர்களுடைய ஆன்மீகம், ஒழுக்கப் பண்பாடு ஆகியவற்றை வளரச் செய்வது பெற்றோரின் கடமையாகும். உடன்படிக்கை நாடுகள் இதற்கான வழிவகைகளைச் செய்து தர வேண்டும். (பிரிவு-27)

குழந்தையின் எதிர்காலம் அது கற்கும் கல்வி சார்ந்தது. கல்வி உரிமையை உறுப்பு நாடுகளும் பெற்றோர்களும் பாதுகாத்துத் தர வேண்டும். கட்டாய தொடக்கக்கல்வி, மேல்நிலைக்கல்வி, தொழிற்கல்வி போன்றவற்றிலும் அவர்களுடைய உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும். கல்வியைப் பெற அவர்கள் தொடர்ந்து பள்ளிக்கு அனுப்பப்பட்டு, பள்ளியிலிருந்து இடையில் நிற்கும் நிலை தவிர்க்கப்பட்டு, முறையான கல்வியைத் தர அரசுகள் முன்வரவேண்டும். கல்விமுறையில் காலத்திற்கேற்ற புது முறைகள் புகுத்தப்பட்டு பயனடையச் செய்தலும் தவிர்க்க முடியாதது. (பிரிவு-28)

குழந்தையின் கல்வியானது அவர்களுடைய ஆளுமை, உரிமை ஆகியவற்றைப் பாதுகாக்கக் கூடியதாய், பெரியோர், பெற்றோர், பண்பாடு, கலாச்சாரம், நாடு ஆகியவற்றை மதிக்கும் பண்பை அவர்களிடம் உருவாக்க வேண்டும். (பிரிவு-29)

சிறுபான்மைப் பிரிவைச் சேர்ந்த பழங்குடியினரின் குழந்தைகளைப் போன்றோருக்கும் சமுதாயத்தின் பிற குழந்தைகளுக்கு உள்ளதைப் போன்ற ஒத்த உரிமைகள் உண்டு. மற்ற குழந்தைகளுடன் இணைந்து சமயம், பண்பாடு, மொழிவளம் ஆகியவற்றைப் பெற அவர்களுக்கு உரிமையுண்டு. எனவே சீரான சூழல்களை உருவாக்கி கல்வியளிப்பது உறுப்பு நாடுகளின் கடமை. (பிரிவு-30)

குழந்தைகள் பொழுதுபோக்கு, ஓய்வு, விளையாட்டு ஆகியவற்றில் ஈடுபட்டு இழந்த சக்தியை மீண்டும் பெற இயலும். இவ்வுரிமைகள் நல்கப்பட்டால் தான் அவர்களது எதிர்காலம் சிறப்படையும். அதற்கான வாய்ப்புகளை அரசு தரவேண்டும். (பிரிவு-31)

பொருளாதாரச் சுரண்டல்களிலிருந்து பாதுகாப்பதும் அரசின் கடமையாகும். வேலைகளில் சேரும் வயது, குழந்தைத் தொழிலாளர்களைத் தவிர்த்தல் போன்றவற்றிற்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். வேலை நேரம் மற்றும் பிற விதிமீறல்களைச் சட்டப்படி தவிர்த்தல். (பிரிவு-32)

போதைப் பொருட்களைப் ... பதற்கா

பாதுகாப்பை குழந்தைகளுக்குத் தர வேண்டும். மனதையும் உடலையு பாதிக்கும் மருந்துகளை அவர்கள் பயன்படுத்துவதை தடுக்க வேண்டும் அவற்றைத் தயாரித்தல், மக்களுக்கு அவற்றைத் தருத போன்றவற்றிலிருந்து குழந்தைகள் பாதுகாக்கப்பட வேண்டும் (பிரிவு-33)

பாலியல் ரீதியில் குழந்தைகள் கொடுமைப்படுத்தப்படுவதைத் தடுக்க வேண்டும். முறைகேடாக அச்சுறுத்தி, குழந்தைகளை ஏமாற்றி முறையற்ற பாலியல் நடவடிக்கைகளில் ஈடுபடச் செய்வதைத் தடைசெய்ய தேசிய மற்றும் பன்னாட்டளவில் முடிவுகள் எட்டப்பட வேண்டும். (பிரிவு-34)

குழந்தை கடத்தல், குழந்தைகளை விற்றல் போன்றவையும் தேசிய மற்றும் பன்னாட்டளவில் தடுக்கப்பட வேண்டும். (பிரிவு-35)

குழந்தைகளின் நலன்களை பலவழிகளிலும் பாதுகாக்க உறுப்பு நாடுகளின் அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பெண் குழந்தைகளை பாலியல் குற்றங்களில் ஈடுபடுத்துதல், கொத்தடிமைகளாக ஆக்குதல் ஆகியவை தடுக்கப்பட வேண்டும். சமூகச் சூழல்களிலிருந்து புறக்கணிக்கப்பட்ட குழந்தைகள் சமூக விரோதிகளாகின்றனர். அவர்கள் திருடர்களாக மாறுகின்றனர். அவர்கள் நிரந்தரக் குற்றவாளிகளாக மாறக்கூடாது. இத்தகைய கொடுமைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்ற 1960-இல் இந்திய அரசு குழந்தைகள் நலச் சட்டத்தை இயற்றியது. 1974-இல் இந்திய அரசு உருவாக்கிய குழந்தைகள் பற்றிய தேசியக் கொள்கை பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்பளித்தது. 1986-இல் இயற்றப்பட்ட சட்டப்படி அநாதைகளான, முறையற்ற செயல்களில் ஈடுபட்ட, தவறு செய்த குழந்தைகள் கண்டறியப்பட்டு இளங்குற்றவாளிகள் நல வாரிய அமைப்புக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். போர்களில் அவர்களை ஈடுபடுத்தக் கூடாது. போர்களால் பாதிக்கப்படும் குழந்தைகளுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும். 1986-இல் குழந்தைத் தொழிலாளர் நலச் சட்டம் இந்தியாவில் இயற்றப்பட்டது. அதன்படி பாதுகாப்பும், கல்வியும் பெற உரிமையுண்டு.

# 16

## இளங்குற்றவாளிகள், கொத்தடிமைகள் மற்றும் அகதிகளின் உரிமைகள்

உரிமைகள் அனைவருக்கும் பொதுவானவை; சமுதாயத்தில் பிரிவினருக்கும் தேவையானவை. இந்நிலையில் இளங்குற்றவாளிகள், கொத்தடிமைகள் மற்றும் அகதிகளின் உரிமைகளும் காக்கப்பட வேண்டியவை ஆகும். ஆகவே அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ளல் இன்றியமையாததாகும்.

### இளங்குற்றவாளிகள்

சமுதாயத்தின் பல வகைக் குற்றவாளிகளுள் இளங்குற்றவாளிகளும் உண்டு. அவர்கள் பொதுவாக திட்டமிட்டு முறைப்படி குற்றம் செய்வதில்லை. ஆனால் பலவகையான சமூகச் சூழல்கள் அவர்களைக் குற்றவாளிகளாக ஆக்குகின்றன. அவற்றைத் தெரிந்து கொண்டால் அவர்களது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியதன் இன்றியமையாமை புலப்படும்.

### குடும்பச் சூழல்கள்

ஒரு குடும்பத்தில் பலவிதமான சூழல்கள் இருக்கலாம். அவற்றுள் குழந்தைகளின் மன உணர்வுகளைப் பாதிக்கக்கூடிய சூழல்களும் இருக்கலாம். அப்போது அவர்கள் தம்முடைய உள்ளுணர்வுகளின்

உந்துதல்களால் வீட்டை விட்டு வெளியேறி சமூக விரோதிகளுடன் தொ
கொண்டு சமூக விரோதச் செயல்களில் ஈடுபடலாம். அதேநேரம் பெற்
குழந்தைகளை முறையாகப் பாதுகாத்துப் பராமரிக்கத் தவறும்
அவர்கள் மீதான எதிர்ப்பு மற்றும் வெறுப்புணர்வு காரணமாக அவ
வீட்டை விட்டு வெளியேறி முறையற்ற செயல்களில் ஈடுபடலாம். போ
பொருட்களைப் பயன்படுத்துவது போன்ற தவறுகளைச் செய்கின்ற
தவறான, முறையற்ற வாழ்க்கையை நடத்தும் பெற்றோர்களுக்கு எதிர
குழந்தைகள் திரும்புவதும் இயல்பானது. அதனால் குழந்தைக
வாழ்க்கை சீரழிந்து விடும். அதைப்போல வறுமையில் வா
குடும்பத்திலுள்ள குழந்தைகளும் வறுமை காரணமாக குற்றங்க
ஈடுபடுகின்றனர். பணத்தேவைகளுக்காக திருடுதல், அபின் கடத்து
கள்ளச் சாராயம் விற்றல் போன்ற குற்றங்களைச் செய்கின்றார்
குடும்பச் சூழல்களால் சீரழிக்கப்பட்ட குழந்தைகள் தெருவோ
குழந்தைகளாக மாறுகின்றார்கள். இச்சூழலில் வீட்டைவிட்டு வெளியே
பெண் குழந்தைகளின் நிலை மாறுபட்டதாகும். கல்வியறிவும் குடு
பாதுகாப்பும் இல்லாத நிலையில் உணவுக்காக மாறுபட்ட செயல்களு
உட்பட்டுச் சுரண்டல்களுக்கு ஆளாகிறார்கள். அது அவர்கள
இளங்குற்றவாளிகளாக்குகிறது. இந்தியாவிலும் இச்செயல்க
நடைபெறுகின்றன.

**பாதுகாப்பும் உரிமைகளும்**

சமூகத்தால் இளங்குற்றவாளிகள் எனக் குற்றம் சாட்டப்ப
பிரிவினரின் பாதுகாப்புக்காகப் பல நடவடிக்கைக
மேற்கொள்ளப்படுகின்றன. 1958-ஆம் ஆண்டில் உருவாக்கப்ப
இளங்குற்றவாளிகள் சட்டப்படி 21 வயதுக்கு உட்பட்ட பிரிவினர் செய்
குற்றங்களால் அவர்கள் இளங்குற்றவாளிகள் எனப்படுகின்றன
16 வயதுக்குட்பட்ட குற்றவாளிகள் அவர்கள் செய்த தவறுகளுக்கா
சிறையிலடைக்கப்படுவதற்குப் பதிலாக சீர்திருத்தப் பள்ளிகள், மாவ
நீதிபதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள குழந்தை காப்பகங்க

ஆகியவற்றினால் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறப்படுகின்றது. 1960-இல் இயற்றப்பட்ட குழந்தைகள் சட்டத்தின் மூலம் குழந்தை காப்பகங்கள் உருவாக்கப்பட்டன. இது இளங்குற்றவாளிகளை மீட்க மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும். அதேநேரம் 1959-இல் ஐ.நா. பொதுச் சபை குழந்தைகள் உரிமை பிரகடனத்தை வெளியிட்டது. 1974-இல் இந்திய அரசு குழந்தைகள் பற்றிய தேசிய கொள்கையை உருவாக்கி அவர்களுக்கு பாதுகாப்பளிக்க முன் வந்தது. 1979ஆம் ஆண்டு குழந்தைகள் ஆண்டாக ஐ.நா. அவையால் அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1985-இல் இளங்குற்றவாளிகள் பாதுகாப்புக்கென இளங்குற்றவாளிகள் நீதி பரிபாலன முறை செயல்படுத்தப்பட்டது. அதன் விளைவாக இந்திய அரசு 1986-இல் இளங்குற்றவாளிகள் சட்டத்தை உருவாக்கி 1987-இல் நடைமுறைப்படுத்தியது. அதன்படி குழந்தைகள் இளங்குற்றவாளிகள் ஆவதற்கான வழிகள் தடுக்கப்பட்டது. தன்மைகளுக்கேற்ப அவர்களுடைய நடவடிக்கைகளைத் திருத்த வகை செய்யப்பட்டது. 1974ஆம் ஆண்டு குற்றவியல் சட்டம் இளங்குற்றவாளிகள் கண்காணிப்பு விடுதிகள், காப்பகங்கள், சிறப்புக் காப்பகங்கள் ஆகியவற்றை உருவாக்கல், சீரமைக்கப்பட்ட இளங்குற்றவாளிகளைக் கண்காணித்தல் போன்ற செயல்களை நல்கியது. 1989-இல் குழந்தைகள் உரிமைகளைப் பாதுகாக்க ஐக்கிய நாட்டவை மேற்கொண்ட பல செயல்களை 61 நாடுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

### கொத்தடிமைகள்

தொழிலாளர்களின் நிலை பல நேரங்களில் இரங்கத்தக்கதாக உள்ளது. குறிப்பாக தனியாரின் கட்டுப்பாட்டில் செயல்படும் தொழிலாளர்கள் சிக்கல்களுக்கு ஆளாகின்றனர். குறைந்த ஊதியம் பெறும் அவர்கள் தாம் பெற்ற கடனைத் திருப்பித் தரவேண்டுமென்பதற்காகக் கொத்தடிமைகளாக ஆக்கப்படுகின்றனர். அவர்கள் முறையற்ற வழிகளில் கடுமையான பணிகளைக் கட்டாயமாகச்

செய்யுமாறு வற்புறுத்தப்படுகின்றனர். வட்டி செலுத்த முடியாததால் அவர்களின் குடும்பத்தினரும் கொத்தடிமைகளாகும் நிலை ஏற்படுகின்றது. உழைப்பைச் சுரண்டுதல், அடிமைகளாக வாங்கி வேலை வாங்குதல், பெண்களை பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்குவதற்காக விற்பனை செய்தல், பணியாளர்களைக் கொடுமைப்படுத்துதல் போன்ற காரணங்களால் அவர்கள் கொத்தடிமைகளாகின்றனர். மனிதன் பசியாலும் பட்டினியாலும் வறுமையாலும் வாடும் போதும், வேலை இல்லாமையாலும், உழைப்புக்கேற்ற ஊதியம் இன்மையாலும் கொத்தடிமைகளாக மாற்றப்படுகின்றனர். கட்டாயமாக முறையற்ற வழிகளில் பணி செய்யுமாறு வற்புறுத்தப்பட்டு உரிமைகளற்ற நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

பொருளாதாரச் சூழல்களாலும், சீரழிவுகளாலும் கொத்தடிமை முறை உருவாயிற்று. பொருள் வளமின்றி வறுமையில் வாடிய உழைக்கும் வர்க்கத்தினர் செல்வந்தர்களால் சுரண்டப்பட்ட போது ஏற்பட்ட அடிமை முறையானது கொத்தடிமை முறை எனப்பட்டது. பண்ணை உடமையாளர்கள், நிலக்கிழார்கள், நிலமானிய பிரபுக்கள் ஆகியோர் தொழிலாளர்களைக் கட்டாயப்படுத்தி இந்நிலைக்கு ஆளாக்கினார்கள். கொத்தடிமைகள் உரிமைகளேதுமின்றி விலங்குகளென வாழ்ந்தனர்.

1978-இல் தேசிய தொழிலாளர் கழகம் இந்தியாவில் 13 இலட்சம் கொத்தடிமைகள் இருப்பதாகத் தெரிவித்தது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 21ஆம் பிரிவுப்படி மனிதனொருவனது உயிர் அல்லது உடல் சார்ந்த உரிமைகளை சட்டம் மூலம் பாதுகாத்துக் கொள்ளலாம். 23-ஆம் பிரிவானது மனிதனை வர்த்தகப் பொருளாக்கி கட்டாயப் பணிகளில் ஈடுபடச் செய்வதைத் தடை செய்கின்றது. அத்தகைய மீறல் தண்டனைக்குரிய குற்றம் எனப்படுகின்றது. 39-ஆம் பிரிவின் மூலம் குடிமக்கள் தமது வயது மற்றும் சக்திக்கு மீறிய செயல்களைச் செய்யக்

கட்டாயப்படுத்துவதினின்றும் தடை செய்யப்பட்டுள்ளது. 41-ஆம் பிரிவு, அரசானது தன்னுடைய பொருளாதார சக்திக்கேற்ப வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும் எனக் கூறுகின்றது. அத்துடன் வேலையற்றோர், முதியோர் போன்ற பல பிரிவினருக்கு பொது நலநிதி மூலம் உதவிகள் செய்ய வேண்டுமெனத் தெரிவிக்கின்றது. 42-ஆம் பிரிவு நியாயமான பணிச்சூழல், உழைப்புக்கேற்ற ஊதியம் பற்றித் தெரிவிக்கின்றது. இவ்வாறு இந்தியாவில் கொத்தடிமை முறையை நீக்குவதற்கான பல வழிகள் மனித உரிமைகள் பாதுகாப்பு முறையில் உருவாக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் இந்தியச் சட்டங்கள் கீழே தரப்பட்டுள்ள வகையில் கொத்தடிமை முறை ஒழிப்பிற்கு வகை செய்கின்றன. அவை சுதந்திர இந்தியாவில் இயற்றப்பட்டவை. 1948-ஆம் ஆண்டின் குறைந்த ஊதியச் சட்டம், 1952-ஆம் ஆண்டின் சுரங்கச் சட்டம், 1970-ஆம் ஆண்டின் ஒப்பந்தக் கூலிச் சட்டம், அதே ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒப்பந்தக் கூலி (ஒழுங்கு மற்றும் ஒழிப்பு) சட்டம், 1976-ஆம் ஆண்டின் கொத்தடிமைகள் ஒழிப்புச் சட்டம், 1976-ஆம் ஆண்டின் சமஊதியச் சட்டம், 1979-ஆம் ஆண்டின் இடம் பெயரும் தொழிலாளர் வேலைமுறை மற்றும் பணிநிலைச் சட்டம், 1981-ஆம் ஆண்டின் குழந்தைத் தொழிலாளர் தடுப்புச் சட்டம் ஆகியன கொத்தடிமை ஒழிப்பு முயற்சிகளாகும்.

மேலே சொல்லப்பட்ட சட்டங்களுடன் உச்சநீதிமன்ற வழக்குகளின் தீர்ப்புகளும் கொத்தடிமை ஒழிப்புக்கு ஆதரவாயுள்ளன. (எ.கா) 1997-இல் உச்சநீதிமன்றம் குறிப்பிட்ட முறைகளில் தமிழக அரசு 10,000 கொத்தடிமைகள் மறுவாழ்வுத் திட்டத்தை உருவாக்கி அமலாக்கியது. நவம்பர் 1997-இல் 32 கொத்தடிமைகள் மீட்கப்பட்டு மறுவாழ்வளிக்கப்பட்டனர். நெசவாளிகள், சிறுவர்கள், பெண்கள் ஆகியோர் மீட்கப்பட்டனர். தொண்டு நிறுவனங்களின் மூலம் அவர்களுக்கு நிவாரணம் வழங்க வகை செய்யப்பட்டது. கல்லுடைத்தல், பிற மாநிலங்களில் கொத்தடிமைகளாகச் செயல்படல் போன்றவற்றிலிருந்து சிறுவர்கள் பல முறை மீட்கப்பட்டுள்ளனர்.

கொத்தடிமைகள் மீட்கப்பட்டு அவர்களுக்குப் புத்துயிரும் மறுவாழ்வும் தரவேண்டியது அரசின் கடமையாகும். 1998-இல் பல கொத்தடிமைகள் மீட்கப்பட்டு மறுவாழ்வு பெற்றனர். கொத்தடிமைகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு அரசு வசதிகள் தர வகை செய்யப்பட்டுள்ளது. தொழில் செய்வதற்காக பணம் தரப்படுகின்றது. குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. ஊரக இளைஞர்களுக்கு சுயவேலைத் திட்டம் மூலம் வேலைக்கான பயிற்சிகள் தரப்படுகின்றன. கொத்தடிமைக்குக் காரணமாக இருந்தவர்கள் தண்டனைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இவையனைத்தும் முறையாகச் செயல்படுத்தப்பட வேண்டும். அரசின் செயல்பாடுகள் மக்களைச் சென்றடைய வேண்டும். மறுவாழ்வு நடவடிக்கைகள் சீராக முறைப்படி அமலாக்கப்படவேண்டும்.

**அகதிகள்**

போர், இனக்கலவரம், வேலையின்மை, சமயச் சிக்கல்கள் போன்றவற்றின் பாதிப்புகளிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு குடிபெயரும் பிரிவினர் அகதிகள் எனப்படுவர். அவர்களது வாழ்க்கை நிலையற்றதாய், உரிமைகளற்று, துயரமுடையதாயிருக்கும். அவர்களுக்கு உயிர், உடமைகள் மீது உரிமைகள் இருப்பதில்லை. அவர்களது அன்றாடத் தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது. உணவு, உறையுள் ஆகியன இல்லாதவர்களாயிருப்பர். உயிருக்கும் உடமைகளுக்கும் பாதிப்பு ஏற்படும் போது பாதுகாப்புக்காக அகதிகளாக மாறுகின்றனர். இது பலநாடுகளுக்கும் பொருந்தக் கூடிய ஒரு சிக்கலாகும்.

அனைத்துலக மனித உரிமைகளின் (1948) மூன்றாம் பிரிவு மனிதர்கள் சுதந்திரமாக வாழ, பாதுகாப்புடன் திகழ உரிமையுண்டு என்பதை வலியுறுத்துகின்றது. அதன் 14-ஆம் பிரிவு பலதரப்பட்ட கொடுமைகளிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள பிறநாடுகளுக்குச்

புகலிடம் தேட உரிமை உண்டென்று கூறுகின்றது. மனிதத் மற்றும் மனிதாபிமான முறைகளில் அகதிகளின் மறுவாழ்விற்கு செய்தல் அரசாங்கத்தின் கடமையாகும். இம்முறைகளில் கூடியதாய் 1951-இல் ஐக்கிய நாட்டவையின் அகதிகள் உயர் ஆணையம் (U.N. High Commission for Refugees) உருவாக்கப்பட்டது. ஆண்டில் அகதிகள் பற்றிய ஒப்பந்தங்களை தொடர்புடைய நாடுகள் கொள்ளவும் வகை செய்தது. 1967-இல் மற்றொரு ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. பன்னாட்டு உடன்படிக்கைகளை மேற்கொள்ளல், அகதிகளின் நலனுக்காக நாடுகளின் பொருளாதாரத்தை உயர்த்துதல், அகதிகள் தங்க வழி செய்தல், அவர்களுடைய சொத்துப் பாதுகாப்புக்கான முயற்சிகளை எடுத்தல், வாழ்க்கை மேம்பட வகை செய்தல், தனியார் அமைப்புகளின் மூலம் வசதி செய்து தரல், பன்னாட்டு மனிதர்கள் உடன்பாட்டைச் (1969) செயல்படுத்துதல் போன்றவற்றின் மூலம் அவர்களை மேம்படுத்தலாம்.

ஐக்கிய நாட்டவையின் அகதிகள் உயர் ஆணையத்தின் கருத்துப்படி இந்தியாவில் அகதிகள் சிறப்பாக நடத்தப்படுகின்றனர். திபெத், இலங்கா, பங்களாதேஷ், ஈரான், ஈராக், சூடான், மியான்மர், ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வரும் அகதிகள் தங்குவதற்கும் தாயகம் திரும்புவதற்கும் அரசால் வசதி செய்யப்பட்டுள்ளது. 1976 முதல் அகதிகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டிருப்பதாக ஐக்கிய நாட்டவையின் புள்ளி விபரம் கூறுகின்றது. இவ்வாறு பல்வேறு பிரிவினரின் உரிமைகள் பன்னாட்டளவில் பாதுகாக்கப்படுகின்றன.

மேலும் அகதிகளின் உரிமைகளைப் பற்றிப் பாட எண். 24-இல் காண்க.

1976 – 420

# 19

# சித்ரவதை பிற கொடூரமான, மனிதத் தன்மையற்ற நடத்தை மற்றும் தண்டனைகளுக்கு எதிரான உடன்படிக்கை

(Convention on Protection against Torture and other Civil Inhuman Treatment and Punishment)

உலகில் அமைதியும், விடுதலையும், சமாதானமும், நீதியும் நிலைநாட்டப்பட மனிதர்களுக்கு சம உரிமைகள் தேவை. அவை மதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் தவறு செய்தவர்களுக்கு கொடூரமான, மனிதத்தன்மையற்ற தண்டனைகளைத் தருவதோ அவர்களைச் சித்ரவதை செய்வதோ முறையற்றது. இத்தகைய செயல்கள், உலகநாடுகளிடையே மனிதர்களுக்குத் தீங்காக இருந்ததால் ஐக்கிய நாட்டவையின் பொதுச் சபையானது 10, டிசம்பர் 1984-இல் சித்ரவதை, கொடூரமான, மனிதத்தன்மையற்ற நடத்தை மற்றும் தண்டனைகளுக்கு எதிரான உடன்பாட்டை உருவாக்கியது. 26, ஜுன் 1987 முதல் இது நடைமுறைப்படுத்தப்பட்டது.

**முன்னுரை**

உலக மனிதர்கள் அனைவருக்கும் பொதுவான மனித உரிமையானது மனித உள்ளுணர்வுகளின் வெளிப்பாடாகும். மனித உரிமைகளை நடைமுறைப்படுத்தி அவற்றை உலகம் மதிக்கச் செய்வது

அரசின் கடமையாகும் என்பதை ஐக்கிய நாட்டவை சாசனத்தின் 55-ஆம் பிரிவு கூறுகின்றது. சித்ரவதை செய்தல், கொடுமைப் படுத்துதல் மனிதத்தன்மைக்கு மாறாக அவமானப்படுத்துதல் போன்ற கொடுமைகள் ...க்கப்பட வேண்டுமென்பதை பன்னாட்டு வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் பிரகடனம் அறிவித்துள்ளது. அதைத் தொடர்ந்து சித்ரவதை, ...கொடூரமான, மனிதத்தன்மையற்ற நடத்தை மற்றும் தண்டனைகளுக்கு ...திரான உடன்படிக்கை உருவாயிற்று.

...கூறுகள்

இவ்வுடன்படிக்கையில் 16 கூறுகள் உண்டு. அவை உரிமைகளைப் பற்றி விளக்குவனவாக உள்ளன.

குறிப்பிட்ட ஒருவரிடமிருந்து ஒரு தகவலையோ, ஒப்புதலையோ, வாக்குமூலத்தையோ பெறவேண்டி மனதாரத் தெரிந்தே, அவரது உடலுக்கும், உள்ளத்துக்கும் வலியையும், துன்பத்தையும் தரக்கூடிய செயலைச் செய்தல் சித்ரவதை என்று விவரிக்கின்றது. ஒருவர் செய்த தவறுக்காக தரப்பட்ட தண்டனை அளவுக்கு மீறியதாயிருப்பின் அதுவும் சித்ரவதையேயாகும். அரசு, அரசு அதிகாரி அல்லது அரசின் அமைப்பின் செயலால் ஒருவருக்குத் துன்பமோ, வலியோ ஏற்பட்டால் அச்செயல் சித்ரவதை எனப்படும். சட்டப்படி வழங்கப்பட்ட தண்டனைகளால் மேற்சொன்ன சிக்கல் எழுந்தால் அது சித்ரவதையாகாது.

தவறிழைப்போரை சித்ரவதை செய்வதைத் தடுக்க சட்டம், நீதி, நிர்வாகம் போன்ற வழிகளில் நடவடிக்கை எடுக்கும் உரிமை அரசுக்கு உண்டு. மாறாக, போர்ச் சூழல், நெருக்கடியான அசாதாரண நிலை போன்ற நேரங்களில் சித்ரவதை செய்ததற்கான காரணத்தை விளக்கத் தேவையில்லை. மேல்நிலை அதிகாரிகளின் ஆணையைக் காரண... ...இருக்க முடியாது.

3. இவ்வுடன்படிக்கையை ஏற்றுக்கொண்ட நாடுகளுள் ஒன்று, தன்நாட்டு குடிமகனை வேறு நாட்டு விசாரணைக்கு அனுப்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு அவன் சித்ரவதைக்கு ஆட்படக்கூடும் என்ற நிலை எழுந்தால் அவனை வெளிநாட்டுக்கு அனுப்பத் தேவையில்லை.

4. உடன்படிக்கை நாடுகளனைத்தும் சித்ரவதை என்பது தன் நாட்டு கிரிமினல் சட்டப்படி குற்றம் என்பதைத் தெளிவுபட உறுதிசெய்ய வேண்டும். சித்ரவதை செய்ய முயற்சித்தல், சித்ரவதையில் பங்கு பெறல், அதற்கு ஒத்துழைத்தல் ஆகியனவும் குற்றங்களெனக் கருதப்படும்.

5. குற்றங்கள் ஒரு நாட்டின் அரசுக்குட்பட்ட தரை, வான் மற்றும் நீர்வழிப் பகுதிகளில் செய்யப்பட்டாலும் தன் நாட்டின் குடிமகனான குற்றவாளியை அரசுக் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த பின்னரே விசாரிக்க வேண்டும்.

6. அரசுக்கு கிடைத்த தகவல்கள் முறையாக ஆய்வு செய்யப்பட்டு, ஒருவர் குற்றவாளி எனக் கருதப்பட்டால், அவர் அவ்வரசுக்கு உட்பட்ட எப்பகுதியில் இருந்தாலும் அவரை கைது செய்து காவலில் வைத்தல் போன்ற சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். வேற்று நாட்டவர் ஒருவர் சித்ரவதை செய்திருந்தால் அவர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அவர் நாட்டுக்குத் தெரிவிக்க வேண்டும். அத்துடன் ஒரு அரசு மேற்கொண்ட விசாரணை அதன் முடிவு போன்றவை பற்றிய அறிக்கையை தவறு செய்தவரது நாட்டின் அரசுக்கு அறிவிக்க வேண்டும்.

7. சித்ரவதையின் அடிப்படையில் குற்றம் செய்தவரை, வழக்கு நடவடிக்கைகளுக்காகத் தகுந்த அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்.

பொதுவான சட்டப்படியான நடவடிக்கைகளையே சித்ரவதைக் குற்றங்களிலும் எடுக்க வேண்டும். பெண் குற்றவாளிகளை நியாயமாக விசாரணைகள் செய்ய வேண்டும்.

8. பல நாடுகளுக்கிடையிலான ஒப்பந்தங்களின் அடிப்படையில் சித்ரவதைக்காக ஒரு குற்றவாளியை அவரது நாட்டின் அரசிடம் ஒப்படைக்க வேண்டும். இத்தகைய ஒப்பந்தங்கள் இல்லையெனில் ஒரு நாட்டின் வேண்டுகோளுக்கிணங்க ஒருவரை அந்த அரசிடம் ஒப்படைக்கலாம்.

9. சித்ரவதை சார்ந்த வழக்குகள் தொடர்பான சாட்சிகளையும் அரசுகள் பரிமாறிக் கொண்டு வழக்குகளை முறையாக நடத்த வகை செய்ய வேண்டும்.

10. சட்டத்தைச் செயல்படுத்துபவர்கள் சித்ரவதை சார்ந்த பல நிலைகளையும் அறிந்தவர்களாயிருக்க வேண்டும். அதற்கான பயிற்சிகளைப் பெற்றிருக்க வேண்டும். சித்ரவதை தடுப்பு பற்றிய செயல்கள், கடமைகள் ஆகியன அனைத்துப் பிரிவினருக்கும் தெளிவாக விளக்கப்பட வேண்டும்.

11. சித்ரவதை செய்தவர்கள்மீது சட்டநடவடிக்கை எடுக்கும்போது அக்குற்றவாளியை எவ்வாறு நடத்த வேண்டுமென்பதற்கான விதிமுறைகளை மதிப்பிட்டுத் தீர்மானிக்க வேண்டும்.

12. ஒரு அரசுக்கு உட்பட்ட நாட்டின் எந்தப் பகுதியிலும் சித்ரவதைக் குற்றம் நடந்ததற்கான தகுந்த முகாந்திரங்கள், சான்றுகள் இருந்தால் அவை முறையான விசாரணையின் மூலம், தகுந்த அதிகாரிகளின் துணையுடன் பாகுபாடற்ற முறையில் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

13. குறிப்பிட்ட ஆட்சிப் பகுதியில் உள்ள அரசு, தன்னுடைய பகுதியில் சித்ரவதை செய்யப்பட்டதாகக் கூறும் அனைவருக்கும் தக்கபடி முறையீடு செய்ய, அவர்கள் மீதான வழக்குகளை முறையாக விசாரித்து முடிவு செய்ய வகை செய்ய வேண்டும். புகார் செய்தவரையும் புகாருக்கு சாட்சியளித்தவரையும் பாதுகாக்கும் கடமை அரசுக்கு உண்டு. இவற்றைப் பெற சித்ரவதை செய்யப்பட்டவருக்கும் உரிமையுண்டு.

14. சித்ரவதை நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டவருக்கு மறுவாழ்வும் இழப்பீடு பெறுவதற்கான உரிமைகளும் சட்டப்படி உள்ளன என்பதற்கு அனைத்து அரசுகளும் உத்தரவாதம் தரவேண்டும்.

15. சித்ரவதை செய்யப்பட்டதற்கான வாக்குமூலம் பெறப்பட்டபின் வாக்குமூலம் பெறப்பட்டது என்று நிரூபிக்கப்பட்டால் அவ்வாக்குமூலத்தை சாட்சியாக ஏற்கக் கூடாது.

16. சித்ரவதை, கடுமையான நடவடிக்கைகள், மனிதத்தன்மையற்ற தண்டனை போன்றவற்றை அதிகாரிகள் மேற்கொள்ளாமல் தடுக்க வேண்டியது ஒவ்வொரு அரசின் கடமையாகும். பிரகடனத்தின் கூறுகளால் ஐக்கிய நாட்டவையானது மனித உரிமைகளின் முழுமையான பாதுகாவலன் என்பது வலியுறுத்தப்படுகின்றது.

- - -

## அலகு – ஐந்து

- ❖ பெண்ணுரிமை.
- ❖ பெண்களின் சமகாலப் பிரச்சினைகளும் மற்றும் மனித உரிமைகளும்.
- ❖ மனித உரிமை மற்றும் ஊடகங்களும் சுற்றுச்சூழலும்.
- ❖ மனித உரிமை சார்ந்த இந்தியச் சட்டங்கள்.

# 21

## பெண்ணுரிமை

ஆண்களைவிடக் கீழானவர்களாக பெண்களை மதிப்பிடுதலும் உரிமைகளைத் தடுத்தலும் தற்போது மாற்றம் பெற்றுள்ளன. ஆண், பெண் பால் வேறுபாடுகள் களையப்பட்டு சமத்துவ உரிமைகள் தரப்படுவதே பெண்ணுரிமையைப் பெறுவதற்கான வித்தாகும். பொறுமையும் ஆற்றலுமுடைய பெண்களுக்கு ஆண்களைவிடக் கூடுதலான உரிமைகளைத் தருதல் மூலம் அவர்களது வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தலாம். பெண்களின் முன்னேற்றத்திற்குத் தேவையான உரிமைகளும் சட்டங்களும் அரசியலமைப்பு போன்றவற்றின்படி தரப்பட்டுள்ளன. அவற்றைப் பற்றிக் காணலாம்.

### ஐக்கிய நாட்டவையும் பெண்ணுரிமைகளும்

பாலின சமத்துவத்தை நிலைநாட்டி பெண்களுக்குச் சம உரிமைகளைப் பெற்றுத்தர ஐக்கிய நாட்டவையானது பல வழிகளை மேற்கொண்டுள்ளது. பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருவது அதன் நோக்கங்களுள் ஒன்று. அவர்களுக்கு உள்ள சிக்கல்களைக் கண்டறிந்து அவற்றிற்கான தீர்வுகளாக பல வழிகளை ஏற்பாடு செய்துள்ளது.

1946-இல் ஐக்கிய நாட்டவையின் பொருளாதார சமூக அமைப்பின் மூலம் பெண்கள் ஆணையம் உருவாக்கப்பட்டது. அதன்மூலம் சமூகம், பொருளாதாரம், கல்வி போன்ற பல துறைகளில் ஆய்வு செய்து அறிக்கைகள் தயாரித்து அவற்றின் வாயிலாக பெண்களின் மேம்பாட்டிற்கு வகை செய்யப்பட்டது.

1948-இல் வெளியிடப்பட்ட பன்னாட்டு மனித உரிமைகள் பிரகடனமும் பெண்கள் உரிமைகளைப் பற்றிக் குறிப்பிட்டது. அதன் 2ஆம் பிரிவும், 7ஆம் பிரிவும் பாகுபாடுகள் ஏதுமின்றி உலக மக்களின் உரிமைகளையும் அவற்றின் பாதுகாப்புக்கான உரிமைகளையும் குறிப்பிட்டன. அதிலும் சம உரிமை உண்டென்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

1952-இல் நடைபெற்ற ஐக்கிய நாட்டவையின் பெண்களின் அரசியல் உரிமைகள் குறித்த மாநாடு, பெண்களுக்கான வாக்குரிமை, ஆட்சியியலில் பாகுபாடற்ற பங்கு ஆகியவற்றை வலியுறுத்தியது.

1967-இல் பெண்களுக்கிடையிலான பாகுபாடுகளை நீக்கி, பெண் சமத்துவத்தை உருவாக்க பெண்கள் நிலை பற்றிய ஆணையம் எழுதப்பட்ட கருத்தினை வெளியிட்டது. இவ்வடிப்படையில் பல பன்னாட்டு மாநாடுகள் கூட்டப்பட்டு பெண்களின் நிலை உயர வகை செய்யப்பட்டது. 1975-இல் மெக்ஸிகோ, 1980-இல் கோப்பர் நிக்கஸ், 1985-இல் நைரோபி, 1995-இல் பெய்ஜிங் ஆகிய இடங்களில் மாநாடுகள் கூட்டப்பட்டன. அவற்றின் மூலம் பெண்களின் பலவித உரிமைகள், பாதுகாப்பு, சமத்துவம் போன்றவற்றைப் பாதுகாக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. 1993-இல் நடந்த பன்னாட்டு மனித உரிமைகள் மாநாட்டில் "பெண்களின் உரிமைகள் மனித உரிமைகளே' என்ற கருத்து உறுதியாக வலியுறுத்தப்பட்டது. பல நாடுகளில் உள்ள பலவிதமான பெண்களை சிக்கல்கள், கொடுமைகள், பாதுகாப்பின்மை போன்றவற்றிலிருந்து விடுவிக்க ஐக்கிய நாட்டவை பல செயல்களை நடைமுறைப்படுத்துகிறது. இவ்வடிப்படையில் இந்திய அரசியலமைப்பு தரும் பல உரிமைகளையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

### இந்திய அரசியலமைப்பில் பெண்ணுரிமை

இந்திய அரசியலமைப்பு ஆண்களும், பெண்களும் சமமானவர்கள் என்ற நோக்கில் பெண்களுக்கென பல உரிமைகளை நல்கியுள்ளது. பாலியல் பண்புகளின் அடிப்படையில் நிலவும் பலவகையான ஏற்றத்தாழ்வுகளைத் தீர்க்க வகை செய்துள்ளது. பெண்களிடையே தன்னம்பிக்கை, தலைமைப் பண்பு ஆகியவற்றை

ஏற்படுத்தித் தந்துள்ளது. பெண்களைச் சுரண்டக்கூடிய பல காரணங்களையும் ஆய்ந்தறிந்து அவற்றை நீக்க வழிவகுத்துள்ளது. பெண்ணுரிமையின் பல பிரிவுகள் பின்வருமாறு:

### சமத்துவ உரிமை

இந்திய அரசியலமைப்பின் முன்னுரையில் இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் சமூக, அரசியல், பொருளாதாரப் பண்புகளில் சம நீதி காட்டப்பட வேண்டுமெனக் கூறுவது பெண்களுக்கும் பொருந்தக் கூடியதே. இந்திய அரசியலமைப்பின் 14ஆம் பிரிவு அனைத்து மக்களுக்கும் சமத்துவ உரிமையை நல்கியுள்ளது. பிரிவுகள் 15 (1) மற்றும் 15 (3) ஆகியன பலதரப்பட்ட சிறப்புரிமைகளைத் தந்துள்ளன. இவ்வுரிமைகளுடன் 16 (1) மற்றும் 16 (2) போன்ற பிரிவுகள் பணியாற்றல் மற்றும் வேலைக்கமர்த்துதல் போன்றவற்றில் சமத்துவம் தரப்பட வேண்டுமென்கின்றன.

### சுதந்திர உரிமை

அரசியலமைப்பின் மூன்றாம் பகுதியில் அடிப்படை உரிமைகள் என்ற நிலையிலும், நான்காம் பகுதியில் அரசு வழிகாட்டும் நெறிக்கோட்பாடுகள் முறையிலும் உரிமைகள் விளக்கப்பட்டுள்ளன. எழுத்துரிமை, பேச்சுரிமை, கருத்துக்களை வெளியிடும் உரிமை, திருமண உரிமை, சமய உரிமை, பாதுகாப்பு உரிமை, சுரண்டல்களிலிருந்து காத்துக் கொள்ளும் உரிமை, தொழில் செய்யும் உரிமை, இந்தியப் பகுதிகளுக்குள் சென்று வரும் உரிமை ஆகியனவும் அவர்களுக்கு உண்டு. இவை பெண்ணுரிமை முயற்சிகள் சார்புடையவை.

### அரசியல் உரிமை

இந்தியாவில் ஆண்களைப் போல பெண்களும் அரசியல், பொதுவாழ்வு ஆகியவற்றில் ஈடுபட, தேர்தலில் போட்டியிட, வாக்களிக்க உரிமையுடையவர்கள். தாம் விரும்பும் பொதுப் பணியைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அரசின் கொள்கைகளை மதிப்பிடவும் கருத்தளிக்கவும் உரிமையுண்டு. எவ்விதமான பாகுபாடுகளும் பாராட்டாமல் சமமான அளவில் பெண்கள் அரசியல் உரிமைகளைப் பெற்று மேம்பட வகை செய்யப்பட்டுள்ளது.

சமூக உரிமை

இந்தியச் சமூக அமைப்பில் பெண்களின் நிலையை உயர்த்தி, பாதுகாப்புடன், பாரபட்சமின்றிச் செயல்பட பல உரிமைகளை இந்திய அரசியலமைப்பு தந்துள்ளது. திருமணம் செய்து கொண்டு சமூகத்தின் அடிப்படை அமைப்பான குடும்பத்தை அமைத்துக் கொள்ளவும், திருமண உறவை ரத்து செய்து கொள்ளவும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இவற்றிலெல்லாம் அவர்கள் ஆண்களுக்குச் சமமான உரிமைகளைக் கொண்டுள்ளனர். சமூகம், அரசு போன்றவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற உரிமை உண்டு. குழந்தைகளைப் பெற்று பாதுகாப்பாக வளர்க்க உரிமையுடையவர்கள். பணிபுரிபவர்களுக்குத் தேவையான மருத்துவ விடுப்பு, ஓய்வு போன்றவற்றை அவர்கள் பெறுகின்றனர். அப்போது ஊதியம் பெறும் உரிமையும் அவர்களுக்கு உண்டு. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் கடமையைச் செவ்வனே நிறைவேற்றும் உரிமை உடையவர்கள்.

கற்கும் உரிமை

மனித உரிமைகளுள் கல்வி கற்பதற்கான உரிமை பெண்களுக்கும் உண்டு. இந்திய அரசியலமைப்பின் 15-ஆம் பிரிவும் 29-ஆம் பிரிவும் ஆண்களைப் போல பெண்களுக்கும் கல்வி கற்கும் உரிமை உண்டென்பதைச் சுட்டிக்காட்டுகின்றன. இது மனித உரிமைகள் சட்டத்தின் இரண்டாம் பிரிவிலும் 26-ஆம் பிரிவுவிலும் தரப்பட்டுள்ள உரிமைகள் சார்ந்தவையாயுள்ளன. 6 முதல் 14 வயது முடியவுள்ள ஆண் பெண் குழந்தைகளுக்கு கட்டாயக் கல்வி பெற உரிமையுண்டு. கீழ்க்காணும் அட்டவணையின் மூலம் பெண் கல்வியின் வளர்ச்சியை நன்கறியலாம்.

| ஆண்டு | கல்வி கற்ற பெண்கள் விழுக்காடு |
| --- | --- |
| 1901 | 0.6 |
| 1941 | 7.3 |
| 1981 | 29.8 |
| 2001 | 53.7 |
| 2011 | 65.5 |

பெண்கள் உடற்பயிற்சிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி, கல்வி முறையிலான பயிற்சிகள் ஆகியவற்றிலும் உரிமை கொண்டுள்ளனர். கல்விச் சலுகைகள், கடன் வசதி, இலவச வசதி ஆகியனவும் அவர்களுக்குத் தரப்பட்டு அவர்களது கல்வி வளர்ச்சி வலுப்பெறப் பல உரிமைகளைக் கொண்டுள்ளனர்.

## திருமணம் சார்ந்த உரிமைகள்

ஆங்கில அரசு இந்தியாவில் நிலவிய காலத்திலேயே பெண்களின் உரிமைகள் பற்றிய சட்டங்கள் இயற்றப்பட்டன. 1823-இலேயே சதி அல்லது உடன்கட்டையேறுதல் என்ற அநாகரிகக் கொடுமை, சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டது. 1850இன் சாதிகள் பற்றிய சட்டம், 1856 ஆம் ஆண்டின் விதவைகள் மறுமணச் சட்டம் போன்றவை பெண்களுக்கான கொடுமைகளை நீக்க வகை செய்தன. குடும்பச் சட்டங்களிலும் அந்நிய அரசு தனித்து ஒதுங்கவில்லை. 1872ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டங்கள் வாயிலாக கலப்புத் திருமணங்கள் ஏற்கப்பட்டன. அதனால் பெண்களின் திருமண வயது 14 ஆக உயர்த்தப்பட்டது. பின்னர் 1950-இல் இந்து விதவைகள் மறுமணச் சட்டம் இயற்றப்பட்டது. 1954-ஆம் ஆண்டின் சிறப்பு திருமணச் சட்டம், 1956-இல் உருவான இந்து வாரிசுரிமைச் சட்டம், தத்து எடுத்துக் கொள்ளும் உரிமைச் சட்டம், 1961ஆம் ஆண்டின் வரதட்சணை ஒழிப்புச் சட்டம், 1971-இல் குழந்தைப்பேறு பற்றிய சட்டங்கள் இயற்றப்பட்டன. அவை பெண்களின் நிலையை உயர்த்தி அவர்களது உரிமைகளைத் தக்கவைத்துக் கொள்ள உதவி செய்தன. 1869-இல் இயற்றப்பட்ட மண விலக்குச் சட்டம் பலகுறைகளைக் கொண்டிருந்தது. 1956 ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டம் 18 வயது நிரம்பிய பெண்கள் தம் விருப்பத்திற்கிணங்க மறுமணம் செய்து கொள்ள அனுமதித்தது. இச்சட்டத்தின் 15ஆம் பிரிவின் மூலம் விவகாரத்து பெற்றவர் சட்டப்படி

மீண்டும் ஓராண்டு கழித்து மறுமணம் செய்து கொள்ள உரிமை தந்தது. 1976 ஆம் ஆண்டுச் சட்டம் அந்த ஓராண்டு கால இடைவெளியை நீக்கியது.

1949ஆம் ஆண்டின் இந்து திருமண ஏற்புடைச் சட்டம், 1955ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டம் போன்றவற்றின் மூலம் பெண்களின் திருமணம் பற்றிய திட்டவட்டமான முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. 1947இல் மகாராஷ்ட்ரா சட்டமன்றம் "பம்பாய் இந்து மணவிலக்குச் சட்டத்தை" இயற்றியது. 1949-இல் "பலதார மணத் தடைச் சட்டம்" இயற்றப்பட்டது. 1955ஆம் ஆண்டின் இந்து திருமணச் சட்டமானது 1956, 1960, 1964, 1976, 1978 ஆகிய ஆண்டுகளில் திருத்தப்பட்டது. அதனால் பெண்களின் உரிமைகள் கூடின. 1954-இல் இயற்றப்பட்ட சிறப்புத் திருமணச் சட்டம் வாயிலாக ஒருமைப்பாட்டுணர்வு நோக்கில் இந்தியத் திருமணங்கள் ஏற்கப்பட்டன.

1956-ஆம் ஆண்டில் தத்து எடுத்துக் கொள்ளும் உரிமைகள் வகுத்துத் தரப்பட்டன. ஆயினும் ஒருவர் தன் மனைவியின் ஒப்புதலைப் பெற்றே தத்து எடுத்துக் கொள்ளலாம். திருமணமானவர்களைத் தவிர திருமணமாகாத பெண்கள், விதவைகள் ஆகியோர் 15 வயதுக்கு மேற்பட்டவர்களைத் தத்து எடுத்துக் கொள்ளும் உரிமை பெற்றார்கள். ஒரு மனைவி தன் கணவரிடமிருந்து தனியாகப் பிரிந்து வாழும் போது ஜீவனாம்சம் பெற உரிமையுண்டு. 1961-இல் "வரதட்சணை ஒழிப்புச் சட்டம்" இயற்றப்பட்டது. அதன் மூலம் மணப்பெண்கள் சமூகக் கொடுமையிலிருந்து காக்கப்பட்டனர். அச்சட்டத்தின் இரண்டாம் பிரிவு வரதட்சணையை "ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினருக்கு திருமணத்திற்காக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தருவது" என்ற விளக்கம் தருகின்றது. ஆனால் அது "மஹர்" என்னும் பணத்தை உள்ளிட்டதல்ல. பெண்கள் மற்றும் பெண்கள் அமைப்புகளின் வற்புறுத்தல்களால் 1984-இல் வரதட்சணை ஒழிப்புச்சட்டம் இயற்றப்பட்டு

... அக்டோபர் 1985 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டது. ... காஷ்மீர் மாநிலம் தவிர பிற மாநிலங்களுக்கு ...யாகுமெனப்பட்டது. திருமணத்தின்போது மணப்பெண்ணுக்குத் ... வெகுமதிகள் வரதட்சணைக்கு உட்பட்டவையல்ல. வரதட்சணை ... சட்டம் பெண்களின் வேதனைகளை நீக்கி அவர்களது ...மைகளைக் காக்கின்றது.

## ...மணம் பற்றிய இந்துச் சட்டம்

இந்துச் சட்டப்படி குடும்பம், மணஉறவு போன்றவற்றில் ...ண்களுக்குச் சமஉரிமை உண்டு. 1872-இல் இயற்றப்பட்ட சிறப்புத் திருமணச் சட்டம் 1926-இல் தேவைக்கு ஏற்றவாறு திருத்தப்பட்டது. ...946-இல் இந்து திருமண இயலாமை நிறுத்தச் சட்டம் மூலம் கலப்புத் திருமணம் அங்கீகரிக்கப்பட்டது. 1955-ஆம் ஆண்டின் திருமணச் சட்டம் ஒருதார மணத்தை வலியுறுத்தியது. இந்து திருமணச் சட்டம் (1955) இல் இருந்த பெண்ணின் குறைந்தபட்ச திருமண வயது 17 லிருந்து இப்போது 18 ஆக உயர்த்தி அறிவிக்கப்பட்டு, பின்பற்றப்படுகிறது. 1984-ஆம் ஆண்டின் சிறப்புத் திருமண சீர்திருத்தச் சட்டம் மணவிலக்கு பற்றிக் கூறுகின்றது. 1984-ஆம் ஆண்டின் குடும்ப நீதிமன்றச் சட்டம், குடும்ப அமைதியைக் காக்க ஆண், பெண் இருவரிடமும் சமாதானத்தை வலியுறுத்தியது. 1987-ஆம் ஆண்டின் திருமணச் சட்டத்திருத்தச் சட்டவரைவு மணவிலக்கு பற்றிய மாற்றங்களுக்கு வழிவகுத்தது. மணவுறவு என்பது சட்டப்படி ஏற்கப்பட்ட ஒரு உரிமையாகும்.

## இஸ்லாமிய மற்றும் கிறித்துவச் சட்டங்கள்

கூட்டுறவுக்கு உட்பட்ட இஸ்லாமியர், மணஉறவை திருமணத்தின் அடிப்படைக் கோட்பாடாகக் கொள்கின்றனர். திருமணம் என்பது திடமனத்துடன் பெண் பூப்படைந்தபின் மேற்கொள்ளப்படும். தன்னை உதறித் தள்ளாத கணவருடன் கூடிவாழ்பவளே மனைவி என்பது இஸ்லாமிய சட்டம். திருமணத்தின் போது தீர்மானிக்கப்படும் மஹர்

பணம் மணமகளின் சொத்தாகும். வயதுக்கு வந்த பின்னரே திருமணம் செய்ய வேண்டுமென்பதை மனைவி வற்புறுத்தலாம். ஷபி மற்றும் மாலிகி சட்டங்கள் மனைவிக்கான மணவிலக்கு உரிமையைத் தந்துள்ளன. இஸ்லாமியப் பெண்கள் மணவிலக்கு பெற கொண்டுள்ள உரிமைகளைப் போல் பிற சமயப் பிரிவினருக்கு உரிமையில்லை. வயதுக்கு வராத இஸ்லாமியப் பெண்ணுக்கு அவளுடைய தகப்பனார் பாதுகாவலராக இருக்கும் போது அவளது திருமணத்தை வேறொரு பாதுகாவலரால் நடத்தி வைக்க முடியாது. இருப்பினும் இஸ்லாமியப் பெண்கள் தங்களின் உரிமைகளைக் கடுமையாகப் போராடியே பெற வேண்டியவர்களாயுள்ளனர்.

மணவுறவு, மணவிலக்கு மற்றும் திருமணம் போன்ற நிலைகளில் கிறித்துவர்களின் தனிநபர் சட்டம் இந்து மற்றும் முஸ்லீம் சட்டங்களிலிருந்து மாறுபட்டது. கிறித்துவப் பெண்கள் ஆண்களுடன் சம உரிமையுடையவர் களாயுள்ளனர். கிறித்துவப் பெண்களுக்கு கல்வியறிவு, பொருளியல் சுதந்திரம், பணி உரிமை ஆகியவை தரப்பட்டுள்ளன. 1954ஆம் ஆண்டின் சிறப்புத் திருமணச் சட்டம், 1969ஆம் ஆண்டின் இந்திய மணவிலக்குச் சட்டம் கிறித்தவர்களுக்கும் பொருந்தக்கூடியவை. இந்திய மணவிலக்குச் சட்டத்தின் 36ஆம் பிரிவின்படி மணவிலக்கு செய்யப்பட்ட மனைவி கேட்டால் ஜீவனாம்சம் தரவேண்டியது கணவனின் கடமை. மணஉறவு அனைவருக்கும் பொதுவாயினும் மணவிலக்கு பெண்களைப் பாதிக்கக் கூடியதேயாகும்.

**மலைவாழ் மக்களுடைய பெண்களின் உரிமைகள்**

மலைவாழ் மக்களைப் பற்றி இந்திய அரசியலமைப்பு குறிப்பிட்டிருந்தாலும் அவர்களது திருமணம், மணவிலக்கு, சொத்துரிமை ஆகியவற்றைப் பற்றி தனிச்சட்டங்கள் இயற்றவில்லை. மலைவாழ் பிரிவுப் பெண்கள் சட்டக் கட்டுப்பாடுகள் ஏதுமின்றி பாரம்பரிய அடிப்படைப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுகின்றனர். அவர்களுடைய சட்டங்கள்

இடத்திற்கு இடம் மாறுபட்டே காணப்படுகின்றன. மலைவாழ் பிரிவு மக்களுக்கு தகப்பனார் சொத்தில் உரிமை இல்லையெனினும் திருமணமாகாத பெண் தன் தகப்பனார் சொத்தைச் சார்ந்தே வாழ்கிறாள். ஆனால் திருமணமான பெண் விதவையாக ஆனாலும் அல்லது மணவிலக்கு பெற்றாலும் இத்தகைய உரிமைகள் கிடையாது. விதவைகள், இறந்த கணவரின் சொத்துக்கு முழு உரிமையுடையவர்கள். விதவையின் இறந்த கணவரது சொத்துக்களை அவளுடைய இறந்த கணவனின் சகோதரர்கள் அபகரித்துக் கொள்கின்றனர். மணவிலக்கு பெற்ற பெண்ணுக்கு சொத்துரிமையோ ஜீவனாம்ச உரிமையோ கிடையாது. பெண்ணும் ஒரு பொருளாதாரப் பொருளாகவே கருதப்படுகின்றாள்.

## பொருளியல் உரிமைகள்

இன்று மனித உரிமைகளில் முன்னணியில் நிற்பது பொருளியல் உரிமைகளாகும். பொருளாதாரத்தின் தன்மை இல்லையேல் ஆண், பெண், குடும்பம், சமுதாயம் போன்றவை சிறப்படையாது. பொருளாதாரச் சமத்துவம் ஏற்பட பல பொருளாதார உரிமைகள் தேவையாயுள்ளன.

இந்திய அரசியலமைப்பின் 41 மற்றும் 42 ஆம் பிரிவுகள் ஆண், பெண் என்ற இருசாராருக்கும் பணிகளைத் தேர்ந்தெடுப்பதில் சம உரிமையையும், பணிச் சூழல்களை ஏற்படுத்தித் தருவதையும் அரசின் கடமையெனவும் சுட்டிக் காட்டியுள்ளன. அவற்றுள் கல்வி வசதி, மருத்துவ வசதி மற்றும் இருப்பிட வசதி போன்றவையும் அடங்கும். இந்திய அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள் சமஊதியத்தைப் பற்றிக் கூறுகின்றது. அவ்வடிப்படையில் தான் 1978-இல் இந்திய அரசு சம ஊதியச் சட்டத்தை இயற்றியது. 1990-இல் தேசிய பெண்கள் ஆணையச் சட்டம் இயற்றப்பட்டு பெண் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

டத்திற்கு இடம் மாறுபட்டே காணப்படுகின்றன. மலைவாழ் பிரிவு மக்களுக்கு தகப்பனார் சொத்தில் உரிமை இல்லையெனினும் திருமணமாகாத பெண் தன் தகப்பனார் சொத்தைச் சார்ந்தே வாழ்கிறாள். ஆனால் திருமணமான பெண் விதவையாக ஆனாலும் அல்லது மணவிலக்கு பெற்றாலும் இத்தகைய உரிமைகள் கிடையாது. விதவைகள், இறந்த கணவரின் சொத்துக்கு முழு உரிமையுடையவர்கள். விதவையின் இறந்த கணவரது சொத்துக்களை அவளுடைய இறந்த கணவனின் சகோதரர்கள் அபகரித்துக் கொள்கின்றனர். மணவிலக்கு பெற்ற பெண்ணுக்கு சொத்துரிமையோ ஜீவனாம்ச உரிமையோ கிடையாது. பெண்ணும் ஒரு பொருளாதாரப் பொருளாகவே கருதப்படுகின்றாள்.

### பொருளியல் உரிமைகள்

இன்று மனித உரிமைகளில் முன்னணியில் நிற்பது பொருளியல் உரிமைகளாகும். பொருளாதாரத்தின் தன்மை இல்லையேல் ஆண், பெண், குடும்பம், சமுதாயம் போன்றவை சிறப்படையாது. பொருளாதாரச் சமத்துவம் ஏற்பட பல பொருளாதார உரிமைகள் தேவையாயுள்ளன.

இந்திய அரசியலமைப்பின் 41 மற்றும் 42 ஆம் பிரிவுகள் ஆண், பெண் என்ற இருசாராருக்கும் பணிகளைத் தேர்ந்தெடுப்பதில் சம உரிமையையும், பணிச் சூழல்களை ஏற்படுத்தித் தருவதையும் அரசின் கடமையெனவும் சுட்டிக் காட்டியுள்ளன. அவற்றுள் கல்வி வசதி, மருத்துவ வசதி மற்றும் இருப்பிட வசதி போன்றவையும் அடங்கும். இந்திய அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள் சமஊதியத்தைப் பற்றிக் கூறுகின்றது. அவ்வடிப்படையில் தான் 1978-இல் இந்திய அரசு சம ஊதியச் சட்டத்தை இயற்றியது. 1990-இல் தேசிய பெண்கள் ஆணையச் சட்டம் இயற்றப்பட்டு பெண் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

இந்திய அரசியலமைப்பின் 39-A பிரிவு, பெண்கள் தமது உரிமைகள் மீறப்பட்டதாகக் கருதும் போது பொருளாதார வசதி இல்லையென்றால், இலவச சட்ட உதவிகளைப் பெற வகை செய்கின்றது.

இந்திய அரசியலமைப்பின் நெறிமுறைக் கோட்பாட்டின் 42-ஆம் பிரிவு நியாயமான பணிச்சூழல்களில் பணியாற்றும் திருமணமான பெண்களின் மகப்பேறு காலத்தில் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமெனக் கூறியுள்ளது. இதை அடிப்படையாகக் கொண்டு 1961-இல் மகப்பேறு உதவிச் சட்டம் இயற்றப்பட்டது. அதன்படி மத்திய, மாநில அரசுகளின் தொழிற்சாலைகள், சுரங்கம், அரசு அலுவலகங்கள், பத்துக்கு மேற்பட்டோர் பணியாற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் திருமணமான பெண்களின் பேறுகாலத்திற்கு முன்பும் பின்புமாக 12 வாரங்கள் விடுப்பு எடுத்துக் கொள்ள உரிமை தரப்பட்டுள்ளது. அக்கால கட்டத்தில் அவர்கள் முழுமையான ஊதியத்தைப் பெற உரிமையுடையவர்கள். குழந்தை பிறந்த பின் 15 மாதங்கள் வரை குழந்தையின் கவனிப்பு மற்றும் பராமரிப்புக்காக வேலை நேரத்தில் ஒவ்வொரு நாளும் இரண்டு முறை ஒப்புதல் பெற்றுக் கொள்ளலாம். மகப்பேறு சீர்திருத்த மசோதா 2016 இன்படி 12 வாரங்களாக இருந்த விடுப்புக் காலம் 26 வாரங்களாக உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகும் தேவைப்பட்டால் மருத்துவரின் சான்றிதழ் பெற்று, கூடுதலாக 12 வாரங்கள் விடுமுறை எடுத்துக் கொள்ளலாம்.

பெண்களுக்கு கல்விக் கூடங்கள் மற்றும் பெண்களுக்கான வேலை வாய்ப்பு ஆகியவற்றில் 30 விழுக்காடு இடஒதுக்கீடு தரப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 15 (3) ஆம் பிரிவு இடஒதுக்கீட்டு முறையை ஏற்றுக் கொண்டுள்ளது.

1986ஆம் ஆண்டில், பெண்களை தரக்குறைவாக வர்ணித்தல் தடுப்புச் சட்டப்படி (The Indecent Representation of Women (Prohibition) Act) பெண்களைக் கேவலமாகப் பேசி அதன் மூலம் பாலுணர்வைத் தூண்டக்கூடிய வழிகளில் ஈடுபடுவது குற்றம். நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், புகைப்படங்கள், வரைபடங்கள், பல ஊடகங்கள் வாயிலாக பெண்களைக் கேவலமாக வெளிப்படுத்தினால் அத்தகைய சட்டத்திற்குப் புறம்பான செயல்களுக்காக ரூ.2000/- அபராதமும் இரண்டு ஆண்டு சிறைத்தண்டனையும் விதிக்கப்படும். முதல் முறைக்கு இத்தகைய தண்டனைகள் வழங்கப்பட்ட பின்னரும் அந்த நபர் அம்முறையற்ற செயலில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் ஐந்தாண்டு சிறைத்தண்டனையுடன் ரூ.10,000/- அபராதமும் விதிக்கப்படும். இந்திய அரசியலமைப்புச் சட்டம் 14, 21 மற்றும் 51 A பிரிவுகளின்படி இச்செயல்முறை ஏற்பட்டது.

இந்திய அரசியலமைப்பின் பிரிவு 243இன் படியான பஞ்சாயத் ராஜ் சட்டத் திருத்தம் 73, 74-இன்படி 1992-இல் இயற்றப்பட்ட சட்டப்படி பெண்களுக்கு 33 விழுக்காடு இட ஒதுக்கீடு உள்துறை நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 44ஆம் பிரிவுப்படி பால் வேறுபாடுகளை நீக்க வழி செய்துள்ளது.

**சொத்துரிமை**

இந்தியாவில் ஆங்கில ஆட்சியின் போது பலவித சொத்துரிமைச் சட்டங்கள் வழக்கிலிருந்தன. "மிட்டாச்சார முறை" இந்தியாவின் பல பகுதிகளில் செயல்பட்டது. வங்காளத்தில் "தயாபாக முறை" இருந்தது. தென்னகத்தில் "மருமக்கள் தாயம்", "அலிய சந்தானா" போன்றவை இருந்தன. இந்தியாவில் சொத்துரிமை மற்றும் வாரிசுரிமை தனியார் சட்டம் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

# 22

## பெண்களின் சமகாலப் பிரச்சனைகள்

பெண்ணுரிமை விரிவாகப் பேசப்பட்டு பல உரிமைகள் பெண்களுக்குத் தரப்பட்டுள்ளன. உரிமைகள் மூலம் பெண்களின் நிலை உயர்த்தப்பட்டாலன்றி சமுதாயம் மேம்படாது. சமுதாயத்தின் உறுப்பான பெண்கள் பலவகையான சிக்கல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். பல வழிகளில் துன்புறுகின்றனர்.

### பெண்கருக் கொலை (Female Foeticide)

அமினோ சிந்தசிஸ் முறையில் கருப்பையிலுள்ள குழந்தை ஆணா பெண்ணா என்பதைக் கண்டறிய முடியும். அதனால் பெண்கள் தமக்கு வேண்டாத பெண் குழந்தையைக் கருக்கலைப்பு முறையில் கொலை செய்கின்றனர். இத்தகைய கருக்கலைப்பு தாயின் உயிருக்குத் தீங்கு விளைவிக்கலாம். கருவுற்ற பெண்ணின் மனநிலை பாதிக்கப்படுகின்றது. 1971ஆம் ஆண்டில் இந்தியாவில் இயற்றப்பட்ட மருத்துவக் கருக்கலைப்புச் சட்டம் இதற்கான மாற்று வழியைத் தரவில்லை. சில விதிகளுக்கு உட்பட்டு கருக்கலைப்பைச் செய்யலாமென்று கூறப்பட்டுள்ளது. பலவிதமான கருத்தடை முயற்சிகள் பலனளிக்காமல் கருவுற்றால் 18 வயதுக்கு உட்பட்ட பெண்ணாயிருந்தால் அவளது ஒப்புதலுடன் கருவைக் கலைக்கலாம். பதிவு பெற்ற மருத்துவர் 12 வாரத்திற்கு உட்பட்ட கருவைக் கலைக்கலாம். 12 முதல் 20 வாரங்கள் ஆகிவிட்டால் அங்கீகாரம் பெற்ற இரு மருத்துவர்களால் அல்லது

அங்கீகாரம் பெற்ற மருத்துவமனைகளில் கருக்கலைப்பு செய்யலாம். ஆனால் இம்முறையற்ற செயலைத் தடுப்பதற்காக 1994 ஆம் ஆண்டின் ஒழுங்குபடுத்துதல் மற்றும் தவறாகப் பயன்படுத்துதல் சட்டம் (The pre-natal Diagnostics Techniques Regulation and prevention of Misuse Act) இயற்றப்பட்டது. கருப்பையிலுள்ள பெண் குழந்தையை ஆய்வில் கண்டறிந்து கொல்வதை இச்சட்டம் தடைசெய்கின்றது. இதையும் மீறி முறையற்ற கருக்கலைப்பு செய்யும் மருத்துவருக்கு மூன்று ஆண்டு தண்டனையும் ரூ. 10,000/- அபராதமும் விதிக்கப்படலாம். அத்தவறை மீண்டும் அதே மருத்துவர் செய்வாரேயானால் அவருக்கு ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனையும் ரூ.50,000/- அபராதமும் விதிக்கப்படும். கருவிலுள்ள குழந்தை ஆணா பெண்ணா என்பதைக் கண்டறியும் விளம்பரங்கள் செய்யப்பட்டால் அதைச் செய்தவர்களுக்கு மூன்றாண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.10,000/- அபராதமும் விதிக்கப்படலாம். ஆனால் இச்செயல்கள் மறைமுகமாக நடந்தேறுகின்றன. அறிவியல் வளர்ந்து முன்னேற்றத்திற்குப் பயன்படுவதற்குப் பதில் பெண்களின் குழந்தைப் பேறு உரிமையைப் பறிப்பது பெண்ணுரிமையைப் பாதிப்பதாகும்.

**பெண் சிசுக் கொலை** (Female infanticide)

பெண் குழந்தையைப் பிறந்தவுடன் அழித்துவிடுவது பெண் சிசுக் கொலை எனப்படும். பெண் சிசுக் கொலை என்பது மனித உரிமை மீறிய மனிதாபிமானமற்ற செயலாகும். ஆயினும் இக்கொடுஞ்செயல் தமிழகத்தில் அதிக அளவில் நடக்கிறது. இந்தியாவில் ஆண்டுதோறும் 12 மில்லியன் பெண் குழந்தைகள் கொல்லப்படுகின்றன. பெண் சிசுக் கொலையைப் பற்றிய செய்திகள் 1986 ஆம் ஆண்டிற்குப் பின் முக்கியத்துவம் பெற்றன. இது ஒரு சமூகப் பிரச்சனை மட்டுமல்ல பெண்களின் பிரச்சனையுமாகும்.

பெண் சிசுக் கொலைக்குப் பல காரணிகள் உண்டு. ஆண் பெண் குழந்தைகளிடம் உள்ள பாலியல் வேறுபாடுகள் பெண் குழந்தைகளை வெறுக்கச் செய்கின்றன. ஆண் சம்பாதித்து குடும்பத்தைக்

பாற்றுவான் என்பதும், பெண் என்பவள் வரதட்சணை, திருமணச் லவு போன்றவற்றிற்காகப் பிறந்தவள் என்ற கருத்தும் இதற்குக் ரணம். ஆண் வாரிசுதான் குடும்பத்தின் பெயர் சொல்லும் என்ற பிக்கை மற்றொரு காரணம். மக்களிடையே உள்ள பழைமைக் ட்பாடு, பாரம்பரிய நிலைகளுக்கு முக்கியத்துவம் முதலியன பெண்கள் னேற்றத்திற்குத் தடையாக உள்ளன. அதன் பிரதிபலிப்பு பெண் க் கொலை. உலக சுகாதார நிறுவனம் மேற்கொண்ட ஆய்வு பெண் ழந்தைகள் மரணமே மிகுதி என்று குறிப்பிட்டுள்ளது. ஆணாதிக்கத்தின் ளைவாக பெண் குழந்தைகள் வெறுக்கப்படுகின்றனர். ஆண் குழந்தைகளை வளர்ப்பதற்கான செலவைவிட பெண் குழந்தைகளை வளர்ப்பதற்கான செலவு அதிகம் என்ற மனப்பான்மையும் பெண்குழந்தைகள் மீதான வெறுப்புக்குக் காரணமாகின்றன. பெற்றோர்களின் பொருளாதாரச் சிக்கல்கள் பெண் குழந்தைகளை வெறுக்கச் செய்கின்றன. குழந்தைப்பேற்றுக்கான செலவு, படிப்புச் செலவு, உடைச் செலவு போன்றவை பெண்களைப் பொறுத்தவரை மிகுதியாக உள்ளதால் பெண் குழந்தைகள் மீது வெறுப்பு ஏற்படுகின்றது. பெண்களின் திருமணச் செலவு மிகுதி. அவர்களுக்குச் சமமான வரனைப் பார்ப்பது கடினமாக உள்ளது. மேலும் கல்வி கற்ற பெண்களை பெரியவர்கள் வெறுக்கின்றனர். பொதுவாக பெண்கள் ஒரு சுமையாகவே பெற்றோர்களால் கருதப்படுகின்றனர். வறுமையும் ஒரு காரணமாகக் காட்டப்படுகின்றது. பெண் குழந்தைகளுக்கான செலவு மிகுதி என்பதால் பெண் குழந்தைகள் வெறுக்கப்படுகின்றனர். சாதிச் சிக்கல்களும் இதற்குக் காரணமாயுள்ளன.

பெண் சிசுக்களைக் கொல்லத் தமிழகத்தில் பல வழிகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. எருக்கம் பால், கள்ளிப் பால், பூச்சி மருந்து, நெல் மணி, புகையிலைச் சாறு, செம்பாக்கை ஊறவைத்துத் தருதல் போன்ற முறைகளில் பெண் சிசுக்கள் கொல்லப்படுகின்றன. மூச்சுத் திணறலை ஏற்படுத்தியும், பசியால் வாடச் செய்தும், நீரில் மூழ்கடித்தும் கொல்லப்படுகின்றன.

**அரசின் தடுப்பு நடவடிக்கைகள்**

1971 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மருத்துவ கருக்கலைப்புச் சட்டத்தால் பெண் கருக்கலைப்பைத் தடுக்க இயலவில்லை. பதிவு பெற்ற மருத்துவர்கள் சில விதிமுறைகளுக்கு உட்பட்டு கருச்சிதைவு செய்யலாமென்ற விதியானது பெண் சிசுக்களைக் கண்டறிந்து கொல்ல ஏதுவாகிறது.

1992-இல் தமிழக அரசு உருவாக்கிய தொட்டில் குழந்தைத் திட்டத்தின் வாயிலாக 1995 வரை 95 குழந்தைகள் தொட்டிலில் போடப்பட்டு அரசால் பாதுகாக்கப்படுகின்றன. 1992 இலிருந்து 2014 ஆம் ஆண்டு முடியவுள்ள கணக்கின்படி இத்திட்டத்தின்கீழ் 4000 க்கும் மேற்பட்ட பெண்குழந்தைகள் காக்கப்படுகின்றன. அதே ஆண்டில் (1992) "பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டம்" ஒன்றை தமிழக அரசு உருவாக்கியது. அதன்படி அரசு அப்பெண்கள் பெயரில் குறிப்பிட்ட தொகையை வைப்புத் தொகையாக முதலீடு செய்கின்றது. அதன்மூலம் கிடைக்கும் வட்டியை 20 வயதுக்குப் பின் ரூ.20,000/- அவர்களுக்குத் தரப்படுகின்றது. அவர்களது கல்விச் செலவை அரசே 20 வயது வரை ஏற்றுக் கொள்கின்றது.

இவற்றைப் போன்றே மத்திய அரசு உருவாக்கிய திட்டம் அரசு மருத்துவமனையில் பிறக்கும் பெண் குழந்தையின் தாய்க்கு ரூ.1000/-த்தைத் தருகின்றது. இவற்றுடன் வேறு பல வழிகளிலும் பெண் சிசுக் கொலை தடுக்கப்படலாம். அவை பின்வருவனவாகும்:

பெண் குழந்தைகளுக்கு ஆண் குழந்தைகளுக்குக் கிடைப்பதைப் போல சம உரிமை கிடைக்க வேண்டும். கிராமப்புறப் பெண்களிடம் பெண் குழந்தைகளைக் கொல்வது தவறானது என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தலாம். வானொலி, தொலைக்காட்சி, சினிமா, நாடகம், சமூக ஊடகம் போன்றவற்றைப் பயன்படுத்தி பெண் சிசுக் கொலையைத் தடுக்கலாம். பெண் கல்வியை ஊக்குவித்தல், பெண்களுக்கு சுயதொழில் நடத்த வகை செய்து தருதல், இட ஒதுக்கீட்டின் மூலம் பெண்களின் நிலையை உயர்த்துதல், வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்குதல்

...ற வழிகளும் நடைமுறைப்படுத்தப் படலாம். சுயதொழில்கள் நடத்த ...உதவிக் குழுக்கள் மூலமாகவும், வங்கிக் கடன் மூலமாகவும் வகை ...து. அவர்களது வருமானத்தைப் பெருக்கி பொருளாதாரத்தை உயர்த்த ... செய்யலாம். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ...வாக்கப்பட்டு பெண் குழந்தைகள் பாதுகாக்கப்படலாம். கருவுற்ற ...களின் பெயர்கள் மருத்துவமனைகளில் பதிவு செய்யப்பட்டு பிரசவம் ...க்க ஏற்பாடு செய்யலாம். முறையற்ற இறப்புகளின் மூலம் பெண் ...ழந்தைகள் உயிரிழந்தால் அது காவல் நிலையத்தின் நடவடிக்கைக்காகத் ...தரிவிக்கப்பட வேண்டும். மைய, மாநில அரசுகள் கடுமையான ...ட்டங்களை இயற்றலாம். பெண்களுக்கு சொத்துரிமை பற்றிய ...ட்டங்களை முழுமையாக நடைமுறைப்படுத்தி பெண் சிசுக்களைப் ...துகாக்கலாம். பெண்ணுரிமையைப் பாதிக்கக்கூடிய பழைமைப் போக்கு, ...த்தாம்பசலித்தனம், சமூகக் கட்டுப்பாடுகள், சடங்குகள், பழக்க ...ழக்கங்கள், வழக்காறுகள் ஆகியவற்றை முறையான மற்றும் முறைசாராக் கல்வியின் வாயிலாகத் தடுக்கலாம். சிசுவதை செய்பவர்களுக்கு இந்தியத் தண்டனைச் சட்டம் பிரிவுகள் 302, 305 மற்றும் 317 இன்படி முறையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும். பத்திரிக்கைகள், செய்தித்தாள்கள் போன்றனவும் பயன்படுத்தப்படலாம். பெண்களுக்கான சிறப்புரிமைகளையும் முன்னுரிமைகளையும் விரிவுபடுத்தலாம்.

## குழந்தை மணம் (Child Marriage)

ஆங்கிலேயரின் ஆட்சியின் போது இந்தியாவில் குழந்தைத் திருமணத்தைத் தடுக்க வகை செய்யப்பட்டது. 1872 இல் குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டம் இயற்றப்பட்டது. 1891 இல் உடன்படுவயதுச் சட்டம் கொண்டு வரப்பட்டு பெண்களின் திருமண வயதை 10 லிருந்து 12 ஆக உயர்த்தியது. 1901 இல் பரோடா அரசாங்கம் பெண்கள் மற்றும் ஆண்களின் திருமண வயதை முறையே 12 மற்றும் 16 ஆக தீர்மானித்தது. 1929 இல் ஹாபிலாஸ் சாரதா என்பவரால் கொண்டு

ஆண்களின் திருமண வயதை 18 என்றும் தீர்மானித்தது. இதன் பின்னர் சுதந்திர இந்தியாவில் 1955 இல் திருமணச் சட்டம் திருமணச் சிக்கல்களைத் தீர்த்து வைத்தது. தற்போது இச்சிக்கல் அரசால் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டுச் சட்டதிருத்தம் பெண்ணின் திருமண வயதை 18 ஆக உயர்த்தியது. 2006 ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 'குழந்தைத் திருமணத் தடைச்சட்டம்' பெண்ணின் திருமண வயது 18 என்று உறுதி செய்தது.

**உடன்கட்டை ஏறுதல்** (Sati or Self immolation)

இது, கணவன் இறந்தால் அவனது மனைவி ஈமத்தீயில் வீழ்ந்து உயிரை மாய்த்துக்கொள்ளும் வழக்கம் ஆகும். ராஜாராம் மோகன்ராய், இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தார். 1828 முதல் 1835 வரை இந்திய கவர்னர் ஜெனரலாக இருந்த வில்லியம் பெண்டிங் 1829 இல் சதி ஒழிப்புச் சட்டத்தைக் கொண்டு வந்தார். உடன்கட்டை ஏறிய விதவையும், அதற்குக் காரணமாகவும், உடந்தையாகவும் இருந்தவர்களும் அச்சட்டப்படி தண்டிக்கப்பட்டனர். இருப்பினும் இக்கொடிய வழக்கம் குறைந்த அளவில் ராஜஸ்தான், மத்தியப்பிரதேசம் போன்ற இந்திய மாநிலங்களில் தற்போதும் வழக்கத்தில் உள்ளது.

**தேவதாசி முறை** (Devadasi System)

இவ்வழக்கம் தீபகற்பத் தென்னிந்தியாவில் 17ஆம் நூற்றாண்டில் உருவாயிற்று. குடும்பத்தில் பெண் குழந்தைகளைப் பராமரிக்க இயலாத நிலை ஏற்பட்டாலும், கோவிலுக்கு அர்ப்பணிப்பு நோக்கிலும், 'பொட்டுக் கட்டுதல்' என்ற முறையில் பெண்கள் ஆண்டவனின் அடியார்களாக; தேவதாசிகளாக ஆக்கப்பட்டார்கள். ஆண்டவனுக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு, கலை, நாட்டியம், இசை ஆகிய நற்பணிகளில் ஈடுபட்டனர். அவர்கள் காலப்போக்கில் முறையற்ற செயல்களுக்குத் தள்ளப்பட்டனர். அவர்களுடைய பொருளாதார நிலையால் அவர்களுடைய வாழ்க்கை அலங்கோலமாயிற்று. எனவே அம்முறையானது சமூகக் கேடாக உருவெடுத்தது. 1928இல் டாக்டர் டி.பி.முத்துலெட்சுமி ரெட்டியின் பெருமுயற்சியால் சட்டப்படி இம்முறை ஒழிக்கப்பட்டது. ஆனால் கர்நாடகம்

மற்றும் மகாராஷ்டிரா போன்ற பகுதிகளில் தேவதாசி முறை வழக்கத்தில் உள்ளது. கர்நாடகத்திலுள்ள பெல்காம் மாவட்டத்தில் எல்லம்மா மற்றும் ரேணுகா போன்ற கடவுள்களுக்கு பெண்கள் அர்ப்பணிக்கப்படுகின்றனர். அவர்களுள் 75 விழுக்காட்டிற்கும் மேலானோர் தாசிகளாகவே வாழ்கின்றனர். கல்வியறிவில்லாதோர், வறுமையில் வாடுவோர், விதவைகள், கணவனால், குடும்பத்தினரால் கைவிடப்பட்டோர் இத்தகைய செயல்களில் ஈடுபடுகின்றனர். 1988 இல் தேவதாசி அர்ப்பணிப்புத் தடைச் சட்டம் ஒன்று ஆந்திர மாநிலத்தில் இயற்றப்பட்டது. அதன்படி பெண்களை கோவில்களுக்கு பொட்டுக்கட்டிவிடும் முறை தடுக்கப்பட்டது. இன்று இம்முறையானது இந்தியாவில் மிகவும் குறைவு.

### பலதார மணம் (Polygamy)

ஒரு ஆண் பல பெண்களைத் திருமணம் செய்து கொள்வது பலதார மணம் எனப்படும். இது சமூக அநீதியாகும். பண்பாடு மற்றும் ஒழுக்க நெறிகளுக்குப் புறம்பானது. இக்கொடுமையை இராஜாராம் மோகன்ராய் முதன்முதலாக எதிர்த்தார். இருப்பினும் இஸ்லாமியச் சட்டம் இதை எதிர்க்கவில்லை. இந்தியாவில் 1955-ஆம் ஆண்டில் பலதார மணத் தடைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. பெண்களிடம் கல்வியறிவின்மை, சட்டம் பற்றிய அறியாமை, சமூகச் சூழல்கள் போன்றவற்றால் பலதார மணம் முழுமையாக ஒழிக்கப்படவில்லை. பலதார மணத்தால் பெண்களின் நிலை தாழ்கின்றது. அவர்கள் வெறும் இயந்திரங்களாகச் செயல்பட்டு உரிமைகள் அற்றவர்களாகின்றனர். தாழ்த்தப்பட்டோர், மலைவாழ் பிரிவினர் ஆகியோரிடம் இம்முறை அதிக அளவில் காணப்படுகின்றது.

### பாலியல் பலாத்காரம் (Raping)

பாலியல் பலாத்காரமென்பது பெண்ணின் கற்புக்கு தீங்கு விளைவிப்பது. பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக பலாத்காரமாக (வலுக்கட்டாயமாக) அவளை பாலியல் உறவில் ஈடுபடச் செய்வதாகும். மிரட்டல்கள், அச்சுறுத்தல் மூலம் அதிகார வரம்பு காரணமாக பணிப் பெண்கள் மற்றும் கீழ்நிலைப் பிரிவினர் பாலியல் வன்கொடுமைக்கு

# 24

## மனித உரிமைகள் பாதுகாப்பும் அரசு சாரா அமைப்புகளும்

மனித உரிமைகள் இன்று மனித இனம் பெற்றுள்ள பெருமையால் முக்கியத்துவம் பெற்றுள்ளன. அவற்றைப் பேணிப் பாதுகாத்து மனித இனத்தை வாழச் செய்வது அரசின் பொறுப்பு மட்டுமல்ல; அரசு சாரா நிறுவனங்களின் பங்கும் உண்டு. மனித உரிமைப் பண்புகளுக்கு சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவினரும் உரிமை கொண்டாடலாம். சமுதாயத்தின் ஒருமித்த வளர்ச்சி, மேம்பாடு ஆகியவற்றிற்கு அடிப்படையாக உள்ளவை மனித உரிமைகள். சமூக விலங்கான மனிதன் முழு உரிமைகளையும் உடையவன். மனித உரிமைகள் பல காரணிகளால் கட்டுப்படுத்தப்படுகின்றன. ஆதிக்கப் பிரிவினரின் அதிகார வரம்புகள் உரிமைகளின் தடைக் கற்களாகும். குடியேற்றக் கோட்பாடுகளால் பல நாடுகள் ஆதிக்க வல்லரசுகளின் குடியேற்றங்களுக்கு உட்பட்டபோது அவற்றின் பொருளாதார நலன்களும் உரிமைகளும் பாதிக்கப்பட்டன. ஒரு சமுதாயத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகள், சமுதாய மாற்றம், வறுமை, கல்வியறிவின்மை, மாறுபட்ட சட்டநடிவடிக்கைகள், காவல் துறையின் அத்துமீறிய செயல்கள், தொழிலாளர் சிக்கல்கள் போன்றவை உரிமை மீறக் காரணங்களாகும். உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள், அரசுகள் ஆகியவற்றைவிட அரசு சாரா நிறுவனங்களும் அமைப்புகளும் மனித உரிமைகளைப்

மனித உரிமைகள் ... தரவில்லை. ஆனால் அப்போது முக்கியத்துவமும் பிரதிநிதித்துவமும் உருவாக்கப்பட்ட மனித ஆயுக்தா (லோக் ஆயுக்தா) குழுவின் செயல் கூட்டம் 1991 செப்டம்பரில் நடைபெற்றது. அதில் முறைசாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஓரளவு இடம்பெற்றார்கள். மனித உரிமையின் ஆதரவான 30 பன்னாட்டு அரசு முறைசாரா அமைப்புகளுக்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் உரிமையளிக்கப்பட வேண்டுமெனக் கூறின. 1993 ஜுன் மாதத்தில் பன்னாட்டு மனித உரிமை நடவடிக்கைகளில் அரசு சாரா நிறுவனங்களுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. இந்நிலையில் பல்வேறு அமைப்புகளின் தன்மைகளைக் காணலாம்.

**சர்வதேச (பன்னாட்டு) பொது மன்னிப்பு நிறுவனம்**

(Amnesty International)

இவ்வுலகளாவிய அரசு சாரா நிறுவனம் மனித உரிமைகளைப் பேணிக் காப்பதில் மிகுதியான கவனத்தைச் செலுத்துகின்றது. அரசியல் கைதிகளின் உரிமைகள் மனிதாபிமான முறையில் பாதுகாக்கப்படுதல், அவர்கள் மீதான விசாரணைகளை விரைவு படுத்துதல், கைதிகளை முறையற்ற வகையில் சித்ரவதை செய்து கொடுமைப்படுத்துதலிலிருந்து பாதுகாத்தல் போன்றவற்றைச் செயல்படுத்தி உரிமைகளை நிலைநாட்ட விழைகின்றது.

இந்நிறுவனம் ஆங்கில வழக்கறிஞர் பீட்டர் பென்சன் என்பவரின் முயற்சியால் உருவாக்கப்பட்டது. 1960 இல் இரண்டு போர்ச்சுக்கீசிய மாணவர்கள் லிஸ்பன் சிறையில் அடைக்கப்பட்டிருந்த போது பல துன்பங்களுக்கு ஆளாயினர். எனவே பீட்டர் பென்சன் தன் துணைவர்களான எரிக்பேக்கர், லூயி கூப்பர் ஆகியோரின் உதவியுடன் செயல்பட்டார். அதன் முதல் ...

...ம் கைதிகளின் நலனுக்காக செயல்பட வேண்டுமெனக் கூறப்பட்டது. ...நிறுவனம் சுமார் 156 நாடுகளைச் சேர்ந்த பலதரப்பட்ட கைதிகளின் ...னுக்காகச் செயல்பட்டது. இந்நிறுவனத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:

...நோக்கம்

எத்தகைய முறையற்ற வன்முறைச் செயல்களிலும் ஈடுபடாமல் ...முடைய சமூக, அரசியல் மற்றும் சமய நோக்கங்களை ...றைவேற்றினமைக்காக சிறைப்பட்ட கைதிகளை விடுவித்தல்.

சிறைச்சாலையில் கைதிகள் சித்ரவதைக்கு உள்ளாக்கப்படல், ...னிதத்தன்மையின்றி நடத்தப்படல், பெண் கைதிகளைக் ...கொடுமைப்படுத்துதல், மரணதண்டனை ஆகியவற்றை எதிர்க்கப் ...படுபடுதல்.

அரசியல் கைதிகளின் விசாரணைகளை விரைவாக முடித்துத் தீர்ப்பு வழங்கச் செய்வது இதன் தலையாய நோக்கமாகும்.

## உறுப்பினர்கள்

எழுத்தாளர்கள், மருத்துவர்கள், அரசுப் பணியாளர்கள், பெண் உரிமை பேணுபவர்கள், பள்ளி மாணவர்கள், முதியோர்கள் போன்ற பலரும் இதில் உறுப்பினர்களாக உள்ளனர். அவர்களனைவரின் நோக்கம் ஒன்றேயாகும். மனித உரிமைகளைப் பாதுகாத்து அவர்களுக்கு வாழ்வளிக்க அரசுகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன. இவ்வமைப்புக்கு உலகம் முழுவதிலும் சுமார் 4200 கூட்டுக் குழுக்கள் உள்ளன.

## தலைமையிடம் மற்றும் செயல்முறை

இலண்டன் மாநகரம் இதன் தலைமையகத்தைக் கொண்டுள்ளது. இப்பன்னாட்டு அவைக்கான பிரதிநிதிகளை 45 நாடுகள் அனுப்புகின்றன. இங்குதான் செயல் திட்டம் தீட்டப்பட்டு, கொள்கை முடிவு எடுக்கப்படுகிறது. இதன் செயற்குழு ஒரு ஆண்டில் நான்கு முறை கூடி செயல்களை மதிப்பிடுகின்றது. தலைமைச் செயலரின் கீழ் இவ்வமைப்பு இயங்குகின்றது.

**செயல்கள்**

உலகளவில் சிறைக் கைதிகளின் உரிமைகளைப் பாதுகாப்பதில் இது கவனம் செலுத்துகின்றது. தேவையான முறையான தகவல்களைத் திரட்டுகின்றது. அதிகாரப்பூர்வமான தகவல்களைப் பெற ஒவ்வொரு நாட்டிற்கும் தேவையான குழுக்களை அனுப்புகின்றது. அவை நேரடியாகவும், பேட்டிகள் வாயிலாகவும் தகவல்களைச் சேகரிக்கின்றன. சேகரிக்கப்பட்ட தகவல்கள் மக்களுக்குத் தெரிவிக்கப்படும். கணக்கெடுப்புகளின் வாயிலாக துருக்கி, ஈரான், லிபியா, பாகிஸ்தான், சிலி போன்ற நாடுகளில் உரிமை மீறல் மிகுதி எனக் கூறப்பட்டுள்ளது. 1996 செப்டம்பரில் ஆப்கானியத் தலைவர்கள் தீவிரவாதிகளால் தூக்கிலிடப்பட்டதையும் பின்னர் பிணங்கள் இஸ்லாமிய முறைப்படி அடக்கம் செய்யப்படாமையையும் இது கண்டித்தது. 1998இல் கிரேக்க நாட்டில் காவல் நிலையத்தில் கைதிகளுக்கு மின்சார அதிர்வு கொடுத்ததைக் கண்டித்தது. 1995இல் பஹ்ரைன் நாட்டில் பாதுகாப்புக் காவலர்கள் இஸ்லாமியப் பள்ளிகளிலும் வீடுகளிலும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசிக் கொன்றது போன்றவற்றிற்கு எதிராக சர்வதேச பொது மன்னிப்பு நிறுவனம் தன்னுடைய எதிர்ப்பைத் தெரிவித்தது. உலகப் பெண்கள் மாநாடு 1995 இல் கூடியபோது பெண்கள் உரிமை பற்றி வலியுறுத்தியது. ஐக்கிய நாட்டவையின் அங்கீகரிக்கப்பட்ட கோட்பாடுகளின்படியான முறைப்படி விசாரணை, மரண தண்டனை போன்றவற்றைப் பற்றிய கருத்துக்களைக் கூறுகின்றது. பாகிஸ்தானில் பல நேரங்களில் மேற்கொள்ளப்பட்ட உரிமை மீறல்களைத் தடுக்க வகை செய்தது. 1983 முதல் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை பற்றிய தன்னுடைய கருத்துக்களை வலியுறுத்தியது. உலகளாவிய நிலையில் பொது மன்னிப்பு நிறுவனம் முறைகேடுகள் பலவற்றைக் களைய முயல்கின்றது.

**இந்தியா**

இந்தியா விடுதலையடைந்தபின் படிப்படியாக மனித உரிமை மீறல்கள் மிகுந்தன. அதனால் பொது மன்னிப்பு நிறுவனம் இந்தியாவில் தனது பணிகளை ஆற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தியப் பிரதமராக

...காந்தி பொறுப்பேற்ற பின்னர் பற்பல நிகழ்வுகள் நடந்தேறின. ...வை உரிமை மீறல்கள் சார்ந்திருந்தன. 1974இல் மேற்கு ...காளத்தில் நக்சலைட்டுகள் சிறைப்படுத்தப்பட்டபோது ஏற்பட்ட சிக்கலில் ...அமைப்பு தலையிட்டது. 1975இல் இந்தியாவின் நெருக்கடி நிலை ...படுத்தப்பட்டபோது ஏற்பட்ட கைதுகள் பற்றிய சிக்கல்களை ...அமைப்பு நீக்கியது. 1978இல் கொல்கத்தாவிலும், ஹைதராபாத்திலும் ...க்கும் சிறைச்சாலைகளைப் பார்வையிட்டு கைதிகள் எவ்வாறு ...தப்பட வேண்டுமென்று இந்திய அரசுக்கு அறிவுரை வழங்கியது. ...80-81 ஆகிய ஆண்டுகளில் மேற்கு வங்காளம், உத்திரப்பிரதேசம், ...த்தியப் பிரதேசம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில் சிறைக் கைதிகள் எவ்வாறு நடத்தப்பட வேண்டுமெனக் கூறியது. 1984இல் இந்திரா காந்தி கொல்லப்பட்டதால் பதிலுக்கு ஏராளமான சீக்கியர்கள் கொல்லப்பட்டனர். எண்ணற்றோர் தேசியப் பாதுகாப்புச் சட்டப்படி சிறையில் அடைக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டனர். வடகிழக்கு மாநிலங்களில் பாதுகாப்புப் படையினர் பெண்களைக் கொடுமைப்படுத்தியதைக் கண்டித்தது. இவ்வாறு பலநிலைகளில் உரிமை மீறல்களைக் கண்டிக்கும் அமைப்பாக பொதுமன்னிப்பு நிறுவனம் இயங்குகின்றது.

**செயல்முறைகள்**

பன்னாட்டுப் பொது மன்னிப்பு நிறுவனம் மிக உன்னிப்பாக உரிமை மீறல்களைக் கண்டாய்ந்த பின்னரே திட்டவட்டமான முடிவுகளை அறிவிக்கின்றது. இலண்டனில் உள்ள தலைமையகம் பலவழிகளில் தேவைப்படும் தகவல்களை முறைப்படி சேகரிக்கின்றது. அச்செய்திகளின் உண்மைத் தன்மைகளைக் கண்டறிய பல சான்றுகளைப் பயன்படுத்துகின்றது. பிரிவினரும் நேரடித் தொடர்பு கொண்டு, அரசுகளுடன் கலந்தாலோசித்து முடிவுகளை அறிவிக்கின்றது.

பன்னாட்டுப் பொது மன்னிப்பு நிறுவனமானது பெயருக்கேற்ப பொது நிறுவனமாக இயங்குகின்றது. பல செயல்திட்டங்களின் வாயிலாகவும், தீர்மானிக்கப்பட்ட முடிவுகளின் வாயிலாகவும் சர்வதேச மனித உரிமை மீறல்கள் அறிவிக்கப்படுகின்றன. குழுக்களும் மற்றும்

# 25

## மனித உரிமை ஊடகங்களும் சுற்றுச்சூழலும்

## (Human Rights - Media and environment)

இந்திய அரசியலமைப்பின் விதி 19(1) கருத்து வெளியிடும் உரிமை மற்றும் பேச்சுரிமையை வழங்குகிறது. அதைப்போல அனைத்துலக மனித உரிமைப் பிரகடனம் தனது 19ஆம் விதிப்படி கருத்து சுதந்திரமும் ஊடகங்கள் வாயிலாகச் செய்தி வெளியிடவும் உரிமை தந்துள்ளது. இவை எல்லாம் மனித உரிமையைப் பாதுகாக்கின்றன.

பத்திரிக்கைகளின் தலையங்கங்கள், கட்டுரைகள், கருத்துப் படங்கள் போன்றவற்றின் வாயிலாக உரிமைகளைப் பற்றிய செய்திகளை வெளியிடலாம். அரசின் செயல்கள் ஊன்றிக் கவனிக்கப்பட்டு உரிமை மீறல்கள் தடுக்கப்பட வகை செய்யப்படுகின்றது. ஒரு செயலில் ஏற்படக்கூடிய சிக்கல்களை ஊடகங்கள் முன் கூட்டியே தெரிவிக்கின்றன. அரசியல் மாற்றங்களை உருவாக்க அரசியல் மாற்றங்களையும் சுட்டிக் காட்டுகின்றது. தற்காலத்தில் மின் அணு சார்ந்த ஊடகங்கள் வலுப்பெற்றுள்ளன. தொலைக்காட்சி, தகவல்வலை, கணினி போன்றவை உரிமை மீறல் பற்றிய செய்திகளை எளிதில் உடனுக்குடன் அறிந்து கொள்ள உதவுகின்றது.

உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்திகள் மக்களிடையே தாக்கத்தையும் விழிப்புணர்வையும் உண்டாக்குகின்றன. அனைத்து ஊடகங்களும் குழந்தைகள், பெண்கள், நலிவுற்ற பிரிவினர், ஏழை எளியோர் ஆகியோரின் உரிமை மீறல்களைப் பற்றிக் கூறுகின்றன. ஏராளமான சர்வதேச பத்திரிக்கைகளும் உரிமை மீறல்களைப் பற்றித் தெளிவாகச் செய்தி வெளியிடுகின்றன. நியூயார்க் டைம்ஸ், (அமெரிக்கா) சண்டே டைம்ஸ் (இங்கிலாந்து), ரெட்பிளாக் (சீனா), டொராண்டோ ஸ்டார் (கனடா), மார்னிங் நியூஸ் (ஸ்ரீலங்கா) போன்றவற்றை சான்றுகளாகக் கூறலாம். இவற்றைப் போன்றே இந்தியாவில் பல வட்டார மொழிப் பத்திரிக்கைகள் உள்ளன. பத்திரிக்கை சுதந்திரத்தைப் பாதுகாக்க அரசு பல வழிகளைப் பின்பற்ற வேண்டும். பத்திரிக்கைகளை அவமதிப்பதும், அதற்குத் துயரங்கள் தருவதும் தவிர்க்கப்பட வேண்டும். சீனா, பிரேசில், அல்பேனியா, துருக்கி போன்ற நாடுகளில் பத்திரிக்கையாளர்கள் முறைகேடாக நடத்தப்பட்டு அவர்கள் உரிமைகள் பாதிக்கப்பட்டதற்கான வரலாற்றுச் சான்றுகள் உண்டு. இந்தியாவில் 1975இல் நெருக்கடி நிலை பிரகடனத்தில் பத்திரிக்கைகள் பெரிதும் பாதிப்பிற்கு உள்ளாயின. தணிக்கை என்ற பெயரில் அவர்களுடைய உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டன.

தமிழகத்தில் தராசு, நக்கீரன், தினகரன், தினமலர் போன்ற பத்திரிக்கைகள் தாக்கப்பட்டு அவற்றின் உரிமைகள் கட்டுப்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. எனவே அத்தகைய மீறல்கள் கட்டுப்படுத்தப்பட்டு பத்திக்கைகளின் உரிமைகள் காக்கப்பட வேண்டும். போஃபர்ஸ் ஊழல் பற்றிய விபரங்களை Hindu பத்திரிகை வெளியிட்டது. 1979இல் Express நிருபர் டெல்லி திஹார் சிறைச்சாலையைப் பற்றி நான்கு கட்டுரைகளை வெளியிட்டார். 1992இல் சிதம்பரம் காவல் நிலையத்தில் பல அநியாயங்கள் நடத்தப்பட்டு உரிமை மீறல்கள் நிகழ்த்தப்பட்டன. அதைப்போல சந்தனக் கடத்தல் வீரப்பனைப்

பொய்ச் செய்திகளால் உரிமை மீறல்கள் ஏற்பட்டன. இவையனைத்தும் உரிமை மீறலுக்கு ஆதாரமானவையாயிருப்பினும் உரிமை மீறல்களைப் பற்றி மக்கள் உணர்ந்து கொள்ள வாய்ப்பாயுள்ளன.

பத்திரிக்கைகளைப் போல, திரைப்படங்களும் பல உண்மைகளை மக்களுக்குக் காட்டும் கருவிகளாக உள்ளன. மனித உரிமை மீறல், அரசியல் சிக்கல்கள் போன்ற பல செய்திகளை அவை மையக் கருவாகக் கொண்டு செயல்படுகின்றன. அரசியல் சீர்திருத்தம், சமூக மேம்பாடு, சாதிக் கலவரங்கள், இனச் சிக்கல்கள், பொருளாதாரச் சுரண்டல், தீண்டாமை, கொத்தடிமை, பாலியல் மோதல்கள், பெண்களையும் குழந்தைகளையும் பற்றிய செய்திகள், காவல் துறையின் செயல்பாடுகள் போன்ற கருத்துக்கள் திரைப்படங்களால் வெளிப்படுத்தப்படுகின்றன. திரைப்படங்கள் மனித உரிமைகளையும் உரிமை மீறல்கள் போன்ற கருத்துக்களையும் மக்களுக்கு உணர்த்துகின்றன. அரசியல்வாதிகளின் உரிமை மீறல்களை பல படங்கள் சுட்டிக் காட்டுகின்றன. பெண்ணுரிமையைப் பற்றிய செய்திகளும் வெளியிடப்படுகின்றன. தொலைக்காட்சிச் செய்திகள், தொடர்கள், வானொலிச் செய்திகளின் வாயிலாக பல உரிமை மீறல்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. இவ்வாறு மனித உரிமைகள் மற்றும் உரிமை மீறல்களைப் பற்றி ஊடகங்கள் படம்பிடித்துக் காட்டும்போது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுகின்றது. இத்தகைய தகவல் அமைப்புகள் பாமர மக்களையும் மனித உரிமைகளைப் பற்றித் தெரிந்து கொள்ளச் செய்கின்றன. செய்தித்தாள்கள் தரும் செய்திகளை படித்தவர்கள் மட்டுமே படித்துத் தெரிந்து கொள்வர். ஆனால் திரைப்படம், தொலைக்காட்சி போன்றவை படிக்காத பாமர மக்களையும் கவர்ந்து பல செய்திகளைத் தெரிந்து கொள்ள வகை செய்கின்றன

இந்திய அரசியலமைப்பின் 42 -ஆம் சட்டத்திருத்தத்தின் …லாக இந்திய மக்களின் கடமைகள் என்ற 51-A பிரிவில் சுற்றுச்சூழல் …துகாப்பு மக்களின் கடமை எனக் கூறப்பட்டது. நீதிமன்றமானது, மனித …மைகள் பாதிக்கப்படும் போது தலையிட்டு நீதியை …லைநாட்டுகின்றது. தொழிற்சாலையிலிருந்து விஷ வாயு கசிந்து பரவி …ள் இறந்தபோது அவர்களுக்கு இழப்பீடு தர உத்தரவிட்டு சுற்றுச்சூழல் …துகாக்கப்பட வேண்டியதன் உரிமையையும் கடமையையும் சுட்டிக் …ட்டியது. இயற்கைச் சூழலைப் பேணிக் காப்பதில் அடிப்படை உரிமையின் …க்கியத்துவத்தை நாம் உணரவேண்டும். 1970-இல் சுற்றுச்சூழல் …துகாப்பு நிறுவனம் உருவாக்கப்பட்டது. சட்டத்தை மீறுவோர் யாவரும் தண்டனைக்குள்ளாவர் என்பதை அந்நிறுவனம் தெளிவுபடுத்தியது. சுற்றுச்சூழல் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பல சட்டங்கள் மனித உரிமைகளைப் பற்றியும் கடமைகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. சுற்றுச்சூழலைப் பாதுகாத்து அதன்மூலம் நல்வாழ்வைப் பெற அனைவருக்கும் உரிமையுண்டு என்பதன் மூலம் சுற்றுச்சூழலுக்கும் உரிமைகளுக்கும் இடையிலான தொடர்புகளை உணரலாம்.

- - -

# மனித உரிமை சார்ந்த இந்தியச் சட்டங்கள்

| எண் | ஆண்டு | சட்டத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | 1823 | உடன்கட்டை ஏறுதல் ஒழிப்புச் சட்டம் |
| 2. | 1856 | விதவை மறுமணச் சட்டம் |
| 3. | 1872 | பலதார மண ஒழிப்புச் சட்டம் |
| 4. | 1875 | பெண் சிசுக் கொலைத் தடுப்புச் சட்டம் |
| 5. | 1923 | தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம் |
| 6. | 1926 | தொழிற்சங்கச் சட்டம் |
| 7. | 1929 | குழந்தைத் திருமண தடைச் சட்டம் |
| 8. | 1933 | குழந்தைகளை ஈடுவைத்தல் தடைச் சட்டம் |
| 9. | 1936 | சம்பளச் சட்டம் |
| 10. | 1937 | வாழும் பெண்கள் சொத்துரிமைச் சட்டம் |
| 11. | 1942 | வாராந்திர விடுமுறைச் சட்டம் |
| 12. | 1946 | மணமான பெண்கள் தனித்து வாழ, பராமரித்துக் கொள்ளும் சட்டம். |
| 13. | 1946 | தொழில் நிறுவன வேலை நிலையாணைச் சட்டம். |
| 14. | 1947 | தொழில் தகராறுகள் சட்டம் |
| 15. | 1948 | தொழிற்சாலைகள் சட்டம் |
| 16. | 1948 | குறைந்த பட்ச சம்பளச் சட்டம் |
| 17. | 1948 | தொழிலாளர் காப்புறுதிச் சட்டம் |

| | |
|---|---|
| 1950 | சாதி இயலாமை நீக்கச் சட்டம் |
| 1952 | தொழிலாளர் பிராவிடண்ட் ஃபண்ட் மற்றும் பல்வகை நலச் சட்டம் |
| 1955 | இந்து திருமணச் சட்டம் |
| 1955 | வாழ்வுரிமை பாதுகாப்புச் சட்டம் |
| 1956 | இந்து வாரிசுச் சட்டம் |
| 1956 | இந்து தத்தெடுப்பு மற்றும் பராமரிப்புச் சட்டம் |
| 1956 | மனித வியாபார தடுப்புச் சட்டம் |
| 1956 | இளைஞர்களுக்கு தீங்கு விளைவிக்கும் வெளியீடுகள் தடைச் சட்டம் |
| 1960 | அநாதை மற்றும் தர்ம விடுதிகள் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டுச் சட்டம் |
| 1960 | குழந்தைகள் சட்டம் |
| 1961 | வரதட்சணை ஒழிப்புச் சட்டம் |
| 1961 | பயிற்சியாளர் சட்டம் |
| 1961 | தாய்மைப் பேறு நலன்கள் சட்டம் |
| 1966 | பீடி, சிகரெட் தொழிலாளர் வேலை நிபந்தனைகள் சட்டம் |
| 1971 | மருத்துவமுறையில் கருச்சிதைவுச் சட்டம் |
| 1976 | [illegible] |

| | | |
|---|---|---|
| 36. | 1986 | சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் |
| 37. | 1986 | பெண்களை முறையற்று விளம்பரப்படுத்தும் தடைச் சட்டம். |
| 38. | 1986 | முஸ்லீம்கள் மணவிலக்கு உரிமை பாதுகாப்புச் சட்டம் |
| 39. | 1986 | குழந்தைக் குற்றவாளிகள் நீதிச் சட்டம் |
| 40. | 1986 | முஸ்லீம் பெண்கள் உரிமைப் பாதுகாப்புத் திருமண ரத்துச் சட்டம். |
| 41. | 1987 | மனநலச் சட்டம் |
| 42. | 1989 | தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினருக்கு எதிரான வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம் |
| 43. | 1989 | இந்து வாரிசுரிமைச் சட்டம் (தமிழ்நாடு சீர்திருத்தம்) |
| 44. | 1993 | சார்க் மாநாட்டுத் தீவிரவாத தடுப்புச் சட்டம் |
| 45. | 1993 | மனிதக் கழிவு நீக்கும் சுகாதாரப் பணியாளர் மற்றும் காய்ந்த கழிவறை கட்டும் தடுப்புச் சட்டம் |
| 46. | 1994 | மனித உறுப்புகள் மாற்றுச் சட்டம். |
| 47. | 1994 | கருப்பையிலுள்ள குழந்தை ஆணா பெண்ணா என்பதைக் கண்டறிவதை முறைப்படுத்தும் மற்றும் தடைச் சட்டம் |
| 48. | 1997 | தமிழ்நாடு கேலி செய்தல் தடைச் சட்டம் |
| 49. | 1998 | தமிழ்நாடு பெண்களைக் கிண்டல் செய்தல் தடைச் சட்டம் |

| | | |
|---|---|---|
| 50. | 2000 | குழந்தைகள் இளம் நீதி (பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) 2000 சட்டம்: இந்தச் சட்டம் எந்த ஒரு அபாயகரமான வேலையில் அல்லது அடிமைத்தனமாக குழந்தையை வேலைக்கு அமர்த்துவது சிறை தண்டனைக்குரிய குற்றம் என வரையறுக்கிறது. |
| 51. | 2002 | சுதந்திரமாகச் செய்திகள் பெறும் சட்டம். |
| 52. | 2009 | அனைத்து குழந்தைகளுக்கும் இலவச மற்றும் கட்டாய கல்விச் சட்டம். இந்தச் சட்டம் 6 முதல் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிப்பதை உறுதி செய்கிறது. மேலும், ஒவ்வொரு தனியார் பள்ளியிலுள்ள இடங்களில் 25 சதவீதம் பின்தங்கிய வகுப்பு குழந்தைகள் மற்றும் உடல் சவால் உள்ள குழந்தைகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது. |

# பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
# அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
# பாலக்கோடு – 636 808.

## மனித உரிமைகள்

நாள் : .12..2020 மதிப்பெண் : 75

குறியீடு : **19UTASO2** நேரம் : 3 - மணித்துளி

### பகுதி - அ

**I.** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக? **15X1=15**

1. மனித உரிமைகள் யாருக்காக உருவாக்கப்பட்டது?
   அ) மனிதன் ஆ)விலங்கு இ)பறவை ஈ) மரம்
2. மனித உரிமையின் நோக்கம் யாது?
   அ)அதிகாரம் ஆ)நோக்கம் இ)சுதந்திரம் ஈ) அங்கிகாரம்
3. ஐ.நா.பொது சபை தொடங்கப்பட்ட ஆண்டு?
   அ) 1978 ஆ)1979 இ)1988 ஈ)1987
4. வாழ்வுரிமை என்பது என்ன?
   அ) குடிநீர் ஆ)உணவு இ)உடை ஈ)தொழில்
5. அரசியலமைப்பு சட்டத்தின் கட்டளைகள் எத்தனை?
   அ) 9 ஆ) 10 இ) 11 ஈ) 12
6. மாநில ஆணையத்தின் உரிமை பதிவி காலம் எவ்வளவு?
   அ) 6ஆண்டு ஆ) 5ஆண்டு இ) 7ஆண்டு ஈ) 4 ஆண்டு
7. மனித உரிமைக் கமிட்டிகள் அமைக்கப்பட்ட இடம்?
   அ) தமிழ்நாடு ஆ) ஆந்திரா இ) கேரளா ஈ)சிக்கம்
8. தடா சட்டம் எதற்கு உருவாக்கப்பட்டது?
   அ) கிராமம் ஆ)நகரம் இ) நகராட்சி ஈ)உள்ளாட்சி
9. கைது என்பது என்ன?
   அ) குற்றம் ஆ)சட்டம் இ)சுதந்திரம் ஈ)அதிகாரம்
10. பிணை (டீயடை) என்றால் என்ன?
    அ) விடுவித்தல் ஆ) விராசணை இ)காவல்நீடிப்பு ஈ)தண்டிப்பு
11. சட்டவியல் முன்னோடி யார்?
    அ) மதன்லால் ஆ) ஜான் ஆஸ்டின் இ)அம்பேத்கார் ஈ)இராஜராம்மேகன்ராய்
12. 1945 – ல் இயற்றப்பட்ட சட்டம் யாது?
    அ) ஐ.நா. சபை ஆ) உரிமைபிரகடனம் இ) உரிமை மறுப்புசட்டம் ஈ) அடிப்படை உரிமை சட்டம்
13. குழந்தைகள் உரிமைச் சட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு?
    அ)1924 ஆ)1925 இ)1926 ஈ)1927

14.1926 – ம் ஏற்படுத்தப்பட்ட உடன்பாடு யாது?
    அ)பொருளாதாரம் ஆ) கலாச்சாரம் இ)சொத்துக்கள் ஈ)பெண்ணிரிமை

15. இந்திய அரசியல் அமைப்பு சட்டத்தின் பிரிவுகள் எத்தனை?
    அ)30 ஆ)31 இ)32 ஈ)33

## பகுதி - ஆ

**II. எவையேனும் இரண்டு வினாக்கு விடையளி?** **2X5=10**

16. மனித உரிமை என்றால் என்ன? பொருள் விளக்கம் தருக?
17. கலாச்சார உரிமை பற்றி விளக்குக
18. கைதி, வாராண்ட் பற்றி விளக்குக?
19. சித்ரவதை, மனித தன்மையற்ற நடத்தை என்பதை பற்றி விளக்குக?
20. பெண்ணுரிமை பற்றி விளக்கம் தருக?

## பகுதி - இ

**III. அனைத்து வினாக்களுக்கும் விடையளி?** **5X10=50**

21. (அ) மனித உரிமை கோட்பாடு பற்றி கட்டுரைக்க?(அ)
    (ஆ) மனித உரிமைகளின் வகைகள் பற்றி விவரி?
22. (அ) மனிதி உரிமையின் வரலாறும், பண்புகளும் பற்றி விவரி?(அ)
    (ஆ) பண்ணாட்டு உடன்படிக்கை பற்றி விவரி?
23. (அ) மாநில உரிமை ஆணையம் பற்றி விவரி?(அ)
    (ஆ) மனித உரிமைகளின் சாசனங்கள் பற்றி கட்டுரைக்க?
24. (அ) இளம் குற்றவாளிகள், கொத்தடிமைகள் பற்றி கட்டுரைக்க?(அ)
    (ஆ) இனப்பாகுபாடு ஒழிப்புக்கான பன்னாட்டு உடன்படிக்கை பற்றி விளக்குக
25. (அ) பெண்களின் சமகால பிரச்சனைகள் பற்றி விவரி,(அ)
    (ஆ) மனித உரிமை மற்றும் சுற்றுச்சூழல் பற்றி விவரி